உதயன்

26 பக்கங்கள்

விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 075 வள்ளுவர் ஆண்டு 2044 தை 27 சனிக்கிழமை (09/02/2013) UTHAYAN - A Lively National Tamil Daily

# இந்தியாவில் மஹிந்தவுக்கு கடும் எதிர்ப்பு

## ஆர்ப்பாட்டங்களால் அதிர்ந்தது தமிழகம்; வைகோ படையணி கைது

சென்னை, பெப்.9

இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக நேற்று மாபெரும் போராட்டங்கள் வெடித்தன. இவ்வாறு பெரும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமது பாரியார் மற்றும் 70 பேர் கொண்ட பரிவாரங்களுடன் நேற்று பகல் விமானம் மூலம் பீஹார் மாநிலத்திலுள்ள புத்தகாயாவைச் சென்றடைந்தார்.

தமிழகத்தில் மட்டுமன்றி, இந்தியாவின் ஏனைய மாநிலங்களிலும் தொடர் போராட்டங்கள் வெடித்தன. அதை விட ஒருபடி மேலாக ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தலைமையிலான ஆர்ப்பாட்டக்காரர்கள் டில்லியிலுள்ள பிரதமரின் வீட்டை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தியதால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

நிலைமை கட்டுமீறிச் செல்வதை அவதானித்த பொலிஸார் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ உள்ளிட்ட ஆயிரக்கணக்கான ம.தி.மு.க. வினரைக் கைது செய்தனர்.

அத்துடன், ஜனாதிபதி மஹிந்தவின் உருவப் பொம்மையை தீ வைத்துக் கொளுத்தி

பார்க்க பக்கம் 04

### டில்லியைத் தவிர்த்தார் மஹிந்த



புதுடில்லி, பெப்.9

இந்திய உளவுத்துறை எச்சரிக்கையைத் தொடர்ந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்தியப் பயண நிகழ்ச்சிநிரல் கடைசி நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டது. அதன்படி அவரது டில்லிப் பயணம் தவிர்க்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பார்க்க பக்கம் 04

**பெண்களை தொட்டால் 'ஷாக்' அடிக்கும்.**
இந்தியாவில் அதிகரித்து வரும் பாலியல் தொல்லைகளில்... 08

**சாதாரண மனிதனைப் போலவே நடமாடுகிறேன்.**
பாகிஸ்தானில் ஒரு சாதாரண மனிதனைப் போலவே நடமாடி... 09

**அக்கரைப்பற்றில் இராட்சத திருக்கை மீன்.**
அக்கரைப்பற்று கடல் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம்.... 17

**ஆஸி. அபார வெற்றி.**
அவுஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்திய... 23

# இலங்கையின் மீது பொருளாதாரத் தடை

## விதிக்கக் கோருகிறார் ஜெயலலிதா

சென்னை, பெப்ரவரி 9

ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவுள்ள பிரேரணை ஒருபுறமிருக்க, இந்தியாவும் அவ்வாறானதொரு பிரேரணையைக் கொண்டுவந்து ஏனைய நாடுகளின் ஆதரவுடன் அதை நிறைவேற்ற வேண்டும் என்றும் இலங்கை அரசு மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் எனவும் தமிழக முதல்வர் ஜெயலலிதா இந்திய மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், இனப்படுகொலையை நிகழ்த்தி போர்க்குற்றம் புரிந்தவர்களை போர்க்குற்றவாளிகள்

பார்க்க பக்கம் 04



"கடந்த முறை பிரேரணையை ஆதரிப்பது பற்றி எதுவும் தெரிவிக்காத இந்திய அரசு, எனது தொடர் வலியுறுத்தல் காரணமாக பின்னர் பிரேரணையை ஆதரித்து வாக்களித்தது. இருப்பினும், அந்தப் பிரேரணையை வலுவிழக்கச் செய்தவர் பாரதப் பிரதமராவார்."

### இந்தியாவில் இலங்கையருக்கு பாதுகாப்பு வழங்குங்கள்

சென்னை, பெப் 9

சென்னையில் உள்ள இலங்கை வங்கிக் கிளை மீதான தாக்குதலைத் தொடர்ந்து, இந்தியாவில் வசித்துவருகின்ற இலங்கையர்களுக்கும் இலங்கை நிறுவனங்களுக்கும் பாதுகாப்பு வழங்குமாறு புதுடில்லியிடம், இலங்கை அரசு நேற்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தியாவில் வசித்துவருகின்ற இலங்கையர்களுக்கும் மற்றும் மஹாபோதி சமூகம், இலங்கை எயார்லைன்ஸ் போன்ற இலங்கை நிறுவனங்களுக்கும் இந்திய அரசு பாதுகாப்பு வழங்க வேண்டுமென்று புதுடில்லியிலுள்ள இலங்கை தூதரகம் கேட்க வேண்டுமென இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

இலங்கை வெளிவிவகார

பார்க்க பக்கம் 04

### ஜனாதிபதி தலைமையில் அபிவிருத்திக் கூட்டம்


யாழ்ப்பாணம், பெப்.9

யாழ்.மாவட்டத்தின் விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை இடம்பெறவுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

இரண்டு நாள் பயணமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளார்.

12ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ரில்கோ ஹோட்டலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் யாழ்.மாவட்ட விசேட அபிவிருத்திக்கூட்டம் நடைபெறவுள்ளது.

பார்க்க பக்கம் 04



கடுமையான பாதுகாப்புக்கு மத்தியில் பீகார் மாநிலத்தில் உள்ள பௌத்த வழிபாட்டுத் தலமான புத்தகாயாவுக்கு நேற்றுப் பயணம் செய்த ஜனாதிபதி அங்கு வழிபாட்டில் ஈடுபட்டார்.

### மதம், அரசியல் கருத்துக்களை பரப்புவோர் பயங்கரவாதிகள்

#### நாடாளுமன்றில் அரசு வரைவிலக்கணம்

கொழும்பு, பெப்.9

'பயங்கரவாதி' என்றால் யார்? 'பயங்கரவாதச் செயல்' என்றால் என்ன? என்பதற்கான வரைவிலக்கணத்தை அரசு நேற்று நாடாளுமன்றில் வெளியிட்டது.

மதம் மற்றும் அரசியல் கருத்துகளைப் பரப்பும் நோக்கில் செயற்படுவதுகூட பயங்கரவாதச் செயலே என்று அரசு தனது வரைவிலக்கணத்தில் உள்ளடக்கியுள்ளது.

அதன் முழு விபரம் வருமாறு:-

'பயங்கரவாதி':-

(அ) பயங்கரவாதச் செயலொன்றை நேரடியாகவோ

பார்க்க பக்கம் 04

### இளம் எம்.பிக்கள் குழு திங்கள் யாழ். வருகை

யாழ்ப்பாணம், பெப்.9

இலங்கையின் இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடங்கிய குழுவினர் நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகின்றனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருவதற்கு முன்னோடியாகவே இந்த இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு யாழ்.மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளது.

இலங்கை நாடாளுமன்றத்தில் 40 வயதுக்கு உட்பட்ட அரச மற்றும் எதிர்க்கட்சிகளை உள்ள

பார்க்க பக்கம் 04

### நவிப்பிள்ளை அறிக்கையை நிராகரித்தது இலங்கை அரசு

கொழும்பு, பெப்.9

இலங்கையின் நிலைவரங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையாரால் அனுப்பப்பட்ட அறிக்கையைத் திட்டவட்டமாக நிராகரிப்பதாக இலங்கை அரசு அறிவித்திருக்கிறது.

இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சு, இலங்கை நிலைவரங்கள் குறித்தான ஐ.நா.வின் கணிப்பீடு தவறானதென்றும் சாடியிருக்கின்றது.

ஜெனிவாவில் அடுத்த மாதம்

பார்க்க பக்கம் 04

### நாவற்குழியில் சிங்களவர் சுரேஷ் எம்.பியுடன் முறுகல்

யாழ்ப்பாணம், பெப்.9

தமிழ் மக்கள் வாழ்ந்த காணிகளில் நீங்கள் எவ்வாறு குடியேறினீர்கள்? யாருடைய அனுமதியைப் பெற்று இங்கு நீங்கள் வீடமைக்கிறீர்கள்? உங்களுக்கு முன்னர் எங்கு காணி இருந்ததோ அங்கு செல்ல வேண்டியது தானே, ஏன் இங்கு இருக்கிறீர்கள்?

நாவற்குழியில் தங்கியுள்ள சிங்கள மக்களைப் பார்த்து இப்படிக் கேள்வி எழுப்பினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

நாவற்குழியில் உள்ள வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் தங்கியுள்ள தமிழ்க் குடும்பங்களைச் சந்திப்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ்

பார்க்க பக்கம் 04

# நெற்கதிர்களையும் திருடும் கும்பல்



யாழ்ப்பாணம்,பெப்.9

கல்வியங்காடு புதிய செம்மணி வீதியின் கொட்டிலடிப் பகுதியில் உள்ள வயல்களில் கடந்த சில தினங்களாக திருடர்களின் கைவரிசை அதிகரித்துள்ளதாக விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதியில் உள்ள வயல்களில் அறுவடைக்குத் தயார் நிலையில் காணப்படும் நெற்கதிர்களைத் திருடர்கள் இரவு வேளையில் வெட்டிச் செல்வதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

அறுவடைக்குத் தயாரான நிலையில் நெற்பயிர்கள் இருந்த வேளை பெய்த மழையினால் வயல்களில் வெள்ளம் தேங்கியுள்ளது. இதனால் அறுவடைப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அதனைச் சாதகமாக பயன்படுத்தித் திருடர்கள் இரவில் வயல்களில் இறங்கி நெற்பயிர்களை வெட்டிச் செல்கின்றனர்.

ஏற்கனவே மழையின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட கொட்டிலடிப் பகுதியில் எஞ்சிய பயிரையும் திருடர்கள் திருடிச் செல்வதால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கவலை தெரிவித்தனர். (த-17)

## சிறுவர்கள் மீது துன்புறுத்தல்

# காந்தி இல்லத்தின் அதிகாரிகளை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு

## இதுவரை எவரும் கைதாகவில்லை

கிளிநொச்சி, பெப்.09

கிளிநொச்சி காந்தி சிறுவர் இல்லத்தில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக பராமரிக்கப்பட்டு வந்த சிறுவர்களைத் துன்புறுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டு சந்தேகநபர்களைக் கைது செய்து மன்றில் முன்னிலைப்படுத்துமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

பெற்றோர், பாதுகாவலர்கள் அற்ற நிலையில் நீதிமன்றினால் அடையாளப்படுத்தப்பட்ட குழந்தைகள் கிளிநொச்சி உருத்திரபுரத்தில் அமைந்துள்ள காந்தி நிலையத்தில் வைத்துப் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த ஜனவரி மாதம் 24 ஆம் திகதி இரவு குறித்த சிறுவர் இல்லத்தில் இருந்த 13 வரையிலான சிறுவர்கள் அங்குள்ள அதிகாரிகளால் அடித்துத் துன்புறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டு, கிளிநொச்சி பொலிஸ் ஊடாக கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் வழக்கொன்று பதிவு செய்யப்பட்டது.

சம்பவத்தை அறிந்து சிறுவர் இல்லத்துக்குச் சென்ற சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள், சம்பவம் தொடர்பாக ஜனவரி 29ஆம் திகதி விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

குறித்த முறைப்பாட்டைப் பரிசீலனை செய்த கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிவான் இ.மு. வகாப்தீன், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை எதிர்வரும் 15ஆம் திகதி மன்றில் முன்னிலையாகி விளக்கமளிக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை இரவு மேற்படி இல்லத்தில் நடைபெற்ற சம்பவங்களை வெளியாருக்குத் தெரியப்படுத்தினான் என்று கூறி, சிறுவன் ஒருவன் மீண்டும் துன்புறுத்தப்பட்டு அன்றிரவு 8.30 மணிக்கு வெளியேற்றப்பட்டுள்ளான். இந்தச் சம்பவம் குறித்தும் பாதிக்கப்பட்ட சிறுவன், சிறுவர் நன்னடத்தை அதிகாரிக்குத் தெரியப்படுத்தியுள்ளான்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட சிறுவன் கடந்த 05ஆம் திகதி நீதிவான் இ.மு.வகாப்தீன் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டான்.

இதன்போது 'காந்தி சிறுவர் இல்லத்தில் நான் நீதிமன்றின் உத்தரவுக்கு அமைவாகச் சேர்க்கப்பட்டேன். கடந்த சனிக்கிழமை இல்லப் பராமரிப்பாளர்கள் என்னைத் தாக்கி அச்சுறுத்தினர். என்னைப்போலவே ஏனைய சிறுவர்களும் பாதிக்கப்பட்டு தற்கொலை செய்யும் நிலையில் உள்ளனர்' என மன்றுக்குத் தெரிவித்தான்.

சிறுவனின் வாக்குமூலத்தைக் கவனத்தில் கொண்டு சிறுவர் இல்லத்தில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டு சந்தேகநபர்களைக் கைது செய்து மன்றில் முன்னிலைப்படுத்துமாறு நீதிபதி கிளிநொச்சி பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரிக்குப் பணித்தார்.

அத்துடன் இந்தக் கட்டளையின் பிரதியை கிளிநொச்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் உரிய நடவடிக்கைக்கு அனுப்பி வைக்குமாறும் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்றுவரை எவரும் பொலிஸாரால் கைது செய்யப்படவில்லை. (ஐ-6)

## அதிபர் இடமாற்றம் நிறுத்தப்பட்டது

யாழ்ப்பாணம்,பெப்.9

யாழ்.பொஸ்கோ ஆரம்பப் பாடசாலை அதிபரது தற்காலிக இடமாற்றம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. அவர் தொடர்ந்தும் அதே பாடசாலையில் பணியாற்றுவார் என்று வடமாகாண கல்வி அமைச்சின் செயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

அந்தப் பாடசாலையில் அண்மையில் நடந்த சம்பவம் தொடர்பாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளும் பொருட்டு அதிபரை தற்காலிகமாக யாழ்.கல்வி வலயத்துக்கு இடமாற்றம் செய்து அது தொடர்பான கடிதமும் அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. எனினும் பின்னர் இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்து கடிதம் வாபஸ் பெறப்பட்டது என்று செயலர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)



யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மைய மாணவர்களின் புகைப்படக் கண்காட்சி யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட முன்றலிலும், நூலக முன்றலிலும் இடம் பெற்றது. இதனைப் பெரும் எண்ணிக்கையானோர் பார்வையிட்டனர். (நா)

## இந்திய மீனவர்கள் அத்துமீறலைக் கண்டித்து

# மன்னாரில் ஆரம்பித்த நடைபவனி நேற்று வடமராட்சியில் நிறைவு

யாழ்ப்பாணம், பெப். 9

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து, கடந்த ஜனவரி மாதம் 27 ஆம் திகதி மன்னார் மாவட்டத்தில் ஆரம்பமான நடைபவனி, வடமராட்சி கிழக்கில் நேற்று நிறைவடைந்தது.

இந்திய மீனவர்களின் அத்துமீறல் காரணமாக மீன் வளம் பெரிய அளவில் அழிக்கப்படுவதைக் கண்டித்துப் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட நடைபவனி கடந்த ஜனவரி மாதம் 27 ஆம் திகதி மன்னார் முள்ளிக்குளத்தில் ஆரம்பமானது.

மன்னாரில் ஆரம்பமான பேரணி, 11 ஆவது நாளான நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது.

காரைநகர், சுழிபுரம், திருவடிநிலை, மாதகல், கீரிமலை வரையில் வந்தடைந்த பேரணி பின்னர் உயர் பாதுகாப்பு வலயத்தினூடாகச் சென்றது. மயிலிட்டி, ஊறணி, காங்கேசன்துறை, பலாலி ஊடாகச் சென்று நேற்றுமுன்தினம் மாலை தொண்டமானாறைச் சென்றடைந்தது. நேற்றுக் காலை தொண்டமானாறில் ஆரம்பமான பேரணி, பருத்தித்துறை ஊடாகச் சென்று வடமராட்சி கிழக்கைச் சென்றடைந்தது.

நடைப்பயணத்தைத் தனிநபராக மேற்கொள்ளும், போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்பின் தலைவர் வி.சகாதேவன் பருத்தித்துறை முனைப் பகுதியில் மீனவ சங்கங்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

அத்துடன் மயிலிட்டி, காங்கேசன்துறை, பலாலியைச் சேர்ந்த மக்கள் பருத்தித்துறையில் வைத்து வி.சகாதேவனுக்கு உற்சாகமான வரவேற்பளித்தனர்.

இந்த நடைப்பயணம் வெற்றிபெற வடமாகாண கடற்றொழிலாளர்களின் சார்பில் நன்றியைத் தெரிவிப்பதாக வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் சி.தவரட்ணம் தெரிவித்தார். அத்துடன் உயர்பாதுகாப்பு வலயத்தினூடாக நடை பயணம் மேற்கொள்ள அனுமதித்த யாழ்.மாவட்ட இராணுவத் தளபதிக்கும் நன்றியைத் தெரிவிப்பதாக தவரட்ணம் மேலும் குறிப்பிட்டார். (ஐ-5-8)

# நாவற்குழியில் சிங்களவரின் வீடமைப்புக்கு பிரதேச சபையின் அனுமதி பெறாதமை ஏன்?

## வீடமைப்பு அதிகார சபையிடம் விளக்கம் கேட்டுக் கடிதம்

யாழ்ப்பாணம், பெப். 9

நாவற்குழியில் பிரதேச சபையின் அனுமதியின்றி, தேசிய வீடமைப்பு அதிகார சபையின் காணிகளில் சிங்கள மக்களால் நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைக்குப் பிரதேச சபையின் அனுமதி பெறப்படாமைக்கு விளக்கம் கோரி தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வாறு சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் க.துரைராசா தெரிவித்தார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் யாழ்ப்பாணத்தில் குடியேறும் நோக்குடன் 54 சிங்களக் குடும்பங்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்தன. ஆரம்பத்தில் யாழ். ரயில் நிலையத்தில் தங்கியிருந்த அவர்கள் பின்னர் நாவற்குழியிலுள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபையின் காணியில் அத்துமீறிக் குடியமர்ந்தனர்.

ஆரம்பத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் காணியில் தற்காலிகக் கொட்டில்கள் அமைத்திருந்த அந்த மக்கள் கடந்த வருட இறுதியிலிருந்து நிரந்தர வீடுகள் அமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அரச காணியிலும் சரி, தனியார் காணிகளிலும் சரி எந்தவொரு கட்டடங்களை அமைப்பதாயினும் அதற்கு அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள பிரதேச சபைகளின் அனுமதி பெறப்படுவது கட்டாயமானதாகும்.

ஆயினும் நாவற்குழியிலுள்ள சிங்கள மக்கள் சாவகச்சேரி பிரதேச சபையின் எந்த விதமான அனுமதியையும் பெறாமல் தமக்கான நிரந்தர வீடுகள் அமைக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குடிதண்ணீர்த் தாங்கி, பொதுநோக்கு மண்டபம் என்பன அனுமதி பெறாமல் அங்கு ஏற்கனவே அமைத்து முடிக்கப்பட்டுள்ளன. அத்துடன் 20 வீடுகள் சுவர் எழுப்பப்பட்ட நிலையிலும், 40 வீடுகள் அத்திபாரம் வெட்டப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றன.

இதுதொடர்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் க.துரைராசா மேற்படி விடயம் தொடர்பில் ஆராய்வதாகச் சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், பிரதேச சபையின் அனுமதி பெறாமல் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றமை தொடர்பில் விளக்கம் கேட்டுத் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகத் தவிசாளர் இப்போது கூறினார். (த-5)

# மண்டைதீவு, இறுப்பிட்டிக்கு 15 ஆம் திகதி முதல் மின்சாரம்

யாழ்ப்பாணம்,பெப்.9

மண்டைதீவு, புங்குடுதீவு, இறுப்பிட்டி ஆகிய பிரதேசங்களுக்கான மின்சார விநியோகம் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்படும் என்று மின்சார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அன்று பி.ப. 3 மணிக்கு இறுப்பிட்டி பிரதேசத்திலும் தொடர்ந்து பி.ப.4 மணிக்கு மண்டைதீவிலும் மின்சார விநியோகத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு இடம் பெறும்.

தற்போது இந்தப் பிரதேசங்களுக்கு மின்சாரத்தை விநியோகிப்பதற்கான பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

ஏற்கனவே புதிய மின்கம்பங்கள் நாட்டப்பட்டு மின்சார இணைப்பு பணிகளும் நிறைவடைந்துள்ளன. (த-17)

## முதலாம் காலாண்டு மருந்து வகைகள் எடுத்து வருவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ். மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு இந்த ஆண்டின் முதலாம் காலாண்டுக்கான மருந்து வகைகளை எடுத்து வரும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

வாகனங்கள் மூலம் எடுத்து வரப்படும் இந்த மருந்துப் பொருள்கள் பெரும்பாலான அரசினர் வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டிருப்பதாக சுகாதார சேவைகள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, கடந்த டிசெம்பர் மாதத்துக்கான திரிபோஷா சத்துணவு மாபைக்கற்றுகளும் எடுத்து வரப்பட்டுள்ளன.

ஜனவரி மாதத்துக்கான திரிபோஷா சத்துணவு பைக்கற்றுகள் அடுத்துவரும் நாள்களில் எடுத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் கூறப்பட்டது. (ம-17)



டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களும் சாவகச்சேரி ஓட்டோ சங்கத்தினரும் இணைந்து நேற்று சாவகச்சேரி வைத்தியசாலை வளாகத்தில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர். வைத்தியசாலை பொலிஸ் பிரிவின் உத்தியோகத்தர் ரூவானின் ஏற்பாட்டில் பொலிஸ் நிலைய சிவில் பாதுகாப்பு குழு பொறுப்பதிகாரி இந்திரசிறி தலைமையிலான பொலிஸ் குழுவினர், ஓட்டோ சங்கப் பிரதிநிதிகள், வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோரும் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (ம-9)

## மண்டைதீவு பிரதேசத்தில் அரசினர் வைத்தியசாலை

யாழ்ப்பாணம், பெப்.9

மண்டைதீவு பிரதேசத்தில் புதிதாக அரசினர் வைத்தியசாலை ஒன்றை அமைப்பதற்குச் சுகாதார சேவைகள் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இந்தப் பிரதேசத்தில் ஏற்கனவே இருந்த அரசினர் வைத்தியசாலை கடந்த காலப் போரால் அழிவடைந்த நிலையில் உள்ளது.

இந்த வைத்தியசாலைக் கட்டடம் அமைந்திருந்த பகுதியில் மீண்டும் புதிதாக வைத்தியசாலை ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்துக்கென தனியான வைத்தியசாலை ஒன்று இல்லாமையால் பிரதேச மக்கள் வேறு இடங்களுக்குச் சென்று தமது வைத்தியத் தேவைகளை நிறைவு செய்யவேண்டிய நிலை காணப்பட்டது.

இதேவேளை, பெரும்பாலான மக்கள் யாழ். போதனா வைத்தியசாலையிலும் சிகிச்சை பெறுகின்றனர். (த-17)

## வயல்களில் நெற்கதிர்களை உருவிச் செல்லும் பறவைகள்



யாழ்ப்பாணம், பெப்.9

அரியாலை, செம்மணி, நாயன்மார்கட்டு வயல்களில் உள்ள நெற்பயிர்களில் இருந்து கதிர்களைக் கொக்குகளும், நாரைகளும் உருவிச் செல்வதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அண்மையில் பெய்த மழையால் ஏற்பட்ட பாதிப்பு ஒருபுறம் இருக்க, பறவைகளும் நெற்பயிர்களுக்குச் சேதம் விளைவிப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை பெய்த மழையை அடுத்து வயல்களில் வெள்ளம் நிரம்பி நெற்கதிர்களும் சுமையால் சாய்ந்து வெள்ளத்தில் மிதந்து காணப்படுகின்றன.

தற்போது இந்தப் பிரதேச வயல்களில் கொக்குகள், நாரைகள் என்பன நெற்பயிர்களில் உள்ள கதிர்களை உருவிக் கொண்டு செல்கின்றன.

இவை கூட்டம் கூட்டமாக வந்தே இவ்வாறு நாசம் விளைவிக்கின்றன.

வயல்களில் வெள்ளம் தேங்கியுள்ளமையைச் சாதகமாகப் பயன்படுத்திப் பறவைகள் இவ்வாறு கதிர்களைச் சேதமாக்குவதாக விவசாயிகள் கூறுகின்றனர். (த-17)

# யாழ். நகரின் பிரதான வீதிகளில் நிறுத்தப்படும் தனியார் பஸ்கள்

**நெருக்கடிகளுடன் விபத்துகள் ஏற்படும் அபாயமும் அதிகரிப்பு**

*யாழ்ப்பாணம், பெப்.9*

*யாழ். நகரின் பிரதான வீதிகளில் தனியார் பஸ்கள் ஆங்காங்கே நிறுத்தப்படுவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. அத்துடன் வாகன விபத்துக்களும் அதிகரித்து வருகின்றன என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். யாழ். மாவட்டம் மற்றும் வெளி மாவட்டங்களுக்கான சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கான ஓய்வு நேரத் தரிப்பிடம் யாழ். முற்றவெளிப் பகுதியில் ஒதுக்கப்பட்டுள்ளது.*

இந்த நிலையில் தனியார் பஸ்களின் சேவை நேரம் முடித்து தமது ஓய்வு நேரங்களில் சாரதிகள் யாழ். நகரின் பிரதான வீதிகளில் பஸ்களை நிறுத்தி வைக்கின்றனர்.

உணவகங்கள் மற்றும் வாகனத் திருத்துமிடங்களுக்கு முன்பாக உள்ள பிரதான வீதிகளில் தனியார் பஸ்கள் இவ்வாறு தரித்து விடப்படுவதால் வீதியின் ஒரு பகுதி ஆக்கிரமிக்கப்பட்டு விடுகிறது.

இதனால் வாகனங்கள் ஒன்றையொன்று விலத்த முடியாமல் விபத்துக்குள்ளாகும் நிலை ஏற்படுவதுடன் வாகனங்களும் சேதமடையும் நிலைமை உள்ளது.

இவ்வாறான நெருக்கடிகளால் பாதசாரிகளும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

யாழ். நகரின் மையப் பகுதியில் உள்ள கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டிச் சந்தி, சிவன்கோயில் வீதி, ஸ்ரான்லி வீதி, கே.கே.எஸ்.வீதி எனப் பிரதான வீதிகளில் அதிக எண்ணிக்கையான தனியார் பஸ்கள் தரித்து நிற்கின்றன.

பஸ்களின் சாரதிகள் தமது ஓய்வு நேரத்தில் உணவகங்களுக்குச் செல்லும் நிலையில் உணவகங்களுக்கு முன்பாக வாகனங்களைத் தரித்து விட்டுச் செல்கின்றனர்.

பிரதான வீதிகளில் இவ்வாறு வாகனங்கள் தரிக்கப்படுவது தொடர்பாக வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் அசண்டையாக இருப்பதாகவும் இதன் காரணமாகவே தொடர்ச்சியாக தனியார் பஸ்களின் தரிப்பிடமாக பிரதான வீதிகள் மாறியுள்ளன என்றும் வீதிகளில் பயணிப்போர் விசனம் தெரிவிக்கின்றனர்.

வாகன நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கு வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனப் பொதுமக்கள் சார்பில் கோரிக்கை எழுந்துள்ளது. (ம-14)

## தண்ணீர் நிலுவைப் பணம் செலுத்துவதில் ஆர்வம்



யாழ்ப்பாணம்,பெப்.9

யாழ். மாநகரசபையின் நீர் விநியோகப் பகுதி நேற்று வெள்ளிக்கிழமை நடத்திய நடமாடும் சேவையில் கணிசமான மக்கள் கலந்து கொண்டு தமது நிலுவைப் பணத்தைச் செலுத்துவதில் ஆர்வம் காட்டினர்.

மூன்று நாள்கள் இடம்பெறவுள்ள இந்த நடமாடும் சேவையின் முதல் நாள் நிகழ்வு வில்லூன்றி விநாயகர் ஆலய முன்றிலில் இடம்பெற்றது.

கடந்த 2012 இல் நகரின் வில்லூன்றி, குருநகர், பாஷையூர் பகுதிகளில் நீர் விநியோகப் பகுதிக்கு மக்கள் செலுத்த வேண்டிய நிலுவைப் பணம் ரூபா 21 இலட்சமாக இருக்கின்றது.

பொதுமக்கள் தமது நிலுவைப் பணத்தைச் செலுத்துவதன் மூலம் குறைபாடற்ற நீர் விநியோகச் சேவையை வழங்கவும் சபைக்கு வந்து பணத்தைச் செலுத்துவதில் அவர்களுக்கு ஏற்படக் கூடிய கால தாமதங்களைத் தவிர்க்கும் பொருட்டும் 12 ஆம் திகதியும் 14 ஆம்திகதியும் குருநகர், நல்லூர் பகுதிகளிலும் நடமாடும் சேவை இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

## வரி அனுமதியின்றி மோ.சைக்கிள் செலுத்தியதால் அபராதம்

வடமராட்சி,பெப்.ப9

வரி அனுமதிப் பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியவர் வல்வெட்டித்துறைப் போக்குவரத்துப் பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டார்.

சிக்குண்ட குறித்த நபர் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

சந்தேகநபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 2 ஆயிரம் ரூபா அபாரதம் செலுத்தமாறு நீதிபதி உத்தரவிட்டார். (ம-8)

## தணங்களப்பு வயல்களில் கட்டாக்காலிகள் தொல்லை

தென்மராட்சி,பெப்.9

தென்மராட்சி தெற்கு தணங்களப்பு பகுதி வயல்களில் வளர்ப்பு மாடுகளால் நெற்பயிர்கள் அழிக்கப்பட்டு வருகின்றன என்று நெற்செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அந்தப் பகுதியில் நெல் அறுவடை மும்முரமாக இடம்பெற்று வந்தவேளையில் கடந்த திங்கட்கிழமை இரவு பெய்த கடும் மழையால் வயல்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் அறுவடை செய்வது நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தவேளையில் அந்தப் பகுதியில் உள்ள குடியிருப்பாளர்கள் தமது வளர்ப்பு மாடுகளை அவிழ்த்து விடுவதால் அவை அறுவடை செய்யாமல் உள்ள நெற்கதிர்களையும் வெள்ளம் காரணமாக அறுவடை செய்து வயல் வரம்புகளில் வைக்கப்பட்டுள்ள நெற்கதிர்களையும் சேதப்படுத்தி அழித்து வருகின்றன என்று தெரிவித்தனர்.

இது தொடர்பாக அந்தப் பகுதி கமக்கார அமைப்புக்கு முறையிட்டும் பயன்கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தனர். (ம-9)

## மூக்கினுள் வைத்த ஊசி உள்ளே சென்றது

*மூக்கினுள்வைத்துவிளையாடிய ஊசி மூச்சிழுத்த போது உடலிற்குள்ளே சென்றது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை கொடிகாமத்தில் இடம்பெற்றது.*

*மூக்கு அடைப்பு ஏற்பட்டதால் சட்டை ஊசியை மூக்கினுள்வைத்துக்கொண்டு மூச்சினை இழுத்த போது அது திடீரென உள்ளே சென்றதாக தெரிவிக்கப்பட்டது. பாதிப்புற்ற பாடசாலை மாணவியான இவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ம-9)*

## நவிப்பிள்ளை..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் மீளாய்வுக் கூட்டத்தில் முன்வைப்பதற்காக விசேட அறிக்கையொன்றைத் தயார் செய்திருந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, அதனை இலங்கை அரசின் முன்கூட்டிய பார்வைக்காக கடந்த வாரம் அனுப்பியிருந்தார்.

இலங்கை தொடர்பில் தருஸ்மன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களைத் தமது அறிக்கையிலும் சுட்டிக்காட்டியிருந்த நவநீதம்பிள்ளை அம்மையார், ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான அடிப்படை விடயங்களை உறுதிப்படுத்துவதிலிருந்து இலங்கை தவறியுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார்.

நவநீதம்பிள்ளை அம்மையாரின் இந்த அறிக்கையை நிராகரித்திருக்கும் இலங்கை அரசு அநீதியான வகையில், குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறது.

தருஸ்மன் குழு ஐ.நா. செயலருக்கு ஆலோசனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட குழுவென்றும் அது ஐ.நா. சபையின் உத்தியோகபூர்வ குழு அல்லவென்றும் சுட்டிக்காட்டியிருக்கும் இலங்கை, தாருஸ்மன் அறிக்கையையும் இலங்கை ஏற்கனவே நிராகரித்திருப்பதைக் குறிப்பிட்டுக் கூறியுள்ளது.

(த)

## இந்தியாவில்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
அமைச்சு நேற்று வெள்ளிக்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் இந்த விவகாரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள இலங்கை வங்கிக் கிளைக்குள் கத்திகள், பொல்லுகள், இரும்புக் கம்பிகள் சகிதம் 15 பேரைக் கொண்ட குழுவொன்று நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நுழைந்தது.

இவ்வாறு நுழைந்த இக்குழுவினர் 2 பொலிஸ் உத்தியோகஸ்தர்களையும் பாதுகாப்புக் காவலாளியையும் தங்களது கட்டுப்பாட்டினுள் வைத்துக்கொண்டு இலங்கை வங்கிக்கிளை அலுவலகப் பாதுகாப்பு அறையினுடைய யன்னல்களையும் தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திர நிலையத்தின் கண்ணாடிக் கதவுகளையும் உடைத்து நொருக்கினர். அதன்போது இந்த வங்கியின் 2 ஊழியர்கள் காயமடைந்தனர். பயிலுநர் ஒருவருக்கும் காயமேற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த இரு வங்கி ஊழியர்களும் சென்னையிலுள்ள கில்போக் மருத்துவக் கல்லூரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர். (த)

## டில்லியை..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
இரண்டு நாள்கள் பயணமாக மஹிந்த நேற்று இந்தியா சென்றார். முதலில், கொழும்பில் இருந்து டில்லி சென்ற பின்னரே பீஹார் மாநிலம் புத்தகாயாவுக்கும் பின்னர் அங்கிருந்து திருப்பதிக்கும் செல்லத் திட்டமிட்டிருந்தார்.

இந்த நிலையில், பொலிஸ் தடையையும் மீறி டில்லியில் ம.தி.மு.கவினர் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தத் தயாராக இருந்தனர்.

இதையடுத்து ராஜபக்ஷவின் டில்லி வருகையைத் தவிர்க்கலாம் என்று டில்லி பொலிஸுக்கும் மிக முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனிக்கும் டில்லி பொலிஸின் தனிப் பிரிவுக்கும் உளவுத்துறை எச்சரிக்கைக் குறிப்பு அனுப்பியதாகத் தெரிகிறது.

இதுகுறித்து ஜனாதிபதி மஹிந்தவின் பாதுகாப்புப் படைக்கும் தகவல் கொடுக்கப்பட்டது. இதையடுத்து, முன்னர் திட்டமிட்டிருந்த நிகழ்ச்சிநிரலை இலங்கை ஜனாதிபதி அலுவலகம் மாற்றிக் கொண்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதன்பிரகாரம் கொழும்பிலிருந்து காலை சிறப்பு விமானத்தில் புறப்பட்ட மஹிந்த ஜனாதிபதி ராஜபக்ஷ நேரடியாகவே பீஹார் மாநிலத்தைச் சென்றடைந்தார். அங்கிருந்து அவர் புத்தகாயாவுக்குச் சென்றார் எனத் தெரியவந்தது.

ராஜபக்ஷவின் பயணத் திட்டத்தின் போது முழுமையான பாதுகாப்பை வழங்கும்படி ஆந்திரா, பீஹார் ஆகிய மாநிலங்களின் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என மத்திய உள்துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

(த-சி)

## இந்தியாவில்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...'
பெரும் எதிர்ப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

நேற்றுக்காலை டில்லி ஜந்தர் மந்திரில் இருந்து பிரதமர் வீட்டை நோக்கி வைகோ தலைமையில் பேரணி சென்றபோது நாடாளுமன்ற வீதியில் அது தடுத்து நிறுத்தப்பட்டது.

இதேவேளை, போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள மஹிந்த ராஜபக்ஷவை இந்தியாவுக்குள் அனுமதிக்கக் கூடாது என்பது தமிழகக் கட்சிகளின் உறுதியான கோரிக்கை. ஆனால், இந்தக் கோரிக்கையை இந்திய மத்திய அரசு நிராகரித்து தொடர்ந்தும் மஹிந்த ராஜபக்ஷவை, இந்தியாவுக்குள் அனுமதித்து வருகிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த சில நாட்களாக தமிழகம் முழுவதும் பல்வேறு கட்சிகள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றன.

சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகத்தையும், சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தையும் மக்கள் விடுதலைக் கட்சியினர் 50 பேர் முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தினர்.

**ரயில் மறியல் போராட்டம்**

இதேபோல், சென்னை கொருக்குப்பேட்டையில் ரயில் மறியல் போராட்டம் நடத்தப்பட்டது. ஓசூரில் தமிழ்த் தேசிய பொதுவுடமைக் கட்சியினர் மற்றும் பெரியார் திராவிடர் கழகத்தினர் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட முயன்றனர். பெங்களூரில் இருந்து கோவை சென்ற ரயிலை அவர்கள் மறிக்க முயன்றபோது பொலிஸார் அவர்களைத் தடுத்தனர்.

ஆனால் போராட்டத்தில் ஈடுபட்டோர் பொலிஸாரைத் தாக்க முயன்றதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து போராட்டம் நடத்திய 100 இற்கும் மேற்பட்டோரைப் பொலிஸார் கைது செய்தனர். இதேவேளை, கடலூரிலும் ரயில் மறியல் போராட்டத்தை தமிழ்த் தேசிய அமைப்புகள் நேற்று நடத்தின.

**சட்டத்தரணிகள் பணிப் புறக்கணிப்பு**

ஜனாதிபதி மஹிந்தவின் வருகைக்குக் கண்டனம் தெரிவித்து தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களைப் புறக்கணித்தனர். மேலும் நீதிமன்றங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. கோவையில் ஜனாதிபதியின் கொடும்பாவி எரிக்கப்பட்டதுடன், கோவை சட்டக் கல்லூரி மாணவர்கள் நேற்று 3ஆவது நாளாகயும் அவரின் வருகைக்கு எதிராக போராட்டம் நடத்தினர்.

(த)

## இலங்கையின்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
என்று பிரகடனப்படுத்துமாறு ஐ.நாவை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப் பேரவையில் நேற்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசியபோதே முதல்வர் ஜெயலலிதா மேற்கண்டவாறு வலியுறுத்தினார். இதுதொடர்பில் அவர் இலங்கை பற்றி மேலும் கூறியதாவது -

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து இங்கே சில உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். இலங்கையில் இடம்பெயர்ந்து முகாம்களில் வசிக்கும் தமிழர்கள், தமது சொந்த இடங்களில் மீண்டும் குடியமர்த்தப்பட வேண்டும். சிங்களவர்களுக்கு இணையாக அனைத்து உரிமைகளுடன் அவர்கள் வாழவேண்டும் என்பதில் இந்த அரசு உறுதியாக இருக்கிறது.

இந்நிலை ஏற்படும்வரை இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டும். இலங்கையில் இனப் படுகொலையை நிகழ்த்தி போர்க் குற்றம் புரிந்தவர்களை போர்க் குற்றவாளிகள் எனப் பிரகடனப் படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும். இது தொடர்பாக, ஏற்கனவே இந்த அவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனால், மத்திய அரசு அதைக் கண்டு கொள்ளவில்லை. இந்தத் தீர்மானத்தின் மீது, மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை இவ்வேளையில் நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

கடந்த வருடம் ஜெனிவாவில் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில், இலங்கைக்கு எதிராக அமெரிக்கா வலுவான ஒரு பிரேரணையைக் கொண்டுவந்தது. இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக இந்திய அரசு வாக்களிக்க வேண்டும் என்று நான் பிரதமர் மன்மோகன் சிங்கை தொடர்ந்து வலியுறுத்தினேன்.

**வலுவிழக்கச் செய்தவர்**
**பாரதப் பிரதமரே**

முதலில், அதை ஆதரிப்பது பற்றி எதுவும் தெரிவிக்காத இந்திய அரசு, எனது தொடர் வலியுறுத்தல் காரணமாக பின்னர் அந்தப் பிரேரணையை ஆதரித்து வாக்களித்தது. இருப்பினும், அந்தப் பிரேரணையை வலுவிழக்கச் செய்தவர் பாரதப் பிரதமராவார்.

பாரதப் பிரதமர் இலங்கை ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் இது விடயத்தை விளக்கியிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நீர்த்துப்போன பிரேரணையை அடிப்படையாகக் கொண்டே இலங்கை அரசு இன்னமும் நடவடிக்கை எடுக்காத நிலையில், இம்முறைக் கூட்டத்தொடரில் மீண்டும் ஒரு பிரேரணையை அமெரிக்கா கொண்டுவரவுள்ளது என்ற செய்தி வந்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இவ்வாறானதொரு பிரேரணையை அமெரிக்க கொண்டுவருவது ஒரு புறம் இருந்தாலும், தமிழர்கள் நலன் கருதி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இயற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், இந்திய அரசு ஒரு தீர்மானத்தை கொண்டுவந்து அதை மற்ற நாடுகளுடன் இணைந்து நிறைவேற்ற வேண்டும் என்றும் மத்திய அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். - என்று தெரிவித்தார் முதல்வர் ஜெயலலிதா.

(த)

## நாவற்குழியில்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
பிரேமச்சந்திரன் நேற்று அங்கு சென்றிருந்தார். அதன்போது சிங்கள மக்கள் தங்கியுள்ள பகுதியை சுரேஷ் பிரேமச்சந்திரனுடன் சென்ற குழுவினர் படம் எடுத்துள்ளனர்.

அதையடுத்து அங்கு வந்த சிங்கள மக்கள் தம்மைப் படம் எடுக்க வேண்டாம் என்று கடும்தொனியில் தெரிவித்தனர்.

ஒளிப்படம் எடுக்க வேண்டாம் என்று சொல்வதற்கு நீங்கள் யார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அந்த மக்களைப் பார்த்துக் கேட்டார். அதையடுத்து சிங்கள மக்கள் அவருடன் முரண்படத் தொடங்கினர்.

இந்தக் காணியில் தமிழ் மக்கள் முன்னர் வாழ்ந்தனர். இங்குள்ள தென்னை மரங்களைப் பார்க்கும் போது அது தெரியவில்லையா? என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் சிங்கள மக்களைக் கேட்க, நாங்கள் இங்கு வரும் போது யாரும் இருக்கவில்லை என்று அவர்கள் பதிலளித்தனர்.

அவர்கள் இங்கிருந்து வெளியேறி இருக்கலாம். இது அவர்களுடைய காணி என்று நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவிக்கும்போதே, இது அரச காணிதானே, அதுதான் நாங்கள் இங்கு குடியிருக்கின்றோம் என்று சிங்கள் மக்கள் பதில் கூறினர்.

இந்தக் காணி உங்களுக்குத் தரப்பட்டு விட்டதா? என நாடாளுமன்ற உறுப்பினர் அந்த மக்களிடம் கேட்க, அதற்கு அந்த மக்கள் இல்லை எனப் பதில் கூறினர்.

அப்படியானால் இங்கு எப்படி நிரந்தர வீடுகள் அமைத்தீர்கள்? யாருடைய அனுமதியைப் பெற்றுள்ளீர்கள்? என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிங்கள மக்களிடம் கேட்டார்.

எங்களுடைய பிக்குகள் தான் உதவினார்கள். நாங்கள் முன்னர் மணியந்தோட்டத்தில் வாழ்ந்தோம் என அவர்கள் பதிலளித்தனர்.

அப்படியானால் இங்கு ஏன் இருக்கிறீர்கள். மணியந்தோட்டத்துக்குச் செல்ல வேண்டியதுதானே என்று சுரேஷ் கூறினார்.

சிங்கள மக்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர் வாக்குவாதப்பட்டுக் கொண்டிருந்த போது அங்கு படையினர் வந்தனர். அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் ஏன் வந்தீர்கள் என்று கேட்க, மக்களைப் பார்க்க வந்தேன் என்று பதிலளித்துவிட்டு, நாடாளுமன்ற உறுப்பினர் தமிழ் மக்களைச் சென்று பார்வையிட்டார்.

அதன்போது தமிழ் மக்களுக்குக் குடிதண்ணீர் வசதிகளை உடனடியாகப் பிரதேச சபை மூலம் ஒழுங்கு செய்து தருவதாகவும், பொதுக்கிணறு, வாசிகசாலை என்பவற்றைப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்ட நிதியில் அமைத்துத் தருவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்குள்ள தமிழ் மக்களிடம் வாக்குறுதி அளித்தார்.

அத்துடன் அந்தப் பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு உபகரணங்களை நாளை மறுதினம் வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

(த-5)

## ஜனாதிபதி..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
இந்தக் கூட்டத்துக்கு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கு வழமையாக அழைக்கப்படுபவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். அதற்குரிய அழைப்பிதழ்கள் ஜனாதிபதி செயலகத்தால் அனுப்பப்படும் என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, 12ஆம் திகதி மாலை நயினாதீவுக்குச் செல்லும் ஜனாதிபதி மறுநாள் 13ஆம் திகதி முற்பகல் 10.30 மணியளவில் ஜப்பான் அரசின் நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்ட யாழ்.போதனா வைத்தியசாலைக் கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

13ஆம் திகதி மாலை சுன்னாகத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய மின்பிறப்பாக்கி நிலையத்தையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திறந்து வைக்கிறார்.

இதற்குரிய முன்னாயத்தங்களில் கொழும்பில் இருந்து வருகை தந்துள்ள ஜனாதிபதி செயலகப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர்.

(த-5)

## மதம்,...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
அல்லது மறைமுகமாகவோ வேண்டுமென்றே செய்தல் அல்லது செய்ய எத்தனித்தல்.

(ஆ) பயங்கரவாதச் செயலொன்றைப் புரிவதற்கு உடந்தையாளராகச் செயற்படுதல்.

(இ) பயங்கரவாதச் செயலொன்றை ஒழுங்கு செய்கின்ற - அதனைச் செய்யுமாறு பணிக்கின்ற அல்லது அதனைச் செய்வதற்கு உடந்தையாக இருக்கின்ற அல்லது அதற்கு உதவி செய்கின்ற செயல்கள்.

(ஈ) வேண்டுமென்று பங்களிப்புச் செய்தல், பயங்கரவாதச் செயலொன்றை முன்னெடுத்துச் செல்லும் இலக்குடனும் அல்லது குழுவின் பயங்கரவாதச் செயலொன்றைப் புரிவதற்கான உட்கருத்துப் பற்றிய அறிவுடனும் மற்றும் பொது நோக்கம் ஒன்றுடனும் செயலாற்றுகின்ற குழு பயங்கரவாதச் செயலைப் புரிவதற்குப் பங்களித்தல்.

மேற்குறிப்பிட்ட செயல்களில் ஈடுபடுபவர் 'பயங்கரவாதி' ஆவார்.

பயங்கரவாதச் செயல்' என்பதற்கான அரசின் வரைவிலக்கணம் பின்வருமாறு:-

(அ) இச்சட்டத்தின் முதலாம் அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள விடயங்களுள் ஏதேனுமொன்றின் நோக்கெல்லைக்குள் அல்லது வரைவிலக்கணத்துக்குள் தவறாக அமைகின்ற செயல்.

(ஆ) ஆயுதமேந்திய மோதல் நிலைமை ஒன்றில் அல்லது வேறு வகையாக பொதுமகன் ஒருவருக்கு அல்லது பகைமைகளில் தீவிரவாதத்தில் பங்கெடுக்காதவருக்கு மரணத்தை அல்லது உடல் ஊனத்தை ஏற்படுத்துதல், அத்தகைய செயலின் நோக்கம், அதன் தன்மையால் அல்லது சந்தர்ப்பத்தால் ஏதேனும் செயலைச் செய்யுமாறு அல்லது செய்யாது தவிர்க்குமாறு மக்களை அச்சுறுத்தல் அல்லது ஓர் அரசை அல்லது சர்வதேச ஒழுங்கமைப்பை கட்டாயப்படுத்துதல்.

(இ) (i) அரசை செல்வாக்குக்கு உட்படுத்துவதற்காக அல்லது பொதுமக்களை அல்லது பொதுமக்களின் ஒரு பிரிவினரைச் செயலிழக்கச் செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட செயற்குழு.

(ii) அரசியல், மத அல்லது இலட்சியம் சார்ந்த நோக்கமொன்றை முன்னெடுத்துச் செல்லும் செயற்பாடு. அது அச்சுறுத்தலின் செயற்பாடாவதோடு அச்செயற்பாடு பின்வருவனவற்றை ஏற்படுத்தும்.

(AA) ஆளொருவருக்கான பாரதூரமான வன்முறையை ஈடுபடுத்தல்.

(BB) சொத்துக்குப் பாரதூரமான சேதத்தை ஏற்படுத்தல்.

(CC) அச்செயலைப் புரிபவரைத் தவிர வேறு ஒருவரின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும்.

(DD) பொதுமக்களின் அல்லது பொதுமக்களின் ஒரு பகுதியினரின் சுகாதாரத்துக்கு அல்லது பாதுகாப்புக்குப் பாரதூரமான ஆபத்தை ஏற்படுத்தல்.

(EE) அது இலத்திரனியல் முறைமையொன்றில் பாரதூரமாகத் தலையிடுவதற்கு அல்லது பாரதூரமாகச் செயலிழக்கச் செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட செயற்பாடுமாகும். (த)

## இளம்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
டக்கிய இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவினரே நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் மேற்படி குழுவினர் பல்வேறு இடங்களுக்கும் சென்று மக்களைச் சந்திக்கவுள்ளனர். குறிப்பாகப் போரால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களையும் இவர்கள் சந்திக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(த-5)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# பிராயச்சித்தம் செய்வது குறித்து முடிவெடுக்க வேண்டிய வேளை இது

இலங்கையில் மோசமாக இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள், சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான அடக்கு முறைகள், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் அரசின் அசமந்தப் போக்கு ஆகியன உட்பட பல்வேறு காரணங்களை முன்வைத்து பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாட்டைக் கொழும்பில் நடத்தக்கூடாது என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.

நீதித்துறைக்கும் சட்டவாக்கத்துறைக்கும் இடையிலான பலப்பரீட்சை ஷிராணி பண்டாரநாயக்காவின் வெளியேற்றத்துடன் ஓரளவு தணிந்துள்ள நிலையில், ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது கூட்டத் தொடரும், ஏப்ரலில் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைச்சரவை நடவடிக்கைக் கூட்டமும் இலங்கை இப்போது எதிர்நோக்கும் பிரதான சவால்களாக எழுந்து, உயர்ந்து நிற்கின்றன.

மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக மற்றொரு தீர்மானம் கொண்டுவரப் போவதாக அமெரிக்கா ஏற்கனவே மிக உறுதியாக அறிவித்துவிட்டது. அதேவேளை, பொதுநலவாய அமைச்சரவை நடவடிக்கைக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் இலங்கை விடயமும் சேர்க்கப்பட்டு பொதுநலவாய உச்சிமாநாட்டைக் கொழும்பில் நடத்துவதா, இல்லையா என்பது மீள்பரிசீலனை செய்யப்படுவதும் நிச்சயமாகிவிட்டது.

ஜெனிவா மார்ச் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, ஏப்ரலில் பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டை கொழும்பில் நடத்துவதற்கு எதிராக பொதுநலவாய அமைச்சரவை நடவடிக்கைக் கூட்டம் தீர்மானிக்குமானால், அது இலங்கைக்குப் பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

இத்தகைய நிலையில், பொதுநலவாய அமைச்சரவை நடவடிக்கைக்கூட்ட நிகழ்ச்சி நிரலில் இலங்கை விவகாரம் சேர்த்துக்கொள்ளப்பட்டதற்கு வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். நாளை கொழும்பு வரும் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஸ் சர்மாவிடம் இலங்கை அரசு தனது வெப்பியாரத்தைக் கொட்டித் தீர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுநலவாய அமைப்பின் கட்டமைப்பையும், பொறிமுறையையும் அதன் உறுப்பு நாடுகளின் உள்ளகச் செயற்பாடுகளுக்குத் தடங்கல் ஏற்படுத்தும் வகையில் பயன்படுத்த இடமளிக்கக்கூடாது என்கிறது இலங்கை. 2009இல் ரினினிடாட் டுபாக்கோவில் நடந்த பொதுநலவாய உச்சி மாநாட்டில் ஏகமனதாக மேற்கொள்ளப்பட்ட ஒரு தீர்மானத்தை மறுபரிசீலனைக்கு உட்படுத்துவது பொதுநலவாயத்தின் எதிர்காலத்துக்கு அச்சுறுத்தலாக அமையும் என்று இலங்கை ஏற்கனவே ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் 2013 நவம்பரில் பொதுநலவாய உச்சி மாநாட்டை நடத்தும் முடிவு ரினினிடாட் டுபாக்கோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்டு 2011 இல் மேற்கு ஆஸ்திரேலிய நகரான பேர்த்தில் நடைபெற்ற மாநாட்டில் மீளவும் உறுதிசெய்யப்பட்டது. 54 நாடுகள் கலந்துகொள்ளும் இம்மாநாடு, 1976இல் கொழும்பில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் 5 ஆவது மாநாட்டுக்குப் பின் கொழும்பில் நடைபெறவுள்ள சர்வதேச உச்சிமாநாடு ஆகும். 2013 மாநாட்டுக்குப் பின் இரண்டு வருடங்கள் - 2015 இல் மொரிஷியஸில் அடுத்த மாநாடு நடைபெறும் வரை - இலங்கை தலைமைப் பதவி வகிக்கும்.

இத்தகைய நிலையில், பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டை இலங்கையில் நடத்தக்கூடாது என்ற கோரிக்கை வலுத்து வருகிறது. "மனித உரிமைகள், ஜனநாயக மறுசீரமைப்புகள் தொடர்பான பொதுநலவாயத்தின் கொள்கைகளை இலங்கை அரசு பொருட்படுத்தவில்லை. இந்நிலையில் முக்கியமான ஒரு மாநாட்டை நடத்தும் தன்மையை இலங்கை கொண்டிருக்கவில்லை" என்கிறார் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியாவுக்கான பணிப்பாளர் பிராட் அடம்ஸ்.

மனித உரிமை விவகாரத்தில் இலங்கை அரசு அர்த்தபுஷ்டியான முன்னேற்றத்தைக் காணாவிட்டால் பொதுநலவாய உச்சி மாநாட்டை வேறொரு நாட்டுக்கு மாற்றவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை மீதான மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுகளுக்குத் தீர்வு காணப்படாத நிலையில், பொதுநலவாய உச்சிமாநாட்டை இலங்கையில் நடத்துவது இலங்கையின் நடவடிக்கைகளுக்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்ததாக அமையும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் உட்படப் பெரும்பாலான சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன.

பொதுநலவாயத்தின் முக்கிய பெறுமானங்களை இது நசுக்கி விடுவதாக அமையும். பொதுநலவாயத்துக்கும் அதன் உறுப்பு நாடுகளுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்திவிடும் என்றும் கூறப்படுகிறது.

நவம்பரில் நடைபெறவுள்ள மூன்றுநாள் மாநாட்டுக்காக இலங்கை அரசு 21 கோடி 75 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் விசேட செயலணி ஒன்று நிறுவப்பட்டு மாநாட்டுக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. இந்தக் கட்டத்தில் தடங்கல் ஏற்படுமானால் இலங்கைக்கு அது பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தும். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசு முழுமையாக செயற்படுத்தி இருந்தால், ஷிராணி பண்டாரநாயக்க விவகாரத்தில் அவதானத்துடன் செயற்பட்டிருந்தால் நெருக்கடிகளைத் தவிர்த்திருக்கலாம்.

இத்தகைய நிலையில், இலங்கை அரசு தான் எதிர் கொள்ள இருக்கும் நெருக்கடியைத் தவிர்த்துக் கொள்வதற்குத் தகுந்த வியூகம் வகுத்துச் செயற்பட வேண்டும்.

வெள்ளம் கழுத்துக்கு மேல் உயர்ந்து செல்லும் தறுவாயிலேனும், தான் மேற்கொள்ள வேண்டிய பிழை திருத்தங்களை அரசு செய்தே ஆக வேண்டும். தான் விட்டதாகச் சுட்டிக்காட்டப்படும் தவறுகளைத் திருத்திக் கொள்ள மனங் கொள்வதே இன்றைய தேவை. அதில் நாட்டங்கொள்ளாமல் உலக நாடுகளில், அவற்றின் தலைவர்களின் தலைகளில் மிளகாய் அரைக்கும் போக்கில் தப்புத் தாளங்கள் போடுவதற்கு முனையக் கூடாது.

தனிப்பட்ட மனிதனானாலும் சரி, தேசமானாலும் சரி செய்த தவறுக்கு பிராயச்சித்தம் செய்தாக வேண்டும் என்பதே நியதி. இதனை இலங்கை அரசு மறந்துவிடலாகாது. இலங்கை அரசுக்கு இவை காதில் ஏறுமா?

# வடக்கில் இந்திய வீடுகளுக்கு 2013 இல் 6 ஆயிரம் பயனாளிகள்

யாழ்ப்பாணம்,பெப்.9

இந்தியன் வீட்டுத்திட்டத்துக்கு இந்த ஆண்டுக்கு வடமாகாணத்தில் 6 ஆயிரத்து 19 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று இந்திய துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 6 ஆயிரத்து 19 வீட்டுத்திட்ட பயனாளிகளும் இந்த மாத ஆரம்பத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 53 வீட்டுத் திட்ட பயனாளிகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 779 வீட்டுத் திட்ட பயனாளிகளும், மன்னார் மாவட்டத்தில் 474 வீட்டுத் திட்ட பயனாளிகளும், யாழ். மாவட்டத்தில் ஆயிரத்து 199 வீட்டுத்திட்ட பயனாளிகளும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

6 ஆயிரத்து 19 வீட்டுத் திட்ட பயனாளிகளில் ஆயிரத்து 477 வீடுகளுக்கு அத்திபாரமிடப்பட்டு இரண்டாம் கட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த வீட்டுத் திட்டங்கள் மார்ச் மாத இறுதியில் நிறைவடையும் -என்றார் அவர். (ம-13)

# நஷ்டஈட்டு விண்ணப்ப காலம் முடிந்ததால் மக்கள் கவலை

யாழ்ப்பாணம்,பெப்.9

புனர்வாழ்வு அதிகார சபையால் அறிமுகப்படுத்தப்படும் பயங்கரவாதம் மற்றும் அதனுடன் தொடர்புடைய காரணங்களால் பாதிப்படைந்த சொத்துக்களுக்காக நஷ்டஈடு வழங்கும் திட்டங்களுக்குரிய விண்ணப்பங்கள் பொறுப்பேற்பது கடந்த 31 ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டது என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இதுவரை பல பிரிவுகளில் இன்னமும் மீள் குடியமர்வு இடம் பெறவில்லை.

இடம்பெயர்ந்து சொந்த இடங்களுக்கு மீளக் குடியமராத பலர் இன்னமும் நஷ்டஈட்டுக் கோரிக்கைக்கு விண்ணப்பிக்க முடியவில்லை.

இந்த நிலையில் அந்தத் திட்டம் இடைநிறுத்தப்பட்டதால் தமது சொத்துக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நஷ்டஈடு பெற முடியாது உள்ளது என்று தெரிவித்தனர்.

பொது மக்கள், அரச ஊழியர், விசேட நபர்கள் மற்றும் அரச பாவனைக்குட்படுத்தப்பட்டு பாதிப்படைந்த தனியார் வாகனம் மற்றும் கட்டடங்கள் போன்றவற்றுக்காக நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுத்திட்ட விண்ணப்பத் திகதியே முடிவடைந்துள்ளது என்று கூறப்பட்டுள்ளதாக மீளக் குடியமர்ந்த மக்கள் தெரிவித்தனர். (ம-9)

# உள்ளூராட்சி அலுவலகங்களில் 128 உத்தியோகத்தர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், பெப்.9

வடமாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் அலுவலகங்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றிய 128 உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

திணைக்களத்தின் ஆளணி மீள் பரவலாக்கல் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றம் அண்மையில் வெளியிட்ட ஆளணி வளத்துக்கு மேலதிகமாக உத்தியோகத்தர்கள் கடமையாற்றுவது நிறுத்தப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் பல்வேறு காரணங்களுக்காகத் தற்காலிக இணைப்பில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களும் இடமாற்றப் பட்டியலில் இடம்பெற்றுள்ளதால் தற்காலிக இணைப்புகள் அனைத்தும் எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இடமாற்றப் பட்டியலின் பிரகாரம் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையைச் சேர்ந்த நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள், உள்ளூராட்சி உதவியாளர்களாக கடமையாற்றும் 73 உத்தியோகத்தர்களும், முகாமைத் துவ உதவியாளர் சேவையைச் சேர்ந்த 55 உத்தியோகத்தர்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இடமாற்றம் எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் என்று உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகூ தெரிவித்துள்ளார். (ம-9)

# தேங்காய் விலை வடமராட்சியில் உயர்வு

வடமராட்சி, பெப்.9

வடமாரட்சிப் பிரதேசத்தில் அண்மைக்காலமாக தேங்காயின் விலை வெகுவாக உயர்ந்துள்ளது.

இதுவரை காலமும் 35 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த தேங்காய் தற்போது 40 ரூபா தொடக்கம் 50 ரூபா வரை உயர்ந்துள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்திலிருந்தே வடமராட்சிப் பிரதேசத்துக்கு தினமும் தேங்காய்கள் வியாபாரிகளால் எடுத்து வரப்பட்டுச் சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றன. (ம-8)

# விவசாய தொழில் முயற்சியாளரை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை

தென்மராட்சி,பெப்.9

விவசாய அமைச்சு இந்த வருடம் அனைத்து மாவட்டங்களிலும் விவசாயத் தொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் செயற்றிட்டத்தை நடைமுறைப் படுத்தவுள்ளது.

இதற்காக 18 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட சொந்தக் காணியுள்ள , விவசாயத் தொழில் முயற்சியாளராக முழு நேரம் பணியாற்றுவதற்கான விருப்பம் உள்ள, குறைந்தது ஐந்து வருடங்களுக்காவது இந்த முன்னோடித் திட்டத்துடன் தொடர்ச்சியாகப் பணியாற்றக்கூடிய வாய்ப்பு உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை அந்தந்த மாவட்ட விவசாயப் பணிப்பாளர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்குமாறும், விண்ணப்பப் படிவங்களை அந்தந்தப் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் விவசாய அமைச்சு அறிவித்துள்ளது. (ம-9)

# ஜனவரி மாத கொடுப்பனவு இதுவரை பட்டதாரிப் பயிலுநருக்கு கிடைக்கவில்லை

அச்சுவேலி,பெப்.9

பட்டதாரிப் பயிலுநர்களுக்கான ஜனவரி மாதக் கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த பத்தாயிரம் ரூபா கொடுப்பனவு கூட உரிய வேளையில் வழங்கப்படாமையால் எதிர்பாராத நெருக்கடிக்கு உள்ளாக வேண்டி இருப்பதாக பட்டதாரிப் பயிலுநர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

முடிந்த மாதத்துக்கான கொடுப்பனவு அடுத்த மாதம் முதல் வாரத்தில் வழங்கப்படுவது வழமை. இந்த நிலையில் ஜனவரி மாதத்துக்கான கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை.

பட்டதாரிப் பயிலுநர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு நியமனம் பெற்ற பிரதேச செயலகங்கள் மூலம் அவர்களின் வங்கிக் கணக்குகள் ஊடாக வழங்கப்படுவது வழமை.

பட்டதாரிப் பயிலுநர்களுக்கு ஆறுமாதம் பயிற்சி வழங்கப்படவுள்ளதாக அவர்களுக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு 12 மாதங்களுக்கு பயிற்சி வழங்கப்படவிருப்பதாக தெரிவித்தது.


யாழ். மாவட்டப் பட்டதாரிகளுக்கு 2012 ஜூலை முதலாம் திகதி தொடக்கம் பயிற்சிக்கான நியமனம் வழங்கப்பட்டிருப்பதால் 2012 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் ஆறு மாதங்கள் முடிவடைகின்றன. 2013 ஜனவரி 7 ஆவது மாதமாகும்.

ஆறு மாதங்கள் பயிற்சி என்று அறிவித்து அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் பயிற்சிக் காலம் 12 மாதங்கள் என நீடிக்கப்பட்டதால் நீடிக்கப்பட்ட காலத்துக்கான நிதி ஒதுக்கீடு மாவட்டச் செயலகங்களுக்கு கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டமையாலேயே ஜனவரி மாதக் கொடுப்பனவில் தாமதம் ஏற்படுகிறது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-11)

# மன்னார் நகர திட்டமிடல் தொடர்பாக ஆலோசனை

மன்னார், பெப்.9

மன்னார் நகரில் மேற்கொள்ளப்படவுள்ள பல்வேறு அபிவிருத்திகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.



மன்னார் நகரத் திட்டமிடல் ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னாரின் மறுமலர்ச்சி 2022 திட்டத்தின் கீழ் இயங்கும் உப குழுக்களில் ஒன்றான நகர திட்டமிடல் குழு மாதாந்தம் மன்னார் நகரம் சார் அபிவிருத்திப் பணிகள் தொடர்பான ஒன்றுகூடலை நடத்தி வருகின்றது.

இந்த நிலையில் திணைக்கள அதிகாரிகளுடன் நகர திட்டமிடல் ஆலோசனைக் கூட்டம் இடம்பெற்றதாக மன்னார் நகர சபையின் உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ் தெரிவித்தார்.

இதன் போது வீதி அமைத்தல், வடிகால் அமைத்தல், ஏ-14 வீதி அகலத்தை தீர்மானித்தல், எல்லைப்படுத்தல், நகர சபை வீதியின் அகலத்தை தீர்மானித்தல், வீதிகளின் அமைப்புப்பற்றித் தீர்மானித்தல், பாலங்கள் அமைத்தல், வடிகால் அமைப்பை தீர்மானித்தல், தற்போதைய பராமரிப்புக்கேற்ப வாய்க்கால், வடிகால்களை கண்டுபிடித்தல், குளங்களை பாதுகாத்து பராமரித்தல், குப்பை கூளங்களை அகற்றுவதும் அவற்றைப் போடும் இடங்களைத் தீர்மானித்தல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன என்று அவர் தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் மன்னார் நகர சபைத் தலைவர், உப தலைவர், உறுப்பினர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, யுனோப்ஸ், ரெலிக்கொம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை, இலங்கை மின்சார சபை, சுகாதாரத் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என்றும் மன்னார் நகர சபையின் உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ் தெரிவித்தார். (ம-12)

மன்னார் பாடசாலைகளில்

## மலேரியா காய்ச்சல் தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு

மன்னார், பெப்.9

2015 ஆம் ஆண்டுக்குள் மலேரியா அற்ற இலங்கையை உருவாக்குவோம் எனும் தொனிப்பொருளில் மன்னார் சர்வோதய அமைப்பு பாடசாலை மாணவர்களை மையப்படுத்தி ஏற்பாடு செய்திருந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த புதன்கிழமை மன்னார் அல் அஸ்ஹர் ம.வி. மற்றும் மன்னார் முருங்கன் ம.வி. ஆகிய பாடசாலைகளில் இடம் பெற்றது.

உயர் வகுப்பில் கல்வி கற்கும் சுமார் 250 மாணவர்கள் வரை பங்கு பற்றியுள்ளனர்.

மன்னார் சர்வோதய அமைப்பின் இணைப்பாளர் எஸ்.யுகேந்திரன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

குறித்த இரண்டு பாடசாலைகளிலும் உயர் வகுப்பில் கல்வி கற்கும் சுமார் 250 மாணவர்கள் வரை பங்கு பற்றியுள்ளனர்.

மலேரியா காய்ச்சல் பரவுவது குறித்தும் அவற்றில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் முகமாக மன்னார் மாவட்டத்தில் குறிப்பாக கிராமப் புறங்களில் உள்ள மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாக குறித்த கருத்தரங்கு மாணவர் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதன் போது மலேரியா நுளம்பை அடையாளம் காணுதல், குறித்த நோய் தொடர்பாக மக்களை எவ்வாறு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், கிராமப்புற மக்களுக்கு எவ்வாறு விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற விளக்கங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்தக் கருத்தரங்கில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.அரவிந்தன், சர்வோதய திட்ட இணைப்பாளர் எஸ்.ரி.குமாரசே, சர்வோதய அமைப்பின் ஜீ.எப்.ஏ.ரி.எம். நிகழ்ச்சித் திட்ட இயக்குநர் புத்திக்க சுப்பாராச்சி ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-12)

## உதவி பணிப்பாளர் நியமனம்

வவுனியா, பெப்.9



வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய மாவட்ட உதவிப் பணிப்பாளராக நடராஜா சூரியராஜா கடந்த முதலாம் திகதி நியமனம் பெற்றுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகம் ஆகியவற்றில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றிய நடராஜா சூரியராஜா இடர் முகாமைத்துவ அமைச்சில் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவில் உதவிப் பணிப்பாளராகவும் கடமையாற்றியவர்.

## இயற்கை இடர்களினால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உதவி வழங்க நடவடிக்கை

மன்னார், பெப்.9

கடந்த காலங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் வறட்சி போன்ற காரணங்களால் மன்னார் மாவட்டத்தில் விவசாய நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

இதனால் பெரும் எண்ணிக்கையான விவசாயிகள் பாதிப்புகளை எதிர்நோக்கி இருந்தனர்.

இந்த நிலையில் பயிர்கள் அழிவடைந்த நிலையில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முகமாக அவர்களுக்கு நிவாரணத்தை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் முதற் கட்டமாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகளுடனான அவசர கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் உயிலங்குளம் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடலுக்கு விவசாய அமைப்புக்களின் தலைவர், செயலாளர், பிரதான வாய்க்கால் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கூறுகையில்:-

"அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக மன்னார் மாவட்டத்தில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்செய்கை அழிவடைந்தது. இதன்போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய முறையில் நிவாரணம் வழங்கப்படவில்லை.

இந்த நிலையிலே குறித்த விவசாயிகளின் நலன் கருதி குறித்த கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது'' என்றார். (ம-12)

## சிறுவனைக் காணவில்லை; பொலிஸில் முறைப்பாடு

அக்கராயன்,பெப்.9

வீட்டிலிருந்து விளையாடச் சென்ற சிறுவனைக் கடந்த 11 நாள்களாகக் காணவில்லை எனக் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோணாவில் அ.த.க. பாடசாலையில் கல்வி பயிலும் கோணாவில் கிழக்கைச் சேர்ந்த சென்ஜோசப் விதுசன்(வயது-13)வீட்டிலிருந்து அருகில் உள்ள நண்பர்களுடன் விளையாடச் சென்ற போது காணாமற் போயுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் 28 ஆம் திகதி சிறுவன் காணாமற் போனமை தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு கொடுக்கச் சென்றபோது பொலிஸார் முறைப்பாட்டை ஏற்காததையடுத்து கிளிநொச்சி மாவட்ட செயலக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் ஊடாக கடந்த 2 ஆம் திகதி கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பெற்றோரால் முறைப்பாடு கொடுக்கப்பட்டுள்ளது - என்று கூறப்பட்டது. (ம-18-14)

## கிளிநொச்சி சந்தை வழக்கு; தடை உத்தரவு நீங்கியது

கிளிநொச்சி, பெப்.9

கிளிநொச்சி பொதுச் சந்தையில் தமக்குக் கடைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தெரிவித்து ஒரு தொகுதி வர்த்தகர்களால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை அடுத்து விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை யுத்தரவு நேற்று வெள்ளிக்கிழமை நீக்கப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணை முடியும் வரை குறித்த கடைகளை வழங்க நடவடிக்கை எடுக்கக் கூடாது எனத் தெரிவித்தே தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

கிளிநொச்சி நகரின் கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள பொதுச் சந்தையில் தங்களுக்கு கடைகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்து 15 வரையான வர்த்தகர்களால் கரைச்சிப் பிரதேச சபைக்கு எதிராகக் கடந்த நவம்பர் மாதம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதனையடுத்து நீதிமன்றத்தால் இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த தடையுத்தரவு நீடிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கின் எதிராளிகளான கரைச்சிப் பிரதேச சபையின் தலைவர் நா.குகராசா, கரைச்சிப் பிரதேச சபையின் செயலாளர் இ.கிருஷ்ணகுமார், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பி.சிவகுமார் ஆகியோர் சமுகமாகியிருந்தனர்.

இவர்கள் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி ம.கிறேசியன், குறித்த வழக்காளிகள் கடந்த 2008 ஆம் ஆண்டுக்கு முன்னரே சந்தைப் பகுதியில் வர்த்தக நிலையங்களை நடத்தி வந்திருந்தனர். ஆனால் தற்போது அம்பாள்குளத்தில் இயங்கி வரும் பொதுச் சந்தையில் எந்தவிதமான வியாபார நடவடிக்கைகளையும் இவர்கள் மேற்கொள்ளவில்லை. அம்பாள்குளம் பொதுச்சந்தையில் ஆரம்பத்தில் 350 இற்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். தற்போது சில வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டே உள்ளன.

இந்த நிலையில் இவர்கள் கடைகளைக் கோரி விண்ணப்பிக்கவில்லை. தற்போது புதிய கட்டடத் தொகுதியில் 295 கடைகள் மட்டுமே உள்ளன. இதில் முதற்கட்டமாக தற்போது அம்பாள்குளம் பகுதியில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருபவர்களுக்கு கடைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இவர்கள் உரிய முறையில் விண்ணப்பிக்கும் போது விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு எதிர்காலத்தில் கடைகளை வழங்க முடியும் என்று மன்றில் தெரிவித்தார்.

இதனை அடுத்து குறித்த தடையுத்தரவு நீக்கப்பட்டுள்ளது. (த-6)

## முல்லை. கடற்றொழிலாளருக்கு உபகரணம் வழங்க நடவடிக்கை

முல்லைத்தீவு,பெப்.9

முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஜே.சுதாகரன் தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சால் கடந்த வருடம் 30 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடற்றொழில் அமைச்சால் கடந்த வருடம் 30 மில்லியன் ஒதுக்கப்பட்டது. அதன் நிதியில் இருந்தே மீனவர்களுக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளன.

50 பயனாளிகளுக்கு 25 படகு இயந்திரம், 38 தூண்டில்கள், 40 படகுகள், 20 திசைகாட்டும் கருவிகள், 80 உயிர்காக்கும் அங்கிகள் ஆகியன வழங்கப்படவுள்ளன.

வன்னியில் இறுதிப் போரால் பாதிக்கப்பட்டு தொழில் உபகரணங்களை இழந்த நிலையில் உள்ள தொழிலாளர்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன.

அமைச்சின் நிதியால் மீனவர்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்ட 3 பொது நோக்கு மண்டபங்கள் எதிர்வரும் 14 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளன.

இரணைப்பாலை, நாயாறு, கொக்கிளாய் ஆகிய பிரதேசங்களில் மீனவர்களின் தனிமை கருதி பொது நோக்கு மண்டபங்கள் அமைக்கப்பட்டன.

இந்தக் கட்டடங்களை எதிர்வரும் 14 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டு பாவனையாளர்களிடம் கையளிக்கப்படவுள்ளன என்று மேலும் தெரிவித்தார். (ம-13)

### கிளிநொச்சியில் மாற்று வலுவுடையோரின் போட்டிகள் நாளை

கிளிநொச்சி, பெப்.9

கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுடையோருக்கான பரா ஒலிம் பிக் போட்டிகளுக்கான ஆயத்த நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெறும்.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே கலந்து கொள்வார்.

மாவட்டத்தைச் சேர்ந்த மாற்று ஆற்றல் உடையோர்களை கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## கோப்பாய் ம.வியில் நூற்றாண்டு விழா போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,பெப்.9

கோப்பாய் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படவுள்ள போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மரதன் ஓட்டம், கிரிக்கெட் சுற்றுப்போட்டி, வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளதால் கோப்பாய் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளும், கோப்பாய் பிரதேச நிர்வாகப் பிரிவுக்கு உட்பட்ட கழகங்களும் இந்தப் போட்டிகளில் பங்குபற்றலாம்.

கழகங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு வெவ்வேறு பிரிவுகளாக நடத்தப்படும். இந்தப் போட்டியில் பங்குபற்ற ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக பாடசாலையில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் என்று பாடசாலை அதிபர் க.வீரசிங்கம் கூறியுள்ளார். (ம-14)

## பரதநாட்டிய ஆற்றுகை

யாழ்ப்பாணம், பெப்.9

இந்தியத் துணைத் தூதரகமும் திருமறைக்கலா மன்றமும் இணைந்து பரத நாட்டிய ஆற்றுகையை நடத்தவுள்ளன.

இந்த நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நடன ஆற்றுகையில் திருமறைக் கலாமன்ற மாணவர்களின் நான்கு நடனங்கள் இடம்பெறும்.

(ம-13-51)



ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தில் மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலய அதிபர் திருமதி சி.சிவகுமாரன் சிரேஷ்ட மாணவி ஒருவருக்குச் சின்னம் சூட்டுகிறார். அருகில் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் நிற்கின்றனர். (ம-100)

## தென்மராட்சிப் பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பைச் செயற்படுத்துக

### வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்து

தென்மராட்சி, பெப்.9

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட அனைத்துப் பாடசாலைகளிலும் அரசால் அறிவிக்கப்பட்ட தேசிய டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தை அனுஷ்டிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 12 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ள தேசிய டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தில் பாடசாலை வளாகத்தில் சிரமதானப் பணிகளை மேற்

**பாடசாலை வளாகத்தில் துப்புரவை மேற்கொள்ளவும் அறிவுறுத்து**

கொண்டு சுத்தம் செய்வதன் மூலம் கொடிய தொற்று நோய்களான டெங்கு, மலேரியா போன்றவற்றை கட்டுப்படுத்த ஒத்துழைக்குமாறும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-9)

# 11 ஆயிரத்து 514 'பைந்' இரத்தம் 2012 இல் கொடையாளிகள் தானம்

## யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கி சேகரித்தது

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் 11 ஆயிரத்து 514 'பைந்' இரத்தம் யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவுக்கு கொடையாளிகளால் தானம் செய்யப்பட்டுள்ளது என்று வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

கொடையாளிகள் யாழ். போதனா வைத்தியசாலை

**நடமாடும் சேவைகள் மூலமும் இரத்தம் சேகரிக்கப்பட்டுள்ளது**

இரத்த வங்கிப் பிரிவுக்குச் சென்று 2 ஆயிரத்து 742 'பைந்' இரத்தம் தானம் செய்துள்ளனர். வங்கியினரால் நடமாடும் சேவை மூலமாக 4 ஆயிரத்து 186 'பைந்' இரத்தம் சேகரிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டுவரி மூலம் வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவினர் 6 ஆயிரத்து 928 பைந் இரத்தத்தைச் சேகரித்துள்ளனர்.

இது தவிர முல்லைத்தீவு வைத்தியசாலை இரத்த வங்கியால் ஆயிரத்து 707 'பைந்' இரத்தம் சேகரிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஊடாக 801 'பைந்' இரத்தம் சேகரிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி வைத்தியசாலை ஊடாக 287 'பைந்' இரத்தமும் தெல்லிப்பழை வைத்தியசாலை ஊடாக 153 'பைந்' இரத்த மும், வவுனியா வைத்திய சாலை இரத்த வங்கிப் பிரிவால் 343 'பைந்' இரத்தமும் பெறப்பட்டுள்ளது.

திருகோணமலை இரத்த வங்கியிலிருந்து 195 'பைந்' இரத்தமும், அநுராதபுரம் வைத்தியசாலை இரத்த வங்கியிலிருந்து 122 'பைந்' இரத்தமும் தேசிய இரத்த வங்கிப் பிரிவிலிருந்து 978 'பைந்' இரத்தமும் பெறப்பட்டுள்ளது என்று மேலும் கூறப்பட்டது. (ம-4)


## சைக்கிள்களுக்கு இலக்கத் தகடுகள்

தென்மராட்சி, பெப்.9

சாவகச்சேரி நகர சபை அலுவலகத்தில் சைக்கிள்களுக்கான இந்த வருடத்துக்குரிய இலக்கத் தகடுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இலக்கத் தகடு இன்றி சைக்கிள் பாவிப்பது சட்டப்படி குற்றம் என்பதால் சபை எல்லைக்குட்பட்ட அனைவரும் விரைவில் சைக்கிள்களுக்கான இலக்கத் தகடுகளைப் பெற்றுச் சைக்கிள்களில் பொருத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலக்கத் தகடுகள் இன்றி சைக்கிள் செலுத்துவோர் மீது சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)



சுழிபுரத்திலுள்ள சிவபூமி பாடசாலை வளாகத்தில் தொழில் பயிற்சிப் பிரிவு திறந்து வைக்கப்பட்டுள்ளது. மனிதநேய நிறுவனத் தலைவர் வி.கைலாசபிள்ளை தம்பதியினர் இதனைத் திறந்து வைத்தனர். இந்த நிகழ்வில் ரிஷி தொண்டுநாத சுவாமிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ம-86)

## குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிப்பு

### ஆனைக்கோட்டை வாசி நிரபராதி என்று விடுதலை

யாழ்ப்பாணம், பெப்.9

விடுதலைப் புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்றமை உட்பட இரண்டு குற்றச்சாட்டுகளில் பயங்கரவாதப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபருடையது என்று தெரிவிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் உண்மை விளம்பல் விசாரணையில் யாழ்.மேல் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டு அவர் விடுதலை செய்யப்பட்டார்.

யாழ். மேல் நீதிமன்றில் ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் இந்த வழக்கு தீர்ப்புக்காக நேற்று முன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

2006-2007 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் விடுதலைப் புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்ற இருவர் தொடர்பாக பொலிஸாருக்குத் தகவல் வழங்கத் தவறியமை, விடுதலைப் புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்றமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் ஆனைக்கோட்டை, 3 ஆம் கட்டையைச் சேர்ந்த திருநாவுக்கரசு சுரேஸ்ஆனந் என்பவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு கொழும்பு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை விளக்க மறியலில் வைக்க நீதிமன்றால் உத்தரவிடப்பட்டிருந்தது.

பின்னர் அவர் மீதான வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ். மேல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணையின் போது அந்த சந்தேக நபர் வழங்கியதாக தெரிவிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் உண்மை விளம்பல் விசாரணையின் போது நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டது.

அவருக்கு எதிராக வேறு எந்த ஆதாரமும் இல்லாததால் அவரை நிரபராதி என இனம் கண்டு யாழ். மேல் நீதி மன்று விடுதலை செய்தது. (ம-4)

## தந்தை கொலை வழக்கில் மகன் நிரபராதியென விடுவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.9

தந்தையை அடித்துக் கொலை செய்தமை தொடர்பான வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட வரை விசாரணைகளின்போது நிரபராதியாக இனங்கண்ட யாழ். மேல் நீதிமன்று நேற்று முன்தினம் அவரை விடுதலை செய்தது.

யாழ். மேல் நீதிமன்றில் ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் இந்த வழக்கு தீர்ப்புக்காக நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

கோண்டாவில் கிழக்கில் 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் செல்லையா கந்தையா என்பவர் அடித்துக் கொலை செய்யப்பட்டார்.

இந்தக் குற்றச்சாட்டில் கொலையுண்டவரின் மகனான க.உதயபதி என்பவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்தனர். யாழ்.நீதி மன்றில் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு சட்டமா அதிபர் திணைக் களத்தால் யாழ். மேல்நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட் டது.

வழக்கு விசாரணைகளின் பின்னர் ஆணையாளர் நேற்று முன்தினம் தீர்ப்பை வழங்கினார்.

வழக்கு தொடுநர் தரப்பு சாட்சியம் எதிரி மீது சந்தேகத்தை தோற்றுவிக்கும் அளவுக்கே அமைந்துள்ளது. சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவரை குற்றவியல் வழக்கில் குற்றவாளியாக காணமுடியாது.

குற்றவியல் வழக்கில் குற்றச்சாட்டை நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கும் பொறுப்பு எப்பொழுதும் வழக்கு தொடுநர் தரப்பையே சார்ந்தது.

இந்த நிலையில், இந்த வழக்கில் சந்தேக நபருக்கு எதிரான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை என்று தெரிவித்து குற்றஞ்சாட்டப்பட்ட உதயபதியை நிரபராதியாக இனங்கண்ட யாழ். மேல் நீதிமன்று அவரை விடுதலை செய்தது.(ம-4)

## மானிப்பாய் -காரைநகர் வீதி அகலிப்புப் பணிகள் விரைவில்

யாழ்ப்பாணம்,பெப்.9

மானிப்பாய் - காரைநகர் பிரதான வீதியின் அகலிப்பு மற்றும் புனரமைப்புப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்தனர்.

ஸ்ரான்லி வீதியில் இராசாவின் தோட்டச் சந்தியில் இருந்து ஓட்டுமடம் வரைக்குமான வீதிக்குக் காப்பெற் போடப்பட்டுள்ளது. எனினும் வீதி அகலிப்புச் செய்யப்படவில்லை.

தற்போது இந்த வீதியை அகலித்துப் புனரமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஓட்டுமடத்தில் இருந்து இந்த அகலிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும் மார்ச் மாதப் பகுதியில் இதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் கூறப்பட்டது. (ம-17)



நாகலாந்து மாநிலத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. திமாபுரில் தேர்தல் பிரசாரத்தில் நாகலாந்து பாரம்பரிய உடை அணிந்து பங்கேற்ற காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி.

## பெண்களை தொட்டால் 'ஷொக்' அடிக்கும்; விரைவில் வருகிறது பாதுகாப்புக் கருவி !

இந்தியாவில் அதிகரித்துவரும் பாலியல் தொல்லைகளில் இருந்து பெண்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பெண்களின் பாதுகாப்புக் கருவி ஒன்று சென்னை மாணவர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

திருவில்லிபுத்தூர் அருகே உள்ள கலசலிங்கம் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பிரிவில் 2ஆம் ஆண்டு மாணவர்களான மணிகண்டன் (20), பரத்கிரண் (20) ஆகியோரே அந்தக் கருவியை கண்டுபிடித்தனர். டில்லியில் கல்லூரி மாணவி ஓடும் பஸ்ஸில் வன்புணர்வுக்கு ஆளாகிய சம்பவத்தை அடுத்து, பெண்களின் பாதுகாப்புக்காக புதிய கருவியை கண்டுபிடிக்க இந்த மாணவர்கள் முடிவு செய்தனர்.

15 நாள்கள் முயற்சியில் கருவியை செய்து முடித்துள்ளனர். அதற்கு பெண்களின் பாதுகாப்புக் கருவி எனப் பெயரிட்டுள்ளனர்.

60 கிராம் நிறையுள்ள இந்தக் கருவியை பெண்கள் தலையில் கிளிப் போல் மாட்டிக் கொள்ளலாம். குடை, திறப்புச்சங்கிலி, கைத் தொலைபேசி, மணிக்கூடு ஆகியவற்றிலும் பொருத்திக் கொள்ளலாம்.

இந்தக் கருவியில் பற்றரிகள் உள்ளன. இதனை ஒருமுறை மின்னேற்றம் செய்தால் நீண்ட நாள்களுக்குத் தாக்குப்பிடிக்கும். இந்தக் கருவியில் 2 ஆளிகள் உள்ளன. முதல் ஆளியை அழுத்தினால் அபாய ஒலி எழுப்பும். இந்த ஒலி சுமார் 20 மீற்றர் தூரம் கேட்கும்.

கருவியை எதிரியின் உடலில் படும்படி வைத்து 2வது ஆளியை அழுத்தினால், அவர் மீது 1,700 வோல்ட் மின்சாரம் தாக்கிவிடும். அதனால் எதிரி நிலைகுலைந்துவிடுவார். ஆனால், அவரது உயிருக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது. (3)

## தி.மு.க. தலைவர் குறித்து கருத்து; நடிகை குஷ்பு மீது செருப்பு வீச்சு



தி.மு.கவின் அடுத்த தலைவர் குறித்து கருத்து வெளியிட்ட நடிகை குஷ்பு மீது செருப்பு வீசி த்தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தி.மு.கவுக்கு அடுத்த தலைவர் ஸ்டாலின்தான் என்று நாமே ஒரு முடிவுக்கு வந்து விடக்கூடாது. திமுக தலைவர் பதவிக்கு பொருத்த மானவர் யார் என்பதை பொதுக் குழுதான் முடிவு செய்யும். தலைவர் மட்டுமே முடிவு எடுத்துவிட்டால் அடுத்ததலைவர் தளபதியாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அது கட்சியில் யாராகவும் இருக்கலாம்'' என்று ஊடகங்களுக்கு பேட்டியளித்திருந்தார் குஷ்பு

அவரது இந்தப் பேட்டி தி.மு.கவினிடையே சலசலப்பை ஏற்படுத்தி இருந்தது.

இந்த நிலையில் சென்னை பட்டினப்பாக்கத்தில் உள்ள நடிகை குஷ்புவின் வீட்டின் மீது நேற்று சுமார் 20 பேர் கொண்ட கும்பல் தாக்குதல் நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது. அவர்கள் குஷ்புவுக்கு எதிராக கோஷமிட்டனர். திடீரென்று வீட்டின் மீது சரமாரியாக கல் வீசி விட்டு ஓடிவிட்டனர். இந்த தாக்குதலில் குஷ்பு வீட்டுக்குள் நிறுத்தி வைத்திருந்த கார் கண்ணாடிகள் உடைந்தன. மதில் சுவரில் இருந்த விளக்குகளின் கண்ணாடிகளும் உடைந்தன. கல் வீசியவர்கள் யார் என்று தெரியவில்லை.

இதேவேளை, குஷ்பு திருச்சி சென்றுள்ள நிலையில், அங்கு அவர் மீது நேற்று செருப்பு வீசி தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த நிலையில் தாக்குதல் தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய குஷ்பு, மேற்கூறிய பேட்டி தொடர்பாக சிலர் தவறாக புரிந்துகொண்டுள்ளதாகவும், தாக்குதல் நடத்தியவர்கள் யார்என்று தெரியவில்லை என்றும் கூறினார்.

# ஒன்றுபட்டு போராடியிருந்தால் ஈழத்தை வென்றிருக்க முடியும்

## கறுப்புச்சட்டை போராட்டத்தில் கருணாநிதி



சென்னை, பெப்.9

ஒன்றுபட்டு போராடியிருந்தால், தமிழ்ஈழத்தை வென்றிருக்க முடியும் என தி.மு.க தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார். சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நேற்று நடைபெற்ற 'கறுப்புச் சட்டை' ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதி உரையாற்றினார். அதன் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மொழியையும், தமிழ் மக்களையும் அழிக்க இலங்கை அரசு கங்கணம் கட்டி வருகின்றது.

ராஜபக்ஷவால் இலங்கையில் தமிழ் பெயர்கள் அழிக்கப்படுவதாக கூறிய கருணாநிதி இலங்கையில் பல ஊர்களின் தமிழ் பெயர்கள் சிங்கள பெயர்களாக மாற்றப்பட்டுள்ளதாகவும் குற்றஞ்சாட்டினார். ராஜபக்ஷவின் வருகையை கண்டித்தும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலுமே எமது இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது என்று கருணாநிதி கூறினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க.வினர் மற்றும் தமிழீழ ஆதரவு அமைப்பினர் பலரும் கறுப்புச்சட்டை அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டத்தில் திமுக ஸ்டாலின் தலைமையில் இந்தப் போராட்டம் நடைபெற்றது. இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டது தொடர்பாக ராஜபக்ஷ மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர். (3)

## மஹிந்த இந்தியாவுக்கு வருவதை ஆண்டவன் கூட ஏற்க மாட்டார்

### மதுரை ஆதீனம் அருணகிரிநாதர் தெரிவிப்பு

இலங்கை அதிபர் ராஜபக்ஷவை எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்தியாவுக்குள் வர அனுமதிக்கக் கூடாது. இலங்கையில் பல்லாயிரக் கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்த அவரை இந்தியாவுக்கு அழைப்பது தமிழர்களுக்கு செய்யும் தீங்காகும்; துரோகமாகும்.

இப்போது கூட அங்கு (இலங்கை) தமிழர்கள் நிம்மதியாக வாழ முடியவில்லை. தமிழர்களுக்கு துரோகம் செய்த ராஜபக்ஷ திருப்பதிக்கு வருவது நல்லது அல்ல என்று மதுரை ஆதீனம் அருணகிரிநாதர் தெரிவித்தார். அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் நூற்றுக்கணக்கான இந்து கோவில்களை இடித்த ராஜபக்ஷ மனசாட்சிக்கு விரோதமாக இந்தியாவுக்கு வருவதை வரவேற்பதையும், அவரை தரிசனம் செய்ய அனுமதிப்பதையும் தமிழர்களின் மனங்கள் ஏற்றுக் கொள்ளா. ஆண்டவன் கூட ஏற்றுக் கொள்ள மாட்டார். ராஜபக்ஷ இந்தியாவுக்கு வருவதை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று கூறினார். (3)

## டில்லியில் சீனப்பெண் மீது வன்புணர்வு

டில்லியில் சீனப்பெண்ணொருவர் பலாத்காரம் செய்யப்பட்டது குறித்து அந்த மாநில முதல்வர் ஷீலா தீட்சித் கவலையடைந்துள்ளார்.

சமீபகாலமாக டெல்லியில் அதிகரித்து வரும் பெண்களுக்கெதிரான பாலியல்கொடுமைகள், தலைநகரில் பெண்களுக்கு பாதுகாப்பு உண்டா?என்றகேள்வியை எழுப்புகிறது. இந்த நிலையில் தாரீக் ஷேக் என்பவரும் சீனப்பெண்ணும் நண்பர்களாக பழகி வந்துள்ளனர். சம்பவ தினத்தன்று இந்தப்பெண்ணை தாரீக் ஒரு விருந்துக்கு அழைத்து செல்ல அங்கு இருவரும் மது அருந்தியிருக்கின்றனர்.

இதனால் நிலை தடுமாறிய தாரீக் அந்தப்பெண்ணை வன்புணர்வு புரிந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து சீனப்பெண் பொலிஸாரிடம் முறையிட குற்றவாளி தாரிக் ஷேக்கை பொலிஸார் கைது செய்தனர். (3)

## மேதகு என்று அழைக்காதீர்கள்

### பிரணாப் வேண்டுகோள்



தன்னை மேதகு ஜனாதிபதி என்று அழைக்க வேண்டாம், மாண்புமிகு என்பதை மரியாதைச் சொல்லாக பயன்படுத்துமாறு பிரணாப் முகர்ஜி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதியை மேதகு என்ற மரியாதைச் சொல்லால் அழைப்பது வழக்கம். அதே போல, பிரதமர், முதல்வர்கள், அமைச்சர்கள் ஆகியோர் மாண்புமிகு என்ற மரியாதைச் சொல்லால் அழைக்கப்படுகின்றனர்.

மேதகு என்று தான் அழைக்கப்படுவதை பிரணாப் முகர்ஜி விரும்ப வில்லை. அரசுப் பதவிகளில் இருப்பவர்கள் அனைவரும் சமமாக கருதப்பட வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

எனவே மாண்புமிகு என்ற மரியாதைச் சொல்லால் அழைத்தாலே போதும் என்று பிரணாப் முகர்ஜி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் அனுப்பியுள்ள ஜனவரி 31 ஆம் திகதியிட்ட சுற்றறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: அனைத்து நிகழ்ச்சிகளிலும் மேதகு என்ற மரியாதைச் சொல்லால் அழைக்க வேண்டாம் என்று ஜனாதிபதி பிரணாப்முகர்ஜி அறிவித்துள்ளார்.

எனவே மேதகு என்ற வார்த்தைக்குப் பதிலாக மாண்புமிகு என்ற மரியாதைச் சொல்லை பயன்படுத்த வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கடிதம் அனைத்து அரசுத் துறைகளுக்கும் கடந்த 4 ஆம் திகதி கிடைத்துள்ளது. (3)

## பெண் கறுப்புப் பூனைகளே ஜெயலலிதாவுக்கு பாதுகாப்பு

தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கும், உத்தர பிரதேச முன்னாள் முதல்வர் மாயாவதிக்கும், பெண் கறுப்புப் பூனைப் படை பாதுகாப்பு அளிக்க; தேசிய பாதுகாப்புப் படை முடிவு செய்துள்ளது.

இதையடுத்து, அரசியல் கட்சி தலைவர்களின் பாதுகாப்பில் ஈடுபடும், முதல் பெண் கறுப்புப் பூனைப் படையினர் என்ற அந்தஸ்தை, இந்தப்படையினர் பெறுகின்றனர்.

நாட்டின் முக்கிய இடங்களின் பாதுகாப்பு, கடத்தப்பட்டவர்களை மீட்பது, முக்கிய அரசியல் தலைவர்களுக்கு பாதுகாப்பு ஆகிய பணிகளுக்காக, தேசிய பாதுகாப்புப் படை, 28 ஆண்டுகளுக்கு முன், உருவாக்கப்பட்டது. இதில், ஆண்கள் மட்டுமே, சிறப்புப்பயிற்சி அளிக்கப்பட்டு, கறுப்புப் பூனைப் படையினராக உருவாக்கப்பட்டு வந்தனர்.

முதல்முறையாக, பெண்களையும், பூனைப் படையினராக உருவாக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு, கடந்த ஆண்டு, ஒக்டோபர் மாதம், தேசிய பாதுகாப்புப் பணியில் சேர்க்கப்பட்டனர். பெண் பூனைப் படையினரை, நாட்டின், ''இசட் பிளஸ்' பிரிவு பாதுகாப்பில் இருக்கும், இரு பெண் தலைவர்களுக்கு பயன்படுத்த, தேசிய பாதுகாப்புப் படை முடிவு செய்துள்ளது. (3)

## இஸ்ரேல் செல்கிறார் ஒபாமா

வோஷிங்டன், பெப்.9

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மார்ச் மாத நடுப்பகுதியில் இஸ்ரேல் மற்றும் ஜோர்டான் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளில் சுற்றுப்பயணம் செய்ய உள்ளார் என்று வெள்ளைமாளிகை தெரிவித்துள்ளது. அந்தப் பயணத்தின்போது அவர் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் முக்கிய கலந்துரையாடலை நடத்துவார் என்றும் கூறப்படுகிறது.

இஸ்ரேல்-பாலஸ்தீனம் பிரச்சினை தொடர்பாகவே அந்தக் கலந்துரையாடல் அமையும் என்று கருதப்படுகிறது.(ற)

## ஸாம்பியாவில் விபத்து: 53 பேர் சாவு



லுசாகா, பெப் 9

ஆபிரிக்க நாடான ஸாம்பியாவில் பஸ்ஸும், கனரக வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் 53 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்தனர். ஸாம்பிய தலைநகர் லுசாகாவுக்கு அண்மையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குள்ளான பஸ்ஸில் 70 பேர் வரை பயணம் செய்துள்ளனர்.

விபத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)


### வடகொரியாவின் எதிர்ப்பையும் மீறி

## ஐ.நா. விதித்துள்ள தடையை தென்கொரியா செயற்படுத்தும்

சியோல், பெப். 9

வட கொரியா மீது ஐக்கிய நாடுகள் சபை விதித்த பொருளாதாரத் தடையை நடைமுறைப்படுத்தப் போவதாகத் தென் கொரியா நேற்று முன்தினம் அறிவித்தது.

வட கொரியா நீண்டதூரம் செலுத்தக் கூடிய ஏவுகணையைக் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் வெற்றிகரமாக சோதனை செய்தது. தற்போது அணு ஆயுதச் சோதனை விரைவில் நடத்தப்படும் என்றும் அறிவித்துள்ளது. அதனை அடுத்து அந்த நாட்டின் மீது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை பொருளாதாரத் தடை விதித்திருந்தது.



இந்தநிலையில், வட கொரியா மீது ஐ.நா. விதித்த தடையை தென் கொரியா நடைமுறைப்படுத்தும் என்று தென்கொரியாவின்நிதி அமைச்சர் தெரிவித்தார். எனினும் தடையை தென் கொரியா நடைமுறைப்படுத்தினால் கண்டிப்பாக எதிர்விளைவுகளை தென்கொரியா சந்திக்க நேரிடும் என்று வட கொரியா கடந்த மாதம் எச்சரிக்கை விடுத்திருந்தது. வடகொரியாவின் எச்சரிக்கையையும் மீறி தென் கொரியா இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதையடுத்து கொரிய பிராந்தியத்தில் பதற்றநிலை தோன்றியுள்ளது. (ற)

## சாதாரண மனிதனை போலவே நடமாடுகிறேன்

### – லஷ்கர் ஈ தொய்பா தலைவர் சயீத்

இஸ்லாமாபாத், பெப்.9

பாகிஸ்தானில் ஒரு சாதாரண மனிதனைப் போலவே நடமாடி வருகின்றேன் என்று லஷ்கர் ஈ தொய்பாவின் தலைவர் ஹபீஸ் சயீத் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

சயீத் குறித்துத் தகவல் தருவோருக்கு அமெரிக்கா 10 மில்லியன் டொலர் தருவதாக அமெரிக்கா அறிவித்துள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்,

நான் ஒரு சாதாரண மனிதனைப் போலத் தான் இயங்குகின்றேன். எனது விதி கடவுளின் கையில் உள்ளது. அமெரிக்காவிடம் அல்ல. பாகிஸ்தானில் உள்ள அனைத்து நீதிமன்றங்களில் இருந்தும் எனது பெயர் குற்றச்செயல்களில் இருந்து நீக்கப் பட்டுள்ளது. அமெரிக்கா ஏன் பாகிஸ்தானின் நீதி விசாரணைகளை மதிக்கவில்லை?' என்று தெரிவித்துள்ளார். (ற)

### எதிர்க்கட்சித் தலைவர் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து

## துனிசியாவில் மக்கள் போராட்டம்; ஆட்சியைக் கலைத்தார் பிரதமர்

துனிஸ், பெப்.9

பிரதான எதிர்க்கட்சித் தலைவர் சுட்டுக் கொல்லப் பட்டதை அடுத்து துனிசியாவில் ஆட்சி கலைக்கப்பட்டுள்ளது. பிரதமர் ஹம்தி ஜெபாலி, தன் தலைமையில் இயங்கும் ஆட்சியைக் கலைப்பதாக அறிவித்துள்ளார். இடைக்கால அமைச்சரவை அமைக்கப்பட்டு விரைவில் தேர்தல் நடத்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.



ஆபிரிக்க நாடான துனிசியாவில் 2 ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் கிளர்ச்சி நடத்தி ஆட்சியைக் கைப்பற்றினர். பின்னர் நடத்தப்பட்ட தேர்தலில் அதிக பெரும்பான்மையைப் பெற்று ஹம்தி ஜெபாலி பிரதமரானார். இவர் ஆட்சிக்கு வந்த 16 மாதங்களிலேயே ஜெபாலிக்கும், கூட்டணி மற்றும் எதிர்க்கட்சிகளுக்குமிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன.

அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க பல வாரமாக பேச்சுக்கள் நடைபெற்று வந்த போதும் உடன்பாடுகள் எதுவும் இதுவரை எட்டப்படவில்லை.

இந்தநிலையில் முக்கிய எதிர்க்கட்சித் தலைவரான ஷோக்ரி பிலாட் அவரது வீட்டுக்கு அருகிலேயே துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்யப்பட்டார். அதை அடுத்து துனிசியாவில் நேற்று முன்தினம் வன்முறை வெடித்தது. ஆயிரக்கணக்கானோர் தலைநகர் உட்பட பல நகரங்களில் வீதிகளில் திரண்டு போராட்டம் நடத்தினர். பல இடங்களில் பொலிஸ் நிலையங்கள், கார்கள் உள்ளிட்ட ஏராளமான வாகனங்கள் தீவைத்து எரிக்கப்பட்டன.

நாடு முழுவதும் வன்முறைகள் பரவும் என்று அஞ்சப்பட்டது. அதையடுத்தே பிரதமரின் ஆட்சி கலைப்பு பற்றிய அறிவிப்பு வெளியாகியுள்ளது. பிரதமரின் இந்த முடிவை கூட்டணிக் கட்சிகளும், முக்கிய எதிர்க்கட்சிகளும் வரவேற்றுள்ளன. பிரதமரின் இந்த முடிவால் வன்முறைகள் தணியும் என்று கூறப்படுகிறது. (ற)

## சொக்லெட் சுவையுடன் தபால்தலைகள்

பெல்ஜியம், பெப்.9

பெல்ஜியம் தபால் துறையினர் வாடிக்கையாளரைக் கவரும் விதத்தில் புதுமையான தபால்தலை ஒன்றை அறிமுகம் செய்திருக்கிறார்கள். அந்தத் தபால் தலையின் பின்புறமுள்ள பசையானது சொக்லெட் சுவை கொண்டதாக இருக்கும்.

நாம் நாவில் தடவி ஒட்டும் போது அதன் சுவையை அனுபவிக்க முடியும். 5 விதமாக வெளியிடப்படும் இந்த தபால் தலைகளில் சொக்லெட்டின் பல்வேறு சுவைகள் அடங்கியிருக்கும். அதன் மூலம் வாடிக்கையாளரைக் கவர முடியும் என்று கூறப்படுகிறது. (ற)

## டிரோன் விமானத் தாக்குதல்கள் சட்டரீதியாகச் சரியானவையே

### வெள்ளை மாளிகை விளக்கமளிப்பு

வோஷிங்டன், பெப்.9

தீவிரவாதிகளிடம் இருந்து அமெரிக்க மக்களைக் காப்பாற்ற வேண்டும். அதனடிப்படையில் அமெரிக்காவின் ஆளில்லா விமானத் தாக்குதல்கள் சரியானதே. அமெரிக்காவுக்கு எதிராக ஆயுதத்தைத் தூக்குபவர்கள் மீது கண்டிப்பாக பதில் தாக்குதல் நடத்தப்படும்.

இவ்வாறு தெரிவித்துள்ளது வெள்ளை மாளிகை.

அமெரிக்கா தீவிரவாதிகள் மேல் டிரோன் எனப்படும் ஆளிலலா விமானத் தாக்குதல்களை நடத்தி வருகிறது. டிரோன் விமானங்கள் எல்லை தாண்டி பல்வேறு நாடுகளில் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன. அதற்குப் பல நாடுகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன. இந்த நிலையிலேயே அமெரிக்கா இவ்வாறு விளக்கமளித்துள்ளது.

இதுகுறித்து வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜே கேர்னே தெரிவிக்கும்போது:-

தீவிரவாதிகள் மீது ஆளில்லா விமானங்கள் மூலம் நடத்தப்படும் தாக்குதல்கள் சட்டப்படி சரியானதே. பயங்கரவாதத்துக்கு எதிராக நடத்தப்படும் இத்தகைய தாக்குதல்கள் விவேகமானவை. அவ்வாறான தாக்குதல்கள் மூலமே பயங்கரவாதிகளிடமிருந்து அமெரிக்க மக்களைக் காப்பாற்ற முடியும். அமெரிக்காவுக்கு எதிராகத் துப்பாக்கியைத் தூக்குபவர்கள் மீது கண்டிப்பாக பதில் தாக்குதல் நடத்தப்படும் - என்று தெரிவித்தார்.

இதேவேளை, ஆளில்லா விமானத் தாக்குதல்கள் தொடர்பான விவரங்களை நாடாளுமன்றில் பகிரங்கப்படுத்த ஜனாதிபதி ஒபாமா முடிவெடுத்துள்ளார் என்று கூறப்படுகிறது. (ற)

## மியன்மாரில் தொடரும் வன்முறைகள் 10,000 இற்கு மேற்பட்டோர் இடம்பெயர்வு

ரங்கூன், பெப்.9

மியன்மாரின் சில பகுதிகளில் ஏற்பட்ட வன்முறைகளை அடுத்து ஆறாயிரத்துக்கும் அதிகமானவர்கள் தாய்லாந்தை சென்றடைந்துள்ளனர்.

மியன்மாரில் இரண்டு மதக்குழுக்களுக்கு இடையில் தொடரும் மோதல்களால் வன்முறைகளும் அதிகரித்துவருகின்றன. அதையடுத்தே மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர்.

மியன்மாரின் மேற்குப் பிராந்தியமான ரக்ஹைன் பகுதியில் வாழும் முஸ்லிம் மக்களே இடம்பெயர்ந்துள்ளதாக தாய்லாந்தின் பாதுகாப்பு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

வன்முறைகள் காரணமாக 10 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் உள்ளக இடம் பெயர்வுகளுக்கு ஆளாகினர் என்று கூறப்படுகிறது.(ற)

### யுரேனியம் செறிவூட்டல் விவகாரம்

## அமெ. அழைப்பை நிராகரித்தது ஈரான்

தெஹ்ரான், பெப்.9

யுரேனியம் செறிவூட்டல் விவகாரம் தொடர்பாகப் நேரடிப் பேச்சுகளில் ஈடுபடலாம் என்று அமெரிக்கா விடுத்திருந்த அழைப்பை நிராகரித்தது ஈரான்.

ஈரான் அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபட்டு வருவதாக சர்வதேச நாடுகள்-குற்றஞ்சாட்டி வருகின்றன. எனினும் ஆக்க பூர்வ நடவடிக்கைகளுக்காகவே யுரேனியம் செறிவூட்டல் நடை பெற்றுவருவதாக ஈரான் தெரிவித்து வந்தது. அதையடுத்து அந்த நாட்டின் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்தது. எனினும் ஈரான் தொடர்ந்து யுரோனியம் செறிவூட்டல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.



இந்த நிலையில் இவ்விடயங்கள் தொடர்பாக நேரடியாகத் தம்முடன் பேச்சுக்களில் ஈடுபடுமாறு ஈரானுக்கு அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோ பிடன் கடந்த வாரம் அழைப்பு விடுத்தார். அதற்கு ஈரானின் தலைவரான அயதுல்லா அலி கோமேனி தனது இணைய தள பக்கத்தில் பதிலளித்துள்ளார்.

அவரின் அந்த பதிலில்:-

ஈரானுக்கு எதிராக துப்பாக்கியை பிடித்தவாறு பேச்சுக்கு வா அல்லது கொன்று விடுவேன் என்று சொல்வது போல் இருக்கிறது அமெரிக்காவின் செயற்பாடு. அமெரிக்காவின் நிர்ப்பந்தத்திற்கு அடிபணிந்து பேச்சுக்கு வர மாட்டோம்- என்று கூறியுள்ளார். (ற)

## ஒரு குழந்தை திட்டத்தால் உயிரிழந்தது குழந்தை

பிஜிங், பெப்.9

சீனாவில் மக்கள் தொகை கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கும் பெற்றோருக்கும் இடையே இடம்பெற்ற இழுபறியில் ஒரு வயதுக் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்தது.

இந்தச் சம்பவம் சீனாவின் ஷிஜியாங் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சீனாவில் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தில் கடந்த 1979ஆம் ஆண்டு முதல் 'ஒரு குழந்தை திட்டம்' நடைமுறையில் உள்ளது. அதன்படி நகர்ப் புறங்களில் இருக்கும் தம்பதிகள் ஒரு குழந்தை மட்டும் தான் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அதனை மீறுபவர்களுக்கு அபராதமும், சிறைத்தண்டனையும் விதிக்கப்படுகிறது.

இந்தநிலையில் கடந்த 4ஆம் திகதி ஷிஜியாங் பகுதி தம்பதியினரிடம் மூன்றாவது குழந்தை பெற்றதற்காக அபராதத் தொகை கேட்டு சீன மக்கள் தொகை கட்டுப்பாட்டுத்துறை அதிகாரிகள் தகராறு செய்தனர்.

அப்போது ஏற்பட்ட இழுபறியில் பெற்றோர் கையில் இருந்து தவறி விழுந்த 13 மாத ஆண் குழந்தை மீது அதிகாரிகள் வந்த வாகனம் ஏறியது. அதில் அந்தக் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்தது. (ற)

# அறுபதாவது அகவை நிறைவில் - மணிவிழா வாழ்த்து

## தீவகக் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருந்து இந்த வலயத்தில் 9½ வருட சேவை நிறைவில் ஓய்வு பெறும் திருவாளர் ஐயாத்துரை புவனேந்திரன் அவர்களின்

# சேவை நலன் பாராட்டு விழா - 09.02.2013



### தன்பணி சிறக்கப் பணி செய்தவர்



திரு ஐயாத்துரை புவனேந்திரன் அவர்கள் ஆசிரியராகக் கல்விப் புலத்தில் கால்பதித்து இருபத்தாறு வருடம் சேவையாற்றி கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராகவும் அதிபரா கவும் ஐந்து வருடங்கள் சேவையாற்றி பிரதிக் கல்விப்பணிப்பாளராக ஒன்பது வருடங்கள் கல்வி வலயத்தில் கடமையாற்றி தனது சிறப்பான சேவை மூலம் கல்விச் சமூகத்தில் மிகவும் நன் மதிப்பைப் பெற்றவர்.

இவருக்கான பதவியுயர்வு பற்றி இவரைத் தவிர ஏனையோர் கூறிய போதும் அதைப்பற்றி அலட்டிக் கொள்ளாது தமது பணியைச் செவ்வனே செய்து வந்தமை போற்றத்தக்கது. இவரது ஓய்வுகாலம் சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்திக் கின்றேன்.

இ.இளங்கோவன்
கௌரவ ஆளுநரின் செயலாளர்.

### வாழ்த்துச் செய்தி



அகவை அறுபதில் ஓய்வுபெற்று மணி விழாக் கொண்டாடும் ஐ. புவனேந்திரன் அவர்களை வாழ்த்து வதில் பேருவகையடைகிறேன். கல்வியில் முதுதத்துவமாணிப் பட்டம்பெற்றுள்ள இவர் ஆசிரியராக, விரிவுரையாளராக, பிரதிக்கல்விப் பணிப்பாளராக கடந்த நாற்பது ஆண்டு காலம் சீரிய பணியாற்றியுள்ளார். பல்வேறு அறிவியல் சார்ந்தநூல்களையும் வெளியீடு செய்து அனைவரது பாராட்டுக் களையும் இவர் பெற்றுள்ளார்.இவர் தனது ஓய்வுக்காலத்தில் கல்விச் சேவையையும் சமூக சேவையையும் ஆற்றுவதற்கும் குடும்பத்தினருடன் சந்தோஷமாக வாழவும் எல்லாம் வல்ல பரம் பொருள் அருள் புரிவாராக.

ப.விக்னேஸ்வரன், உதவிச் செயலாளர்,
வட மாகாணக் கல்வி அமைச்சு, யாழ்ப்பாணம்.

### வாழ்த்துரை

இருபதாம் அகவையில் ஆசிரியராகத் தடம் பதித்து பல்வேறு பதவிகளை அலங்கரித்து மணி விழாக்காணும் ஐ.புவனேந்திரன் அவர்களை வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி யடைகின்றேன்.

ஐ.புவனேந்திரன் 1972 ஆம் ஆண்டு நுவரெலியா மாவட்டதிலுள்ள கிறேற் வெஸ்ரன் தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராக நியமனம் பெற்று 26 வருடங்கள் இலங்கையின் பல பாகங்களிலும் கடமையாற்றிய பெருமைக்குரியவர். அவரது அயராத உழைப்பும் தளராத பணியும் காரணமாக 1999 ஆம் ஆண்டிலே கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராகப் பதவியுயர்வு பெற்றார். ஆசிரியர் கலாசாலையிற் கடமையாற்றிய நான்கு வருடங்களிலும் தனது பாதையிலே நல்லாசிரியர் பலரை உரு வாக்கினார். 2003 ஆம் ஆண்டு தீவக வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்று அப்பிரதேச ஏழை மாணவர்களின் கல்விக்கு வலுவூட்டினார். சுமார் நான்கு தசாப்த காலம் கல்விப்புலத்திலே கனதியான பணியாற்றி மணிவிழாக்காணும் திரு.ஐ.புவனேந்திரன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறேன்.

வ. செல்வராசா
மாகாணக் கல்விப் பணிப்பாளர், வட மாகாணம்.

### வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



ஆசிரியராய்,விரிவுரையாளராய், பிரதிக் கல்விப் பணிப்பாளராய் இருந்து இன்று அகவை அறுபது கண்டு சேவையில் இருந்து ஓய்வு பெறும் திரு.ஐ.புவனேந்திரன் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்விக்கான வசதிகளையும் வாய்ப்புக் களையும் விரிவு படுத்தும் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் அதிகரித்து வரும் வேளையில், கல்வி விளைவுகளை அடிப்படையாகக் கொண்டு விரிவாக்கங்களை மேற் கொள்வதற்குரிய முக்கிய அடிப்படைகளில் ஒன்றாக மாண வர்களின் கற்றல் அடைவுகள் பயன்படுத்தப்படு கின்றன. இதனால் அடைவு மட்டங்களை உயர்த்துவதற்கு பாடசாலை களுடன் இணைந்த சகல தரப்பி னரும் தம்மாலான முழுப் பங்களிப்பையும் வழங்க வேண்டும் என்ற சிந்தனையைக் கொடுக்க முனைப்புடன் செயற்பட்ட நற் பணிப்பாளராக இவரை நாம் காண்கின்றோம். இவர் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் இவரது சமூகப் பணிகள் சிறக்க இறைவன் இவருக்கு நீண்ட ஆயுளை அளித்து சிறப்பாக வாழ வாழ்த்து கின்றேன்.

தி.ஜோன் குயின்ரஸ்
வலயக் கல்விப் பணிப்பாளர்,தீவகம்.

### வாழ்த்துச் செய்தி



தீவகக் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடந்த ஒன்பதரை வருடங்களாக சிறப்பாகக் கடமையாற்றி அரசசேவையிலிருந்து ஓய்வு பெறும் உயர்திரு.ஐயாத்துரை புவனேந்திரன் அவர்களின் சேவையினைப் பாராட்டி வாழ்த்து வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். கடந்த நாற்பது வருடங்களாகத் கல்விப்பணியாற்றிய கலைப் பட்டதாரியான இவர் கல்வியில் முதுதத்துவமாணிப் பட்டத்தினைக் கொண்ட வர். ஆசிரியராக, விரிவுரையாளராக, கல்வி நிர்வாக சேவை அலுவலராக தனது விடா முயற்சியினால் உயர்ந்தவர். கண்டிப்பு மிக்க ஒரு சிறந்த நிர்வாகி.

இவரது சேவையைப் பாராட்டி வாழ்த்தும் இந்த வேளையில், இவர் தனது ஓய்வுக் காலத்தில் நீண்ட ஆயுளுடன் தனது குடும் பத்துடன் சீரும்சிறப்புமாக வாழவும் சமய, சமூக, கல்விப்பணி யில் தொடர்ந்து பணியாற்றவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வ.இராதாக்கிருஷ்ணன்
ஓய்வு நிலை வலயக்கல்விப்பணிப்பாளர், தீவகக்கல்வி வலயம்.

### சேவை விவரம்

| | |
|---|---|
| 1. நு/கிறேற் வெஸ்ரன் தமிழ் வித்தியாலயம் | - 1972.09.01 - 1981.02.12 |
| 2. யா/கோப்பாய் ஆசிரிய கலாசாலை (ஆசிரிய பயிற்சி) | - 1981.02.13 - 1982.06.30 |
| 3. மு/கொக்கிளாய் தமிழ் வித்தியாலயம் | - 1982.07.01 - 1982.08.19 |
| 4. நு/லிந்துல சரஸ்வதி ம.ம.வி | - 1982.08.20 - 1984.08.31 |
| 5. யா/ உயரப்புலம் மெ.மி.அ.த.க | - 1984.09.01 - 1987.02.15 |
| 6. யா/கோண்டாவில் இராமகிருஸ்ண வித்தியாலயம் | - 1987.02.16 - 1987.03.16 |
| 7. யா/ஆனைக்கோட்டை றோ.க | - 1987.03.17 - 1988.01.31 |
| 8. யா/நல்லூர் இ.த.பெண்கள் பாடசாலை | - 1988.02.01 - 1992.01.31 |
| 9. யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி | - 1992.02.01 - 1999.03.04 |
| **விரிவுரையாளர்** | |
| கோப்பாய் ஆசிரிய கலாசாலை | - 1999.03.05 - 2002.03.25 |
| **பிரதி அதிபர்** | |
| கோப்பாய் ஆசிரிய கலாசாலை | - 2002.03.26 - 2003.07.15 |
| **பிரதிக் கல்விப் பணிப்பாளர்** | |
| தீவகக் கல்வி வலயம் | - 2003.07.16 - 2013.02.07 |

### தளராத மனவலிமை படைத்த செயல்வீரன்



ஐயாத்துரை புவனேந்திரனது கல்வியிலாளர் பணி தொடர்பில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை பெருமை அடைகின்றது. நன்கு திட்டமிட்டு ஆசிரிய, மாணவர்களுடைய வாண்மை விருத்தியை மிகவும் சிறப்பாக நிறைவேற்றியவர்.

கடின உழைப்பும் தளராத மனவலிமையும் சரியெனப்படுவதை சட்டெனச் சொல்கின்ற குணாதிசயமுங் கொண்டவர், கல்விப் புலத்தினர்க்கு நல்ல ஆலோசகராக விளங்கியவர். பன்முக ஆளுமையுடைய ஓர் ஆசிரியராக, கல்வியியலாளராக, கல்வி நிர்வாகி யாக சிறப்பான பணியாற்றி அகவை அறுபதை பூர்த்தி செய்கின்ற ஐ.புவனேந்திரனின் எதிர் காலம் மகிழ்வும் நலமும் கொண்டதாக அமைய பிரார்த்திக்கின்றேன்.

வே.கா. கணபதிப்பிள்ளை இ.க.நி.சேவை
அதிபர்,கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

### வாழ்த்துரை



தீவகக்கல்வி வலயத்தில் சுமார் பத்து வருடங் களாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமை யாற்றி இன்று மணிவிழாக்காணும் ஐ. புவனேந்திரன் அவர்களை எமது வலயப்பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள்சார்பில்வாழ்த்துவதில் பெருமகிழ்வு அடை கின்றேன்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டைத் தனது அணி கலன் களாக அணிந்து கொண்ட ஒரு பண்பாளன். தற்துணிவுடன் செயலாற்றும் செயல்வீரர். சிறந்த நிர்வாகியாக வலயத்தை வழி நடத்திய திருவாளர் ஐ.புவனேந்திரன் தனது ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்புமாக வாழ இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

ச.பாஸ்கரன் (கல்விமுகாமைத்துவம்),
பிரதிக்கல்விப்பணிப்பாளர்.

### வாழ்க பல்லாண்டு



எங்கள் மணிவிழா நாயகன் திரு. ஐயாத் துரை புவனேந்திரன் அவர்களை தீவக வலய கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் சார்பில் வாழ்த்துவதில் பெருமையும், மகிழ்ச்சியும் அடை கின்றேன். இவர் யாழ். மத்திய கல்லூரியில் நல் லாசிரியராகவும் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் கல்வி உளவியல் விரிவுரையாளராகவும், சீரிய பணியாற்றி, பல்லா யிரம் நல்மாணவர்களையும், நல்லா சிரியர்களையும், உருவாக் கிய பேறு பெற்றவர். சரியான நேரத்தில் சரியான முடிவை, விரைவாக எடுக்கும் சாணக்கியமிக்க இவர் பல்லாண்டு காலம் சிறப்புடனும், மகிழ்வுடனும் நலமே வாழ இறைவனைப் பிரார்த் திக்கின்றேன்.

கல்விக் கோட்டம், காரைநகர். கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
ப.ஸ்ரீவிக்னேஸ்வரன்

### அர்ப்பணிப்பான செயல் வீரன்



மாணவர்களின் கல்வியை அடிப்படை யாகக் கொண்டு அதனை செம்மைப்படுத்துவதற்கான தொடர்புறு ஆளணியினரின் செயற்பாடுகளை மையப்படுத்தி திருவாளர் ஐ.புவனேந்திரன் தனது சேவையை கடந்த 9 ½ வருடங்களாக தீவகத்தில் வழங்கி இன்று ஓய்வுபெறும் இவ்வேளையில் வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடை கின்றேன்.

செயற்பாடுகளின் தடத்தின் அடிப்படையில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளித்து செயற் பட்டவர். தடைகள் எவை வந்தபோதும் தங்கள் கொள் கையில் விட்டுக் கொடுக்காத சிறந்த நிர்வாகியாகவும் வழி காட் டியாா கவும் செயற்பட்ட இவர், ஓய்வுபெறும் இந்நாளில் நிறைவுந்த வாழ்வு வாழ்வதற்கு வாழ்த்துகின்றோம்.

வே.திருச்செல்வன்,
ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர்,வேலணை.

### வாழ்த்துச் செய்தி

எமது கல்வி வலயத்தில் கடந்த ஒன்பதரை வருடங்களாக பிரதிக்கல்விப் பணிப்பாளராக இருந்து அரும்பணியாற்றிய திருவாளர் ஐயாத்துரை புவனேந்திரன் அவர்கள் மணிவிழா காண் பதனையிட்டு பெரு மகிழ்வு அடைகின்றேன்.

ஆசிரியராக கல்விப் புலத்தில் தடம் பதித்து, ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராகி பின் பிரதி அதிபராய் அரும் பணியாற்றி கல்வி நிர்வாக சேவையில் உள்வாங்கப்பட்டு தீவகக் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பதவியில் உயர்ந்தவர். ஓய்வுக் காலத்தில் மன உறுதியமைந்த வராக, உடல், உள ஆரோக்கியத்துடன் குடும்பத்தாருடன் குதூகலித்து வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ நயினை நாகபூஷணி அம்பிகையின் பாதம் பணிகின்றேன்.

"வாழ்க வளமுடன்"

திரு. வி.தனிநாயகம்
உதவிக்கல்விப் பணிப்பாளர்,
ஆரம்பக்கல்வி, தீவக வலயம்.

### வாழ்த்துச் செய்தி




கடந்த ஒன்பதரை வருடங்களாக எமது கல்வி வலயத்தில் கல்விப் பணிபுரிந்து மணிவிழாக்காணும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு ஐ.புவ னேந்திரன் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி எழுது வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இவர் தமது கல்விச் சேவையிலே விசுவாசமாகவும் துடிப்பாகவும் கடமைபுரிந்ததோடு மட்டு மல்லாமல் கற்றல், கற்பித்தல் செயற் பாடுகளுக்கு முதன்மை கொடுத்து தீவக மாணவர் கல்வியில் உன்னத நிலையை அடைய வேண்டுமென அரும் பாடுபட்டவர்.

இவ்வாறான நல்மனம் படைத்த இவர் அறுபது வயதினில் ஆறுதல் தேவை என்பதற்கு இணங்க ஓய்வு பெறுகிறார். இவ் வேளையிலே தனது குடும்பத்தாருடன் மகிழ்வோடு பல்லாண்டு காலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திருமதி பவுஸ்டாதேவி அரசரத்தினம்,
ஆசிரிய ஆலோசகர்.

### கடமைவீரன் வாழ்க



எமது தீவகக் கல்வி வலயத்தில் நீண்ட காலமாக பிரதிக்கல்விப் பணிப்பாளராகச் சிறந்த முறை யில் சேவை ஆற்றி இன்று ஓய்வு பெற்றுச் செல்லும் உயர்திரு ஐ.புவனேந்திரன் அவர்கள் சிறந்த நிர் வாகி ஆவார். இவர் ஆசிரியராகப் பணி யாற்றி பல நன் மாணாக்கரை உருவாக்கி, அகமகிழ்ந்த வேளையில் இவருடைய கல்வித் திறமை காரணமாக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாள ராக நியமனம் பெற் றார். அக் காலத்தில் ஆசிரியர்களைக் கடமை உணர்வுடையோராகப் பயிற்றுவித்து உருவாக்கினார்.

"கல்விப் பணியே கடவுள் பணி" என்ற உயரிய சிந்தனை ஒன்றையே கொண்ட இவரையே தீவகக் கல்வி வலயம் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பெற்றுக் கொண்டது.

தான் கல்விப் பணியாற்றிய மனநிறைவோடு இளைப்பாறும் இவரது ஓய்வுக்காலம் நல்ல முறையில் அமையவும் குடும்பம் சிறக்கவும் நீண்டகாலம் வாழவும் எல்லாம் வல்ல எம் பிராட்டி யாகிய நயினை நாகபூஷணியை வேண்டிப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

சோ.குகனேசன், அதிபர், யா/நயினாதீவு ம.வி.

# O/L மாணவர்களுக்கு மாபெரும் நற்செய்தி

O/L 2013/2014
வெற்றிப்படி

## பெப்ரவரி 15 முதல்...

நாடு பூராகவுமுள்ள பிரபல்யமான வளவாளர்களின்
ஒன்றிணைந்த தயாரிப்பில் உருவான



# O/L வெற்றிப்படி 2013

## தரம் 10, 11

## மாணவர்களுக்கானது 2014

முற்றிலும் புதிய பாடத்திட்டத்தைத் தழுவியது

பரீட்சையில் சித்தியடைய அவசியமான
இருவாரகால பயிற்சிகளைத் தாங்கிவரும் தனித்துவமான கையேடு

பரீட்சை நோக்கிய வழிகாட்டல், மாதிரி வினாத்தாள்கள் உள்ளடங்கலாக

- தமிழ்மொழியும் இலக்கியமும்
- கணிதம்
- விஞ்ஞானம்
- வரலாறு, வர்த்தகம்
- ஆங்கிலம்
- தகவல் தொழில்நுட்பம்

மாதம் இருமுறை உங்கள் கைகளில்

உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்

**30/= இல்**
**பரிபூரண பலன்**

01 ஆம், 15 ஆம் திகதிகளில்

பிரதான புத்தகசாலைகளிலும், சுடர்ஒளி, உதயன் பத்திரிகை முகவர்களிடமும் முற்பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்

### இக்கையேட்டுக்கு பங்களிக்கும் பாராட்டுக்குரிய முன்னணி வளவாளர் சேவையணி



கணிதம் · வர்த்தகம் · தமிழ் · ஆங்கிலம் · விஞ்ஞானம் · ICT · வரலாறு · ஆங்கிலம் · சிங்களம் · தமிழ்

எஸ். சுந்தரலிங்கம் கொழும்பு | சீ. அற்புதராஜா யாழ்ப்பாணம் | சி. நவநீதன் புலோலி | எம். கனகசுந்தரம் வவுனியா | எம். முஜீப்டீன் கல்முனை | எம். ஜமால்டீன் புத்தளம் | ஆர். ஜனதன் கொழும்பு | சி. ஜெகன் வவுனியா | சீ. யோகேஸ்வரன் திருமலை | கே. பிரதீபா கொழும்பு | வீ. அரவிந்தன் யாழ்ப்பாணம் | ஆர். மொஹிடீன் கொழும்பு

எஸ். சதீஸ்குமார் மட்டக்களப்பு | என். கேதீஸ்வரன் சாவகச்சேரி | எல். செய்நுடீன் அக்கரைப்பற்று | ஏ. ஹபீப் சம்மாந்துறை | சீ. ஜோன்ஷன் மன்னார் | எம். மன்சூர் குருநாகல் | ஜே. கிங்ஸிலி கம்பளை | எம். தப்ஸார் மருதமுனை | எச். பத்திரன குருநாகல் | எப். றோஹாகன் வவுனியா | கே. முருத்தன் மட்டக்களப்பு | எம். சித்திக் நுவரெலியா

எஸ். கேசவன் வவுனியா | எஸ். கோபிநாத் யாழ்ப்பாணம் | எஸ். பிரகலாதன் கைதடி | எம். மபாஸ் நிந்தவூர் | சீ. ரவி கொழும்பு | எம். பஷ்லுர்ராஜா மல்வானை | எச். சமீருதீன் கொழும்பு | எம். ஜிப்ரி கொழும்பு | எம். றயீஸ் புத்தளம் | எஸ். பஸ்மி குருநாகல் | பீ. உதயரூபன் மட்டக்களப்பு | எம். குமரன் யாழ்ப்பாணம்

எம். இஜாஸ் கொழும்பு | த. அகிலன் திருகோணமலை | எம். பார்த்தீபன் சாவகச்சேரி | கே. இளங்கோவன் வவுனியா | எஸ். சந்திரன் யாழ்ப்பாணம் | வை. அருட்செல்வம் யாழ்ப்பாணம் | வி. முரளி கொழும்பு | எம். பஷீர் கண்டி | எம். மர்ஸூக் மருதமுனை | கே. மோகன் காரைதீவு | எம்.றிம்ஸிக்கான் புத்தளம்

எஸ். லைபலாம் வரலாறு கொழும்பு
ஏ. ஆர்த்திகன் தமிழ் கொழும்பு

வினைத்திறன்மிக்க ஆசிரியர்களின் பல்கோண சிந்தனைகளினால் உருவான வினாக்களை பயிற்சி செய்ய ஓர் அரிய சந்தர்ப்பம்

வெளியீடு :
சுடர் ஒளி - கல்விச் சுடர்
கொழும்பு - 14.

| | |
|---|---|
| ஆசிரியர் பீடம் | : 011 5738855 / 071 4273035 / 077 2374191 |
| விநியோகப்பிரிவு | : 011 5737592 / 011 5737593 / 071 6850006 |
| வடமாகாண விநியோகப்பிரிவு | : 021 5677222 / 071 6182182 / 077 2487653 |

Art by - S.K.Ruban

## விழாமல் எழுந்திரு! விழுந்தாலும் எழுந்திரு!!

## உங்கள் பரீட்சை வெற்றியே வெற்றிப்படியின் வெற்றி

# தமிழர்களின் உரிமைகளுக்காக முதலில் குரல்கொடுத்த ஜீ.ஜீ.

■ தொகுப்பு:- கே.எம். ரீ

**அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைவராகவும், பிரபல வழக்குரைஞராகவும் யாழ்ப்பாணத் தொகுதி நாடாளு மன்ற உறுப்பினராகவும் சேவையாற்றிய அமரர் ஜீ.ஜீ.பொன் னம்பலத்தின் 36 ஆவது நினைவு தினம் (09.02.2013) இன்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**



ஒரு தமிழ்த் தலைவன் என்ற வகையில் பொன்னம்பலத்தின் முக்கியத்துவம் குறித்து ஐக்கிய அமெரிக்க இலங்கை தமிழ்ச் சங்கப் பேராசிரியர் சச்சி ஸ்ரீகாந்தா மற்றும் சிவா சச்சி ஆகியோர் வெளியிட்ட கருத்துக்கள் பெறுமதி மிக்கவை. ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஒரு வித்தியாசமான சூழலுக்கும் உரியவர். நாவன்மையாலும், தன்னம்பிக்கையாலும் ஆளுமை செய்யப்பட்ட மங்கிச் செல்லும் நாடாளுமன்ற கடை எல்லையில் கடைசி வார்ப்பு தூண் அவராவார். கடுமையான சொற்றொடரையும் இதமாகத் தரவல்ல செழுமையான அவர் குரல் ஒலியை இனியும் ஒரு தடவை நாம் கேட்க மாட்டோம். அதிர்ஷ்டம் இல்லாத அவரது எதிரியை ரகசியமாக பின்தொடர்ந்து செல்லும் கற்றார்ந்த அவரின் இடி போன்ற குரல் தாக்குதலில் இருந்தும் இலகுவாக தப்பித்துக் கொள்ளும்; சொற்றிறன் விவாதத்தில் போட்டி என்று வந்துவிட்டால் அவர் கொடுக்கும் நெத்தியடி நாடாளுமன்ற வாசலுக்கும் அதுபோல் நீதிமன்றங்களில் சுவருக்குள்ளும் பயத்தை விரட்டியடிக்கவல்ல வார்த்தை ஜாலம். இவற்றையும் நாம் இனி பார்க்கப் போவதில்லை. சோல்பரி ஆணைக்குழுவை மந்திரத்தால் கட்டுண்ட நாகத்தின் நிலைக்குத் தள்ளி, அவர் உரையை மீண்டும் ஆற்ற அவர்களை கோர வைத்தவர் அவர் பேச்சாற்றலில் வெற்றி கரமான அவரது காலத்தைப் பற்றியும் நாம் கேட்கப் போவதில்லை. ஐ.நா. சபையின் மதிப்பிற் குரிய அரங்கத்தினரையே 1965 இல் வியப்பிலாழ்த்திய அவர் பேச்சுக்களின் வீச்சுக்கள்..'

**தமிழ் மக்களின் சிந்தை கவர்ந்த முதல் அரசியல்வாதி.**

1931 இல் தீவில் அனைவருக்குமான வாக்குரிமை நிறுவப்பட்டதை அடுத்து ஈழத்தமிழர்கள் மத்தியில் அவர்களின் சிந்தை கவர்ந்த முதல் அரசியல்வாதியாக பொன்னம்பலம் மாறினார். ஆகவே 1931 இற்கும் 1970 இற்கும் இடையில் வெறும் நான்கு தசாப்த காலத்திலான அவரது தேர்தல் பதிவுகள் மீளாய்வு செய்யப்படுவதற்கான தகுதியைப் பெறுகின்றன. கட்சிச்சார்புகளைக் காட்டாமல் மிக நீண்டதொரு காலத்திற்கு வாக்காளர் பெருமக்களை அடிக்கடி சந்தித்து வந்த இவர் போல் தமிழ் அரசியல் வாதிகள் வேறு எவருமிலர்.

கௌரவ ஏ.ஆர்.பி. அமரசிங்க எழுதிய "இலங்கை உச்ச நீதிமன்றத்தின் முதல் 185 ஆண்டுகள்" என்னும் நூலில் திரு.ஜீ.ஜீ. பொன்னம்பலம் பற்றிய குறிப்பு வருமாறு:

அரசியாரின் சட்ட ஆலோசகர் கணபதிப்பிள்ளை காங்கேயன் பொன்னம்பலம் 1901 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 08 ஆம் திகதி அவதரித்தார். புலமை மிகுந்த தனது கல்வி வாழ்வை ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் தொடங்கிய ஜீ.ஜீ.பொன் னம்பலம் அவர்கள் பின்னர் சாந்த ஜோசெப் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்தார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விவசாயத் துறைக்கான புலமைப்பரிசிலை 1921 ஆம் ஆண்டு வென்றெடுத்த ஜீ.ஜீ. அவர்கள் Fitzwilliam house இல் இணைந்து இயற்கை அறிவியல் துறையி லும் சட்டத்துறையிலும் சிறப்புச் சித்தியை பெற்றார்.1925 ஆம் ஆண்டில் முதுகலை மாணிப்பட்டத்தை கேம்பிறிட்ஜ் பல்கலைக் கழகம் அவருக்கு வழங்கியது. 1926 ஆம் ஆண்டுலிங்கன்ஸ்இன்னில்சேர்ந்து கொண்ட அவர் 1927 ஆம் ஆண்டு இலங்கை உச்ச நீதிமன்ற சட்டத்தரணியாக அனுமதிக்கப்பட்டார். பல வருடங்களின் பின்னர் அதாவது 1961 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்ற நியாயவாதியாக அனுமதிக்கப்பட்டார்.

**குற்றவியல் துறையில் பணிபுரிந்த வழக்கறிஞர்**

ஆர்.எல்.பெரேரா அவர்களின் புகழ் மங்கிய பின்னர் ஜீ.ஜீ. இலங்கையின் ஒரு நியாயவாதி என்ற முறையில் குற்றவியல் துறையில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவாறும் அவருக்கு நிகர் அவரே என்ற வகையிலும் புகழின் உச்சிக்கே சென்றார்.

தீவின் அனைத்துப் பாகங்களைச் சேர்ந்தவர்கள் அவரையே தமது வழக்குகளில் தோற்றுவிப்பதற்காக கங்கணம் கட்டி நின்றனர். சக வழக்கறிஞர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் அவருக்கிருந்த பெருமதிப்புக்கு எடுத்துக்காட்டாக கொழும்பு சட்ட நூலகத்தில் அமைக்கப் பட்டுள்ள நான்கு மார்பளவிலான வெண் கலச்சிலைகளுள் ஒன்று திரு.ஜீ.ஜீ பொன் னம்பலம் அவர்களுடையது என்பதிலிருந்து புலனாகின்றது.

சொந்தமாக தொழில் புரிந்த சட்டவறிஞர் மட்டுமன்றி அவர் தேசவழமைச்சட்ட ஆணையர். 1937 மற்றும் 1959 ஆம் ஆண்டுகளில் புதுடெல்லியில் நடைபெற்ற அனைத்துலக நடுவர் ஆணையத்தின் மாநாட்டுக்கு அனுப்பப்பட்ட இலங்கைப் பிரதிநிதி போன்ற உயர் அந்தஸ்துக்களில் சேவையாற்றி தனது சட்ட மேதாவிலாசத்தை பதித்தவராவார்.

கேம்பிறிட்ஜ்சர்வகலாசாலையில் பயின்று வந்த காலத்தில் அவர் அதன் இந்திய முஸ்லிம்களின் தலைவர் என்ற பதவியில் 1922 ஆம் ஆண்டில் அமர்த்தப்பட்டார். அப்போது முதல் அவர் அரசியலில் மிகுந்த ஈடுபாடு காட்ட தலைப்பட்டார். இலங்கைக்கு திரும்பிய பின்னர் அவர் அரசியலில் தீவிர ஈடுபாடு காட்டத் தொடங்கினார்.

சமகாலத்தின் இன்னொரு இளம் பெயர் பெற்ற பேச்சாளராக எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்காவுடன் சேர்ந்து ஓல் சிலோன் லிபரல் லீக்கை ஆரம்பித்தார். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தேர்தல் பகிஷ்கரிப்பினைத் தொடர்ந்து 1934 ஆம் ஆண்டு பருத்தித்துறை தேர்தல் தொகுதி அங்கத்தவராக ஜீ.ஜீ.பொன்னம்பலம் நாடாளுமன்றம் செல்லும் வரை தமிழ் சமூகத்திற்காக குரல் கொடுக்க எவரும் இருக்கவில்லை. பண்டாரநாயக்காவும் ஏனையோரும் சேர்ந்து சிங்கள மகாசபையை ஸ்தாபித்த போது பொன்னம்பலம் அவர்கள் பிரிந்து சென்று தமிழ் காங்கிரஸ் கட்சி மூலம் தமிழருக்கான சலுகைகளை பெற்றுக்கொள்வதற்காக நெருக்குதல் கொடுத்தார்.

சமநிலை பிரதிநிதித்துவ கொள்கையை நீதிமன்றிலும் சரி, சட்டவாக்கத்துறையிலும் சரி, பொது மேடையிலும் சரி, ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களின் அதியுயர் பேச்சாற்றல் மூலம் எல்லோருடைய மனங்களையும் வென்றதோடு அவரின் சொற்பொழிவுகளுக்கு செவிமடுத்தோரும் பெரும் பாக்கியசாலிகளானார்கள்.

பின்னைய ஆண்டுகளில் புலமை மிகுந்த அவரது நாவன்மை முன்னொருபோதுமில்லாத பெரும் புகழை தேடிக் கொடுத்தது. கிறிஸ்தவ இளைஞர் மன்றம் (வை.எம்.சி.ஏ) கூட்ட நிகழ்வில் அவராற்றிய ஒப்பற்ற பேருரை அவரை 1928 இல் அதன் தலைவராக நியமிக்க வைத்தது. தமது காலத்தைய வழக்குகளில் பல வழக்குகளில் அவர் தோற்றி வெற்றி பெற்றுச் சாதனை படைத்தார். ★

# பெரும் சவால்களுக்கு முகங்கொடுத்து அபிவிருத்திப் பணியை முன்னெடுக்கிறோம்

## வலி.கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் விளக்கம்

பெரும் சவால்களுக்கு மத்தியில் அபிவிருத்திப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுக்கிறது வலி.கிழக்குப் பிரதேச சபை.

மக்கள் பிரச்சினையில் உதயன் என்ற பகுதியில் கடந்த 4.2.2013 உதயனின் 13ஆம்பக்கத்தில் வலி.கிழக்கு பிரதேசசபை உள்ளூர் வீதி களை புனரமைக்குமா? என்று தலைப்பிடப்பட்டு எஸ். புண்ணிய மூர்த்தி (அச்சுவேலி), எழுதிய விடயம் குறித்து வலி. கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் அ.உதயகுமார் அளித்துள்ள விளக்கத்திலேயே மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாம் வலி.கிழக்கு பிரதேச சபையை பொறுப்பேற்ற பின்னர் பெரு நிலப்பரப்பாகக் காணப்படும் இந்தப் பிரதேசத் தில் மிகவும் குறுகிய காலப்பகுதிக்குள் அனைவரும் பாராட்டத்தக்க வகையில் இந்தப் பிரதேச மக்களின் ஒத்துழைப்புடன் பல அபிவி ருத்தி பணிகளை முன்னெடுத்து வருகின்றோம். நாம் சபையை பொறுப்பேற்பதற்கு முன்னர் புனரமைக்கப்படாமல் இருந்த பல வீதிகள் புனரமைக்கப்பட்டும் இன்னும் பல வீதிகள் இன்றும் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் இவ்வாறான நடவடிக்கைகளை பொறுத்துக்கொள்ளமுடியாதநிலையிலேயே சிலர் எம் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகின்றனர்.

நாம் சபையைப் பொறுப்பேற்ற பின்னர் எமது பிரதேசத்தின் பாரிய டெங்கு நோய் ஒழிப்பு நடவடிக்கையாக கழிவகற்றல் வேலைத் திட்டம் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டது.

எமது பிரதேசத்தில் காணப்படும் 504 வீதிகளுள் முழுவதையும் எமது சபையின் குறைந்த வருமானத்தைக் கொண்டு புனரமைக்க முடியாதிருந்தபோதும் எமது பிரதேச பொதுமக்களின் ஒத்துழைப்புடன் வீதிகள் கிரவல் வீதிகளாகப் புனரமைப்புச் செய்யப்பட்டு மக்களின் இலகு பாவனைக்கு ஏற்ற வகையில் அவர்களிடம் கையளிக்கப்பட்டன.

தற்போது மக்கள் பங்களிப்புடன் 9 வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

பிரதேச அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நான்கு வருட 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் மக்களின் தெரிவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தித் திட்ட கைநூலின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டும் 2011 ஆம் ஆண்டும் 33 மில்லியன் ரூபா செலவில் ஆவரங்கால் வன்னியசிங்கம் வீதி, அச்செழு தனிப்பனையடி வீதி, கோப்பாய் கிளுவானை வீதி,கோப்பாய் பழைய தபாற்கந்தோர் வீதி என்பன புனரமைக்கப்பட்டன.

2012 ஆம் ஆண்டுக்கான வேலையாக மக்கள் தெரிவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட கைநூலின் பிரகாரமும் அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையிலும் சபைக்கு வருமானத்தை ஈட்டக்கூடிய வகையில் அச்சுவேலி பொதுச் சந்தைக் கட்டடத் தொகுதிக்கான முன்மொழிவு பிரதேச சபையின் அங்கீகாரத்துடன் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட அங்கீகாரத்துக்கு அமைய உரிய உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தும், மக்களின் அபிவிருத்திக்கு எதிராகச் செயற்படும் பிரதேச சபையின் எதிர்க் கட்சி உறுப்பினரால் திட்டமிட்டு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரான அமைச்சரினால் குறித்த முன்மொழிவு மக்கள் அபிவிருத்திக்கு எதிராகத் தடுத்து நிறுத்தப்பட்டது. தொடர்ந்தும் குறித்த உயர் அதிகாரிகளுடன் நாம் தொடர்பு கொண்டபோது அவர்கள் பொதுச் சந்தைக் கட்டடத் தொகுதியை 2012 ஆம் ஆண்டுக் குரிய 50 மில்லியன் ரூபா நிதியில் புனரமைப்பதற்கும் 2013 ஆம் ஆண்டுக்குரிய 30 மில்லியன் ரூபா நிதியில் வீதிகளைப் புனரமைப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாகக் கூறியிருந்தனர். எனினும் இதுவரை காலமும் சபையின் எதிர்க்கட்சி உறுப்பினராலும் அமைச்சரினாலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாது கடந்த காலத் தேர்தல் பெறுபேறுகளை முன்னிட்டு மக்களைப் பழிவாங்கும் முகமாக அவர்கள் செயற்பட்டு வருகின்றார்கள்.

மேலும் கடந்த வருடம் உள்ளூராட்சிக் உட்கட்டமைப்பு மேம்படுத்துதல் திட்டத்தின் மூலம் எமது சபைப் பங்களிப்புடன் அச்சுவேலி உப அலுவலகத்துக்கு இரண்டு மாடிகள் கொண்ட கட்டடமும் ஆயுர்வேத வைத்தியசாலைக் கட்டடமும் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.எமது பிரதேச மக்களின் நலன்கருதி இரண்டு இறைச்சிக் கடைகள் அமைக்கப்பட்டன. அச்சுவேலி பொதுச்சந்தை கட்டட வசதி போதாதாகையால் ஒரு மில்லியன் ரூபா செலவில் சந்தைக் கட்டடம் ஒன்றும் அமைக்கப்பட்டது. மக்கள் போக்குவரத்து நலன் கருதி குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை நிதி மூலம் எமது சபையால் 05 மில்லியன் ரூபாவில் பஸ் நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இடம்பெற்ற தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த பெருந் திருவிழாவை முன்னிட்டு எமது பிரதேசம் உட்பட பிற பிரதேச மக்களின் இலகு போக்குவரத்துக் காக பெரிய சவால்களை எதிர் கொண்டு கடல்நீரேரி ஊடாக பொதுமக்களின் பங்களிப்புடன் தற்காலிக பாலம் ஒன்று அமைக்கப் பட்டு பல இலட்சக்கணக்கான மக்களினதும் பக்தர்களினதும் பயன் பாட்டுக்குக் கையளிக்கப்பட்டது.

இந்த வகையில் எமது மக்களின் அத்தியாவசிய தேவைகளை வழங்கும் சேவைகளுக்காக எமது பிரதேச சபையில் காணப் பட்ட ஊழியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பி எமது மக்களுக் கான இன்னோரன்ன சேவைகளையும் திறம்பட ஆற்றி வருகின்றோம்.

இந்த விடயத்தில் கூட மக்கள் அபிவிருத்திக்கு எதிராகச் செயற் படும் விசமிகளுடன் இணைந்து எமது சபையின் செயலாளரும் செயற்பட்டு வருகின்ற இந்த வேளையிலும் நாம் எமது சபையின் வளர்ச்சிக்காகவும் மக்களுக் காகவும் எந்த வகையான பிரச்சினைகளையும் உரிய நடைமுறைக்கு அமைய எதிர்கொண்டு வெற்றி பெறுவது நிச்சயம். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம். advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா சித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா போன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்புரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சஹாரா வல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# கண்ணா! லட்டுத் தின்ன ஆசையா?

உலகில் மிகப்பெரிய பணக்காரர் யார்?

இந்தக் கேள்விக்கான விடை ஒவ்வொரு வருடமும் மாறிக் கொண்டே இருக்கும். கடந்த சில வருடங்களுக்கு முன்னர் 'மைக்ரோ சொப்ட்' நிறுவுநர் பில்கேட்ஸ் தான் உலகின் முடிசூடாப் பணக்காரராக விளங்கினார்.

பணம் என்பது எப்போது, எவரிடம், எப்படி வந்துசேரும் என்பது எவருக்குமே தெரியாது. பணம் சேர்த்தவருக்கு மட்டுமே அந்த இரகசியம் தெரியும். இந்த வருடம் பில்கேட்ஸை பின்தள்ளிவிட்டு, உலகப் பெரும் பணக்காரர் என்ற அரியாசனத்தில் ஏறியிருப்பவர் மெக்ஸிக்கன் தொலைத் தொடர்பாடல் நிறுவன அதிபர் கார்லோஸ் ஸ்லிம். இந்தத் தரவரிசை ஒருநாளிலேயே தலைகீழாக மாறவும் சந்தர்ப்பம் உண்டு. உலகில் பணத்தின் இருப்பு எப்போதும் ஒரேமாதிரி இருப்பதில்லை.

ஆனாலும் உண்மையிலேயே காலாதி காலமாக உலகப் பணக்காரர் ஒருவர் இந்தியாவில் இருக்கிறார். அவரின் செல்வத்துக்கு முன்னால் இப்போதைய உலகக் கோடீஸ்வரன் கார்லோஸ் ஸ்லிம் பிச்சைக்காரர் தான். அந்தளவுக்கு இவர் பணம் படைத்தவர். பெரிதாக செலவுகள் செய்யாதவர். ஆனால் ஒவ்வொரு நிமிடமும் லட்சக்கணக்கான சொத்துக்கள் இவருக்குவந்துகொண்டே இருக்கின்றன. அவர் வேறுயாருமல்ல. திருப்பதி ஏழுமலை வெங்கடேசப் பெருமாள்தான்.

தினமும் லட்சக் கணக்கான பக்தர்களுக்குத் தரிசனம் கொடுக்கும் ஏழுமலையானுக்குக் காணிக்கைகளாகத் தினமும் பொன்னும் பொருளும் வந்து குவிந்துகொண்டே இருக்கின்றன. திருப்பதி உண்டியலில் சேரும் பணத்தை எண்ணுவதற்கென்றே நூற்றுக்கும் மேற்பட்டோர் நிரந்தரப் பணியாளர்களாக இருக்கின்றார்கள். அந்த அளவுக்கு திருப்பதி உண்டியல்கள் நிரம்பும் வேகம் அபரிமிதமானது.

திருப்பதியில் எப்போதும் சனக்கூட்டம் நிரம்பி வழிவதற்குப் பக்தி மட்டுமே காரணமன்று. உலகிலுள்ள பிரபலமான மனிதர்கள் பலரும் திருப்பதியானைத் தரிசனம் பண்ண செல்வதுண்டு. குறிப்பாக அரசியல் வாதிகள், சினிமா நட்சத்திரங்கள் தமக்கு மனச்சஞ்சலம் ஏற்பட்டுவிட்டால் உடனே பறப்பது திருப்பதிக்குத் தான். எனவே தமது கனவுலக நாயகர்களையும், நாயகிகளையும் பார்ப்பதற்குத் திருப்பதி நல்ல களம் என்று நினைத்து இங்கு வருவோரின் எண்ணிக்கையும் அதிகம்.

திருப்பதிக்குச் செல்பவர்கள் மறக்காமல் பெற்றுவரும் பிரசாதம் லட்டு. திருப்பதி லட்டு உலகப் பிரசித்தமானது. திருப்பதி லட்டுக்குக் காப்புரிமைகூட பெறப்பட்டுள்ளது. திருப்பதியானைத் தரிசித்து, தமது மனப்பாரத்தை சொல்லிவிட்டு, லட்டை வாங்கி உண்டால் துன்பங்களெல்லாம் தூர ஓடிவிடும் என்பது ஐதீகம். அதனால்தான் ஐஸ்வர்யா ராய் முதல் ஜெயலலிதா வரை அடிக்கடி திருப்பதிக்கு ஓடுகிறார்கள்.

இப்போது திருப்பதி லட்டுத் தின்பதற்காக போக இருப்பவர் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. ஆனால் அவர் அங்கு போவதற்கு முன்னரே கறுப்புக்கொடிப் போராட்டம், ஆர்ப்பாட்டம் என எதிர்ப்பு நடவடிக்கைகள் களை கட்டத் தொடங்கிவிட்டன. எனவே குளிக்கப் போய் சேறு பூசிக்கொண்டதைப் போல மனப்பாரத்தை நீக்கச் செல்லும் மஹிந்த, இன்னும் அதிக தலையிடியைச் சம்பாதித்துக் கொண்டு வருவது அநேகமாக உறுதியாகிவிட்டது.

இந்த நிலையில் இவ்வளவு அவசரமாக, எதிர்ப்புகள் இருந்தும் திருப்பதியானை வழிபட்டே தீருவேன் என்று மஹிந்த ஏன் ஒற்றைக் காலில் நிற்கிறார்? என்ற கேள்வி இலங்கை மக்களிடையே எழுந்துள்ளது.

''ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டுவரவுள்ள இலங்கைக்கு எதிரான பிரேரணையை இந்தியா எதிர்த்து, எங்கள் தலைக்கு மேலே தொங்கும் கத்தியை இல்லா தாக்க நீ தான் அருள்புரிய வேண்டும்'' என்று வேண்டுதல் செய்வதற்காகக் கூட அவர் செல்ல இருக்கலாம்.

அல்லது, இன்னொரு வேண்டுதலுக்காகவும் ஜனாதிபதி திருப்பதிக்குப் போக விரும்பலாம்.

''உலக நாடுகள், உலக வங்கி எல்லாவற்றிலும் கடன் வாங்கியும் இலங்கைப் பொருளாதாரத்தை நிமிர்த்த முடியவில்லை. எங்கள் குடும்ப பணப்பெட்டியையும் நினைத்தபடி நிரப்ப முடியவில்லை. கடைசியாக உன்னிடம் கை நீட்டுகிறேன். கடனாக ஒரு பத்தாயிரம் பில்லியன் டொலர்களை அள்ளிப்பெறிய மாட்டாயா வெங்கடேசா?'' என்பதே மற்றைய பிரார்த்தனையாக இருக்கலாம்.

''கண்ணா லட்டுத் தின்ன ஆசையா? தின்றுவிட்டுப் போ. கடன் மட்டும் கேட்காதே. அது உறவுக்குப் பகை'' என்று ஏழுமலையான் பதில் அளிப்பான் என்று நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

# தமிழ்- முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டால் மட்டுமே உண்டு வாழ்வு

■ கந்தவனம் கோணேஸ்வரன்

இலங்கையின் மூத்த அரசியல்வாதிகளில் ஒருவரும் அமைச்சருமான வாசுதேவநாணயக்கார, தேசிய கீதம் தொடர்பில் எடுத்த முயற்சி பயனற்றுப் போய்விட்டது. தேசிய கீதத்தின் தமிழ் மொழி பெயர்ப்பைத் தமிழர்கள் பாடுவதற்கு தடைவிதித்த இலங்கை அரசு, சிங்களமும் தமிழும் கலந்த தேசிய கீதம் இசைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது.

அமைச்சர் வாசுதேவநாணயக்காரவின் முயற்சியை முறியடித்த சக்திகள் அரச கூட்டில் பலமான சக்திகளல்ல. அவர்களின் எதிர்ப்பு பலமான தொன்றாகவும் அதை மீறினால் பல விளைவுகள் ஏற்படலாம் என்றும் காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. அதேபோல் நல்லெண்ணத்துடன் ஆக்கபூர்வமான முயற்சியை எடுத்த அமைச்சர் எதிர்ப்பாளர்களோடு ஒப்பிடும்போது பலம் குறைந்தவர் போல் காட்டப்பட்டிருக்கிறார்.

தனது உள்ளக் கிடக்கைகளுக்கு உருவம் கொடுக்க முனைபவர்கள் சக்திமான்கள் போலவும் மக்களின் உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்த முனைபவர்கள் பலம் குறைந்தவர்களாகவும் காட்டுவதன் மூலம் தனது காரியத்தைச் சாதித்துக்கொள்ளவே அரசு விரும்புகிறது.

### தமிழர்களைப் பொறுத்தவரை தேசிய கீதம் ஒரு பிரச்சினையல்ல

தமிழர்களைப் பொறுத்தமட்டில் தேசியகீதம் ஒரு பிரச்சினையே அல்ல. அது தமிழில் இருந்தாலும் சிங்களத்திலிருந்தாலும் தமிழுடன் சிங்களம் கலந்திருந்தாலும் சரி, அதனால் எவ்வித நன்மையோ தீமையோ ஏற்படப் போவதில்லை. தமிழர்களின் உள்ளத்திலும் எந்த மாற்றத்தையும் அவை ஏற்படுத்தப் போவதில்லை. அடுத்தவேளை உணவுக்கே வழியில்லாதவன், தங்க ஆபரணத்தின் வடிவமைப்புப் பற்றிக் கவலைப்படுவதுபோல்தான் இதுவும். தமிழர்களின் தேவையெல்லாம் தமது நிலப்பரப்பில் தாம் சுதந்திர மனிதர்களாக வாழவேண்டும் என்பதுதான்.

தமிழ்மக்களின் இந்த அபிலாஷையை இல்லாமல்செய்துவிட வேண்டும் என்பதில்தான் அரசு குறியாகச் செயற்படுகிறது. தமிழர்களை அடக்கி ஒடுக்குவதன் மூலம் அமைதியான இலங்கையை தோற்றுவித்துவிடலாம் எனக் கனவு காண்கிறது.

அரசின் இத்தகைய குறைபாடுகளால்தான் இந்த நாட்டில் அமைதியும் இன ஒற்றுமையும் ஏற்படமுடியாது இருக்கின்றன. சுதந்திரதினக் கொண்டாட்ட ஏற்பாடுகளின்போது தமிழர் தரப்பின் மீது விசேட கண்காணிப்பைச் செலுத்தவேண்டியிருந்தது. சுதந்திர தினக் கொண்டாட்டத்துக்கு ஏதாவது இடையூறு வந்துவிடுமோ என்ற பயத்தில் அரசு பாதுகாப்பை அதிகரித்திருந்தது.

அரச மாளிகைக்குள் வைத்தே இரகசியமாக சுதந்திர தினத்தைக் கொண்டாடிய காலத்தையும், பொது மக்கள் எவரும் அனுமதிக்கப்படாமலேயே சுதந்திரதினம் கொண்டாடப்பட்ட காலத்தையும் இந்த அரசு நினைத்துப் பார்க்கவேண்டும். இந்த நாட்டின் பிரஜைகளின் ஒரு சாராருக்குப் பயந்த நிலையில் சுதந்திர தினத்தைக் கொண்டாடும் இழிநிலை ஏன் ஏற்பட்டது என்பதை சிந்திக்க வேண்டும். தமிழ் மக்கள் சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ள ஏன் விரும்பவில்லை என்பதை அரசு உற்றுநோக்க வேண்டும்.

அரசு நினைத்திருந்தால் இரண்டு மொழிகள் கலந்த தேசிய கீதத்துக்கு அனுமதி வழங்கியிருக்க முடியும். தமிழர்கள்மேல் அரசு காட்டும் நல்லெண்ணத்தின் வெளிப்பாடாக இதனைக் கையாண்டிருக்க முடியும். கடும் போக்காளர்களின் எதிர்ப்புகளைப் புறந்தள்ளுவதால் அரசுக்கு எவ்வித இடையூறும் ஏற்படப் போவதில்லை. அரசுடன் மோதப் புறப்பட்டால் கடும் போக்காளர்கள் தாம் அரசியலிலிருந்து காணாமற் போக நேரிடும். இதுதான் யதார்த்தம்.

இரு மொழிகள் கலந்த தேசிய கீதத்துக்குச் சட்டத்தில் இடமில்லை என்பது சரியான காரணமாகாது. சட்டம் என்பது நாட்டுமக்கள் ஒற்றுமையாகவும் அமைதியாகவும் வாழ்வதற்காகத் தான் வகுக்கப் படுகின்றதே அன்றி அவர்களது நலத்துக்குப் பாதகங்களை ஏற்படுத்துவதற்காக அல்ல. அதுவுமன்றி இலங்கை அரசியலில் இடம்பெறும் காரியங்கள் அனைத்தும் சட்டத்துக்கு அமைய நடைபெறுவனவுமல்ல.

முஸ்லிம்கள் வியாபாரத்தில் ஈடுபடக் கூடாதென்று சட்டத்தில் எங்காவது எழுதப்பட்டிருக்கிறதா? முஸ்லிம்கள் தொழுகை நடத்தக்கூடாது, பள்ளிவாசல்களை பரிபாலனஞ் செய்யக்கூடாது என்று எங்காவது சட்டம் சொல்கிறதா? முஸ்லிம்களை குடியிருக்கும் நிலத்திலிருந்து துரத்தி விடுவதற்குச் சட்டத்தில் இடமளிக்கப்பட்டிருக்கிறதா? முஸ்லிம்களை வதைக்கும் பணி பிக்குகளிடம் சட்டப்படி ஒப்படைக்கப்பட்டிருக்கிறதா?

இது குறித்து அமைச்சர் ஹக்கீம் மௌனம் காத்தாலும் இவை அனைத்தும் இன்று அன்றாடம் நடக்கின்ற நிகழ்வுகளாகிவிட்டன. இவற்றை மேற்கொள்வோர் சுதந்திரமாக வலம் வருகிறார்கள். ஜனாதிபதியுடன் நிகராக அமர்ந்து பேச்சு நடத்துகிறார்கள். தங்கள் செயல்களுக்கான காரணங்களை ஜனாதிபதியிடம் விளக்கி அதனை நியாயப் படுத்தியும் வருகிறார்கள்.

முஸ்லிம் மக்களுக்கு எதிரான சட்ட மீறல்களில் ஈடுபட்டவர்களில் ஒருவர்தானும் இன்றுவரை கைது செய்யப்படவில்லை. இவற்றின் சூத்திரதாரிகளான சிஹல உருமய, பொதுபலசேனா போன்ற கடும்போக்கு அமைப்புகளுக்கெதிராக அரச தரப்பிலிருந்து ஒரு கண்டனம்கூட வெளியிடப்படவில்லை. அமைச்சுப் பதவிகளில் குறியாக இருக்கும் முஸ்லிம் தலைமைகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இது குறித்து வாய் திறந்து ஒரு வார்த்தையேனும் பேசவில்லை.

தமிழர்களை நலிவுபடுத்திவிட்டோம்; அவர்கள் அழிவிலிருந்து எழுந்து தங்களை மீளவும் கட்டியமைத்துக் கொள்ள முன்னர் முஸ்லிம்களையும் நலிவுற வைக்கும் முயற்சியில் அரசு ஈடுபடுகிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆனால், தமிழ் மக்கள் தாக்குதல்களுக்குள்ளான வேளைகளில் எல்லாம் முஸ்லிம் அரசியல் தலைமைகள் நடந்துகொண்டதுபோல் தமிழ்த் தலைமைகள் ஒருபோதும் நடந்துகொள்ள மாட்டா. தமிழர் தலைமை பதவிச் சுகத்துக்கோ பணம், பலத்துக்கோ விலை போகக் கூடியதல்ல. நியாயத்துக்காகப் போராடும் பக்குவத்தைத் தனது பலமாக அது கொண்டிருக்கிறது.

### தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்து போராடினால் விடிவு கிட்டும்

தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்து போராடுவதில்தான் சிறுபான்மை இனங்களின் மீட்சி இருக்கிறது என்பது தமிழர்களின் நம்பிக்கை. இந்த எண்ணம் முஸ்லிம் மக்களிடமும் தோன்ற வேண்டும்.

எதிர்வரும் ஜெனிவா மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் இலங்கை அரசு இக்கட்டான நிலைக்குள்ளாகலாம் என அரசியல் அவதானிகள் நம்பிக்கை தெரிவிக்கிறார்கள். அவ்வாறு நிகழுமிடத்து இலங்கை அரசு சில நல்ல முன்னெடுப்புகளை விரைவாகவே மேற்கொள்ள நேரிடும். இந்த முன்னெடுப்புகள் மூலம் தமிழர்களும் முஸ்லிம்களும் அரசியல் ரீதியாக பயனடையலாமென்னும் நப்பாசையும் இருக்கிறது. இந்த நம்பிக்கை உண்மையாகுமிடத்து முஸ்லிம்களும்தான் அதனால் பயனடையப் போகிறார்கள். கடந்த ஜெனிவா மாநாட்டில் தமிழர்களின் முன்னெடுப்புகளுக்கு தடையாக இருந்ததில் முஸ்லிம் தலைமைகளுக்கும் பாரிய பங்குண்டு என்பதைத் தமிழர்கள் இன்னமும் மறந்துவிடவில்லை. சிறுபான்மை இனமான எங்களைப் பாருங்கள், நாங்கள் நலமாக இருக்கிறோம், இலங்கையில் பெரும்பான்மையினரால் எவரும் பாதிப்புக்குள்ளாவதில்லை என்ற வகையில் இவர்கள் உலகநாடுகளிடம் பிரச்சாரம் செய்திருந்தார்கள்.

இத்தகைய குறுகிய இலாபநோக்குள்ள பிரசாரங்கள் இந்த முறை எடுபடாமற் போக நிறையவே வாய்ப்புண்டு. எனவே இந்த தடவை ஜெனிவா மாநாட்டின் பின்னர் முஸ்லிம்களும் தமிழர்களும் தங்கள் நியாயமான அபிலாஷைகளை ஜனநாயக முறைப்படி அடைந்து கொள்ள முடியும் என நம்பலாம்.

### ஒன்றுபட்டால் அனைவருக்கும் வாழ்வு

எந்தவொரு உலக நாடும் தத்தமது, பூகோள அரசியல்சார் நலன்களை இழந்து எங்களுக்கு உதவப் போவதில்லை. தமிழர் பிரச்சினை சர்வதேச பிரச்சினையாக மாறிவிட்ட இன்றைய நிலையில் கடந்த முறை அமெரிக்கா எடுத்த முயற்சி இன்று வரை இலங்கை விடயத்தில் நிறைவேறவில்லை என்ற குறையை நிவர்த்தி செய்யவே அமெரிக்கா விரும்பக் கூடும். இந்தியாவும் தமிழர்கள்மேல் கரிசனை இல்லாத நிலையிற்கூட அமெரிக்காவின் வற்புறுத்தலால் இலங்கை அரசை ஆதரிக்க முடியாத நிலை ஏற்படக் கூடும். இவை சரியான கணிப்பானால் மிக விரைவில் இலங்கையின் உள்ளக அரசியற் போக்கில் ஆக்கபூர்வமான மாற்றங்கள் நிகழ்வதற்கான வாய்ப்பு அதிகமாக காணப்படுகிறது.

எவ்வாறெனினும் இலங்கை அரசின் இராஜதந்திரத்தையும் குறைத்து மதிப்பீடு செய்ய முடியாது. ஏதாவது ஒரு தந்திரத்தைப் பயன்படுத்தி சுண்டெலி தப்புவதுபோல் இலங்கை உலக நாடுகளின் நெருக்குப் பிடிக்குள்ளிருந்து தப்பிவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அரசின் கபடத்தனங்களை உணர்ந்த முஸ்லிம்மக்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்வாங்கமுயலவேண்டும். பெரும்பான்மை அடக்கு முறைகளிலிருந்து விடுபட வேண்டும் என்ற சிந்தனையில் இருக்கும் முஸ்லிம் சகோதரர்கள் இத்தகைய முயற்சிக்கு உந்துசக்தியாக இருந்து திடமான அணியொன்றைத் திரட்டித் தமிழர்களுடன் இணைந்து போராட முன்வர வேண்டும்.

ஒன்றுபட்டால் அனைவருக்கும் வாழ்வு, ஒன்றுபடாமற் போனால் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் அழிவு. இந்த உண்மையை உணர்ந்து செயற்பட்டால்தான் இரு சிறுபான்மைத் தரப்பினரும் இந்த நாட்டில் தப்பிப் பிழைக்கலாம். இல்லையேல் எதிர்காலம் இலங்கை சிறுபான்மை இனத்தவர்களுக்கு இருள் சூழ்ந்த தொரு வேளையாக அமையக் கூடும். ★

**தருவது வித்தியா**

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்களின் முக்கியமான செயலை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரம் செழிக்க புதிய அணுகுமுறையைப் பின்பற்றுவது நல்லது. பணவரவு சீராக இருக்கும். உறவினர் எதிர்பார்ப்புடன் நடந்து கொள்வர்.

**இடபம்:** உங்களின் பணி நிறைவேறுவதில் தாமதம் இருக்கும். இடையூறு செய்பவரை அடையாளம் காண்பீர்கள். தொழில் வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். சொத்து ஆவணம் பிறர் பொறுப்பில் கொடுக்க வேண்டாம்.

**மிதுனம்:** எந்தச் செயலையும் சவாலாக அணுகுவீர்கள். பணிதிட்டமிட்ட காலத்துக்குள் நிறைவேறும். தொழில் வியாபாரம் செழித்து மனதை மகிழ்விக்கும். சமரச பேச்சு மூலம் நல்ல தீர்வு கிடைக்கும்.

**கடகம்:** மனதில் உருவாகிற சந்தோஷம், முகத்தில் வசீகரத்தை உருவாக்கும். தொழில் வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். பணப் பரிவர்த்தனையில் நல்ல முன்னேற்றம் உண்டு. உறவினர் வருகையால், வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**சிங்கம்:** உங்கள் மனம் விரும்பாத நிகழ்ச்சியில் ஒதுங்கி இருப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில், திட்டமிட்ட இலக்கு நிறைவேற கூடுதல் பணிபுரிவது அவசியம். சேமிப்பு பணம், அத்தியாவசிய செலவுக்குப் பயன்படும். வெளியூர் பயணத்தில் தகுந்த பாதுகாப்பு நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்.

**கன்னி:** உங்கள் உறவினர் ஒருவரின் செயல் வியப்பைத் தரலாம். தொழில் வியாபாரத்தில், நிதான அணுகுமுறையைப் பின்பற்றுவது நல்லது. அதிக பயன் தராத பொருள் வாங்க வேண்டாம்.

**நாளை**

தை -28 ஞாயிற்றுக்கிழமை 10.02.2013
திதி: அமாவாசை பி.ப 01.45 வரை
நட்சத்திரம்: அவிட்டம் மரண பி.இ 05.24 வரை
சுபநேரம்: 09.34- 11.04 வரை
ராகுகாலம்: 05.04- 06.34 வரை

**துலாம்:** நண்பரை ஊக்கப்படுத்தும் வகையில் உதவுவீர்கள். சமூக நிகழ்வில் இனிய அனுபவம் பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறு விலகும். சராசரி பணவரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** நீங்கள் எவருக்கும் தேவையற்ற வாக்குறுதியைக் கொடுக்க வேண்டாம். சுற்றுச்சூழ்நிலையின் தாக்கம் உணர்ந்து, செயல்படுவது நல்லது. தொழில் வியாபாரம் மந்தகதியில் இயங்கும். முக்கியமான செலவுக்கு சேமிப்பு பணம் பயன்படும்.

**தனுசு:** பெரியவர்களின் சிறந்த வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவீர்கள். உங்களின் பொறுப்பான செயல் பாராட்டுப் பெறும். பணவரவு கிடைக்கும். இயன்றளவில் அறப்பணி செய்வீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை, குதூகலம் வளரும்.

**மகரம்:** நீங்கள் பிறரிடம் ஏமாறாத வகையில் செயல்படுவது அவசியம் . கூடுதல் முயற்சியால், பணி இலக்கு நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் சராசரி பணவரவு கிடைக்கும். உறவினரின் சீர்முறை செய்ய கூடுதல் பணம் தேவைப்படும்.

**கும்பம்:** உங்கள் மனதில் இருந்த தயக்கம் விலகித் தைரியம் வளரும். செயல்களில் கூடுதல் அனுகூலப் பயன் பெறுவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை உருவாகும். பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**மீனம்:** நீங்கள் எதிர்பார்த்த நன்மை தெய்வ அனுகூலத்தால் கிடைக்கும். நண்பர், உறவினர் உதவிகரமாக நடந்து கொள்வர். தொழில், வியாபாரம் அபிவிருத்தியாகும். தாயின் தேவையை நிறைவேற்றி கூடுதல் அன்பு,ஆசி பெறுவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | | | | | | 9 |
| 2 | | 7 | 5 | 8 | | 1 | | 6 |
| 8 | | | 7 | | | 4 | 5 | |
| | 9 | 3 | | 6 | | | 8 | 1 |
| 1 | | | | | | | | 5 |
| 7 | 2 | | | 9 | | 3 | 6 | |
| | 8 | 2 | | | 4 | | | 7 |
| 4 | | 6 | | 5 | 7 | 2 | | 3 |
| 3 | | | | | | | 4 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 1 | 9 | 6 | 4 | 5 | 7 | 8 |
| 6 | 4 | 9 | 8 | 5 | 7 | 3 | 2 | 1 |
| 8 | 7 | 5 | 3 | 1 | 2 | 4 | 9 | 6 |
| 1 | 3 | 4 | 6 | 2 | 5 | 9 | 8 | 7 |
| 7 | 9 | 8 | 4 | 3 | 1 | 2 | 6 | 5 |
| 5 | 6 | 2 | 7 | 9 | 8 | 1 | 3 | 4 |
| 2 | 1 | 7 | 5 | 8 | 3 | 6 | 4 | 9 |
| 9 | 8 | 3 | 1 | 4 | 6 | 7 | 5 | 2 |
| 4 | 5 | 6 | 2 | 7 | 9 | 8 | 1 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1—9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1—9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1—9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**DANISH DEMINING GROUP**

## INVITATION TO BID (ITB)

**Public Tender (DDG/J'puram/001).Sale of 30KVA Generator**

The Danish Demining Group (hereinafter referred to as"DDG") is pleased to invite you to submit sealed bids for the sale of a used generator, maintained by the Sole agent,with specification below.

01. GeneratorBrand:**"Soar"** - Generator Capacity:**30KVA**
02. The said Generator may be inspected during office hours between 9.00 a.m. to 3.00 p.m. from 08.02.213 to 14.02.213 at the DDG Jeyapuram camp premises. (Amman Road, Jeyapuram North, Jeyapuram.)
03. Requests in respect of bid forms or clarification should be referred to:

Contact Person: Anojuthan/Gobinath
DDG Office addresses:Arasankulam, Omanthai, Vavuniya/DDG Camp, Jeyapuram

**Mobile: 0777289753/ 0779266876**

E-Mail: **logjaffna@ddg.lk or logasst@ddg.lk**


04. Tenders (sealed bids) should be submitted on a specimen form obtained from the above mentioned DDG office addresses on or before **4.00 p.m. on 14.02.2013.**

**50% of the bid value should be paid on award of the tender and the balance 50% should be paid within 5 working days.**

(29291)(2.6.7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 14.04.1950 உதிர்வு 10.01.2013



அமரர் குருசுப்பிள்ளை யஸ்ரின் சிங்கராயர்

அன்பின் உறைவிடமே
பாசத்தின் பிறப்பிடமே
குடும்பத்தின் குலவிளக்கே!
உம் இனிய வதனமுகமும்
நினைவுகளும் எம்மை விட்டு
என்றுமே நீங்காதப்பா.

இல.02, சென்.ஜேம்ஸ் வீதி,
குருநகர்.

(29323)(6.7.11)

குடும்பத்தினர்.

## பெருகும் பாதீனியம்

யாழ்ப்பாணம்,பெப்.9

கோப்பாய் இராச வீதியில் உள்ள தோட்டங்களிலும் வீதி ஓரங்களிலும் பாதீனியச் செடிகள் மீண்டும் அதிகரித்துள்ளன.

குறிப்பாக இந்த வீதியில் இருபாலைச் சந்தி தொடக்கம் கோப்பாய் கிருஷ்ணன் கடைச் சந்தி வரையிலுள்ள பகுதிகளிலேயே பாதீனியச் செடிகள் அதிக அளவில் முளைத்துள்ளன. (3-8)

## அபிராமிப்பட்டர் குரு பூசை

யாழ்ப்பாணம்,பெப்.9

குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் அபிராமிப்பட்டர் குருபூசை இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (3)

## ஆயுள்வேத வைத்தியர்களுக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.9

ஆயுள்வேதத் திணைக்கள தேசிய வைத்திய நிறுவனத்தால் தொற்றா நோய்கள் தொடர்பான கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

பண்ணை பிராந்திய சுகாதாரக் கிராமத்தில் அமைந்துள்ள மண்டபத்தில் எதிர்வரும் 12 ஆம், 13 ஆம், 14 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கருத்தரங்கு நடைபெறும்.

பங்குபெற விரும்பும் பாரம்பரிய வைத்தியர்கள் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சி.துரைரட்ணம் தெரிவித்துள்ளார். (3)

**வீடு விற்பனைக்கு**

தொல்புரம்,டச்றோட்டில் இருக்கும் 5 அறை கொண்ட வீடு,9 பரப்பு காணியுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு- 0776178073, 0779440906

(27661)(3.6.7)

**கடை, காணி விற்பனைக்கு**

யாழ். பாலாலி வீதியில் அமைந்துள்ள 1½ பரப்பு காணியும் கடைகளும் (யாழ். பல்கலை கழகத்துக்கு அருகில் பரமேஸ்வராசந்தி) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு- 0770767325

(29284)(3.6.7)

செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபை
பதிவு இல. HA/4/JA/266
393/30,கோயில் வீதி,நல்லூர்,யாழ்ப்பாணம்.

**பொதுக்கூட்ட அறிவித்தல்**

காலம்: 24/02/2013 ஞாயிறு மு.ப. 9.30 மணி
இடம்: **செம்மணி இந்து மயான மண்டபம்**
தலைவர்: சி.இலட்சுமிகாந்தன்

நிகழ்ச்சி நிரல்

01) தேவாரம் 02) பிரேரணைகள்/அறிக்கைகள்
03) தலைமையுரை 04) புதிய நிர்வாகிகள் தெரிவு
05) பிறவிடயங்கள் 06) நன்றியுரை

அனைவரையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்

சி.இலட்சுமிகாந்தன் — தலைவர்.
செ.குகதாசன் — பொருளாளர்
இ.தணிகைநாதன் — செயலாளர்

(29287)(3.6.7)

## 33 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 18.11.1969
உதிர்வு 08.01.2013

**செல்வி யோகநாயகி சண்முகநாதன்**

(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், தெல்லிப்பழை)

எம் அருமை நாயகியே! எத்தனை நாள்கள் சென்றாலும்
உன் பசுமையான நினைவுகள் என்றும் எம்மை விட்டு நீங்காது

கடந்த 08.01.2013 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தபால், தந்தி, தொலைபேசி, இன்ரநெற் மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- குடும்பத்தினர்.
5 ஆம் கட்டை., பெரியவிளான், இளவாலை.

(29193)(2-6)



சுயதொழில் புரிவோருக்கான சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பஸ், ரயில் ஆகியவற்றில் வியாபாரம் செய்வதை தடுக்கும் நடவடிக்கைக்கு எதிராக கொழும்பு கோட்டையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# நிறைவேற்று அதிகார முறைமை இன்னும் ஏன் நடைமுறையில்?

## கேட்கிறார் சோபித தேரர்

கொழும்பு,பெப்.9

நிறைவேற்று அதிகார முறைமை ஏன் தொடர்ந்தும் நடைமுறைப் படுத்தப்படுகின்றது என்று கோட்டே ஸ்ரீ நாக விகாரையின் பீடாதிபதி மாதுலுவே சோபிததேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்ட கேள்வியைக் கேட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய அரசமைப்பை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும். மதத் தலைவர்கள் மற்றும் பொதுமக்களின் ஆலோசனையுடன் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும்.

நிறைவேற்று அதிகார முறைமையால் நாட்டின் நீதிமன்றக் கட்டமைப்பும், அரசமைப்பு முறைமையும் பலவீன மடைந்துள்ளன. முறைப்பாட்டாளரே விசாரணை நடத்தி தண்டனை வழங்கும் ஆசியாவின் ஆச்சரியம் இலங் கையில் நடக்கின்றது.

தற்போதைய முறைமையின் கீழ் ஜனாதிபதி நீதிமன்றத்தை எந்த வகையிலும் மதிப்பதில்லை. 18 ஆவது திருத்தச் சட்டம் நாட்டின் ஆட்சி முறைமையை பாதக நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.-என்றார். (ச)

## மகஸின் சிறையில் தமிழ்க் கைதியை சந்தித்தார் பிரிட்டன் அமைச்சர்

கொழும்பு,பெப்.9

புலிகளுக்கு நிதி உதவி வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட புலோலி தெற்கைச் சேர்ந்த விஸ்வலிங்கம் கோபிதாஸ் என்பவரை பிரிட்டன் வெளி விவகார அமைச்சின் பொது நலவாய அமைப்புப் பிரதிநிதி எம்மா புச்செர் நேற்று முன்தினம் கொழும்பு புதிய மகஸின் சிறையில் பார்வையிட்டார்.

பிரிட்டிஷ் பிரஜாவுரிமை பெற்ற அவர் 2007 ஏப்ரல் மாதம் கைதுசெய்யப்பட்டார். கடந்த ஆண்டு ஜூன் மாதம் இவருக்கு ஐந்தாண்டுச் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவரின் குடும்பம் பிரிட்டனில் உள்ளது. புதிய மகஸின் சிறையில் தற்பொழுது 198 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-சி)

# நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரையை அவசரமாக நடைமுறைப்படுத்த முடியாது

## முப்பது வருடகாலப் பிரச்சினைகளுக்கான தீர்வை 3 வருடங்களில் தீர்க்க முடியாது என்கிறார் கெஹலிய



கொழும்பு,பெப்.9

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை எவருடைய அழுத்தங்களுக் காகவும் அவசரமாக நடைமுறைப்படுத்த முடியாது. எவரது தேவைக்காகவும் அவசரமாக தவறான முறையில் செயற்பட முடியாது.

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முப்பது வருடப் பிரச்சினைகளுக்கான தீர்வை மூன்று வருடங்களில் பெற்றுவிட முடியாது. எனினும், குறுகிய காலப் பிரச்சினைகளுக்கு பெரும்பாலும் தீர்வு காணப் பட்டுள்ளன. நடுத்தர, நீண்ட கால பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் அரசு கவனமாகச் செயற்பட்டு வருகிறது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக நான் ஏற்கனவே அமைச்சரவையில் தகவல்களை வெளியிட்டுள்ளேன்.

அதில் குறுகியகால செயற்பாடுகள், மத்திய நிலை செயற்பாடுகள், எதிர்கால தீர்க்கமான செயற்பாடுகள் என்று மூன்று வகைகள் உள்ளன.

நாட்டில் 30 வருட காலம் போர் நீடித்தது. சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே பிரச்சினை தொடர்ந்திருந்தது. அப்போது அமைச்சரவையிலும் இந்தப் பிரச்சினை பற்றிப் பேசப்பட்டது. இது இன்று, நேற்றுள்ள பிரச்சினை அல்ல என்பதை சகலரும் உணர வேண்டும்.

எனவே இதுதொடர்பில் ஒவ்வொருவர் கூறும் விதத்தில் அவசரமாகத் தவறான முறையில் செயற்பட முடியாது. அதனால்தான் இந்தப் பிரச்சினையை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு பொறுப்புக்கொடுத்து செயற்பட நேர்ந்தது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நாம் எவருடைய அழுத்தத்துக் காகவும் நியமிக்கவில்லை. அரசு அதற்கான ஓர் தேவை இருப்பதை இனங்கண்டு அந்த ஆணைக்குழு நியமிக் கப்பட்டது. அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அந்தப் பரிந்துரைகள் அறிக்கையை பெற்று உடனடியாக ஒரே நாளில் அதனைச் செயற்படுத்துவதாக அரசு எங்கும் கூறவில்லை.

இந்தவிடயத்தில் அரசு மிகுந்த கவனத்துடன் செயற்படுகிறது. எனினும் இரண்டு, மூன்று வருடங்களில் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாது.

எனவே குறுகிய காலத்தில் தீர்க்கக்கூடிய அதிகளவு பிரச்சினைகள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. நடுத் தரப் பிரச்சினைகள் பல தற் போது கவனத்தில் கொள்ளப்பட்டு வருகின்றன.-என்றார். (ச)

## குறிப்பிட்ட சில மாவட்டங்களில் இருந்து

# அதிக மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கு பல்கலை. மானிய ஆணைக்குழுவுக்கு அனுமதி

## உயர்நீதிமன்றம் வழங்கியது

கொழும்பு,பெப்.9

2011ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய 18 புதிய பாடநெறிகளுக்கு சில மாவட்டங்களிலிருந்து அதிக மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு, உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அனுமதி வழங்கியுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, தாக்கல் செய்திருந்த மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டபோதே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய 5 ஆயிரத்து 609 மாணவர்களை பல்கலைக்கழகங்களில் மேலதிகமாக இணைத்துக்கொள்வதற்கு உயர் நீதிமன்றில் இணக்கம் தெரிவித்திருந்தோம்.ஆனால் அந்தப் பாடநெறிகளுக்காக சில மாவட்டங்களில் எந்தவொரு மாணவரும் தகுதி பெற்றிருக்கவில்லை என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, அந்த பாடநெறிகள் 18 இற்காகவும் சில மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் தகுதிபெற்றுள்ளதாக அந்த மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய குறித்த பாடநெறிக்கு பொருத்தமான மாணவர்கள் அதிகமுள்ள மாவட்டங்களில், அதிகளவிலான மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நீதிமன்றத்தின் அனுமதியைக் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் மத சுதந்திரத்தை பாதுகாக்க அரசு முனைப்புடன் செயற்படுகிறது

## ஜனாதிபதி சொல்கிறார்



கொழும்பு,பெப்.9

நாட்டில் மத சுதந்திரத்தைப் பாதுகாப்பதிலும் அரசு முனைப்புடன் செயற்படுகிறது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டிலுள்ள சகல பௌத்த மத பீட மகாநாயக்க தேரர்களையும் அலரி மாளிகையில் அவர் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இவ்வாறு கூறினார்.

பௌத்த தர்மத்தைப் பாதுகாப்பதிலும் பலப்படுத்துவதிலும் அரசு எப்போதும் கடமைப்பட்டுள்ளது. நாட்டின் சகல இன, மத, சக வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கும், சகலரதும் மத சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (ச)

# காலனித்துவ ஆட்சியாளரிடம் நாட்டை ஒப்படைக்க முயற்சி

கொழும்பு,பெப்.9

நாட்டை மீளவும் காலனித்துவ ஆட்சியாளர்களி டம் ஒப்படைக்க முயற்சிக்கப்பட்டு வருகிறது என்று காலனித்துவ ஆட்சிக்கு எதிரான அமைப்பின் அழைப்பாளர் தம்பர அமிலதேரர் குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பு ஹைட் பார்க் மைதானத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

1815 ஆம் ஆண்டில் நாடு எதிர்நோக்கிய காலனித்துவ சூழ்ச்சிகளுக்கு நிகரான சூழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண இன, மத, கட்சி பேதங்களைக் களைந்து அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ச)

# மாணவியின் கை பறிபோனமை குறித்து அறிக்கை சமர்ப்பிக்கவும்

## மனித உரிமைகள் ஆணைக்குழு உத்தரவு

கொழும்பு,பெப்.9

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மேற்கொள்ளப் பட்ட சத்திர சிகிச்சையின்போது சட்ட பீட மாணவி ஒருவரின் கை அகற்றப்பட்டமை தொடர்பான அறிக்கையை உடனடியாக சமர்ப்பிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுகாதார அமைச்சுக்கு உத்தரவிட்டுள்ளது.

வைத்தியர்களின் கவனயீனம் மற்றும் சட்டங்களைப் பின்பற்றாமையே இவ்வாறான சம்பவங்களுக்குக் காரணம் என்று எமக்குக் கிடைத்துள்ள தகவலின் பிரகாரம் தெரிய வந்துள்ளது என்று ஆணைக்குழுவின் செயலர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.


மாணவியின் கை அகற்றப்பட்டமை குறித்து தமது உரிமைகள் மீறப்பட்டுள்ளன எனத் தெரிவித்து விசாரணையை மேற்கொள்ளுமாறு மாணவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

சுகாதார அமைச்சிடமிருந்து அறிக்கை கிடைத்ததன் பின்னர் அந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள ஆணைக்குழு தயாராக உள்ளது என்று அவர் கூறினார்.

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றதன் பின்னர் அந்தச் சம்பவம் தொடர்பிலான எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதே எமது பொறுப்பாக அமைந்துள்ளது என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ச)

# AFTER A/L
# STUDY IN UK

## உங்கள் UK செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்



**யாழ் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்**

**இலவச கருத்தரங்கும் உடனடி அனுமதிகளும்.**

கடந்த ஒரு தசாப்த காலமாக தலைநகரில் மட்டுமில்லாது யாழ் நகரிலும் சூமுறகான விசா ஆலோசனை துறையில் திறம்பட பிரயாணித்துக்கொண்டிருக்கும் நுழிழநெவ முஎநசளநயள ஊழளெரடவயவெ ன் பூரண இலவச கருத்தரங்கு யாழ் நகரில் நடைபெறவுள்ளது.

யாழ் மாணவர்கள் அனைவருக்கும் ஓர் அன்பான வேண்டுகோள். எவ்வித கட்டணமுமின்றி எம்மால் நடாத்தப்படும் இக்கருத்தரங்கு உங்கள் பெற்றோர் சகிதம் கலந்துகொண்டு தெளிவான ஆலோசனைகளை பெற்று பயன்பெற வேண்டுகின்றோம்.

**UK Student Visa** க்களில் பலவிதமான மாற்றங்கள் ஏற்பட்டிருப்பினும் அதற்கு ஏற்ற விதத்தில் மாணவர்களை தயார்படுத்தி வெற்றி கண்டுள்ளோம்.

# SPOT ADMISSION

எமது நிறுவனத்தின் அதிபர் யாழல் மாணவர்களை சந்தித்து உடனடி அனுமதிகள் வழங்க இருப்பதால் உங்கள் அனுமதிக்கு முந்துங்கள்.


| | |
|---|---|
| **Date** | : 16/02/2013 |
| **Venue** | : Gnanams Hotel-Clock Tower Road, Jaffna |
| **Time** | : 10.00 am- 3.00 pm |

## நீங்கள் ஏன் EXPONET ஐ தெரிவு செய்யவேண்டும்

- 2012 A/L எடுத்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள்
- இலவச IELTS or City & Guilds வகுப்புக்கள்
- மிகக்குறைந்த கல்லூரிக் கட்டணங்கள்
- மிகச்சிறந்த UK பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் அனுமதி பெற்றுத் தரப்படும் (HTS College)
- 4 வருட விசா உத்தரவாதம்
- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி
- ஆகக்குறைந்தது O/L தகமை போதுமானது
- உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படின் ஒரு மாதத்தில் உங்கள் பயணத்தை மேற்கொள்ள முடியும்

**UKல் உயர்கல்வி, உயர்கல்வியுடன் இணைந்த வேலை வாய்ப்புப்பற்றி தெளிவான ஆதாரபூர்வமான ஆலோசனைகளை பெற எமது கருத்தரங்கில் இணைந்து கொள்ளுங்கள்**

**எமது நிறுவனத்தின் மூலம் பயணமான யாழ் மாணவர்களில் சிலர்**




**EXPONET**
Overseas Consultants

Head Office : 379-1/2, Galle Road, Colombo 06.
Jaffna Branch : 197, Arasady Road, Jaffna.
(Between Kantharmadam Junction & Hindu Ladies College)
London Branch : 56, The Gardens Harrow Middlesex, HA1 4EY, UK.

**Hotline - 021 7538395 / 021 2227230**

## ஆசிரியர் சுகவீன லீவுப் போராட்டம்:

# பெற்றோரை அழைத்து கல்வி அதிகாரிகள் பேச்சு

மட்டக்களப்பு,பெப்.9

மட்டக்களப்பு,ஏறாவூர் தாமரைக்கேணி ஸாஹிர் மௌலானா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோரை அழைத்து நேற்றுமுன்தினம் காலை விசேட கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இந்தப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் 17 பேரில் 14 பேர் சுகவீன லீவுப் போராட்டத்தில் கடமைப் பகிஷ்கரிப்பைச் செய்திருந்தனர்.

பாடசாலைக்கு நிரந்தர அதிபரை நியமிக்கவேண்டும், இடமாற்றம் செய்யப்பட்ட இரண்டு ஆசிரியர்களையும் மீளப்பெற்றுத் தரவேண்டும் என்பதே பணிப் பகிஷ்கரிப்புச் செய்த ஆசிரியர்களின் கோரிக்கை என்று கூறப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயப் பணிப்பாளர் ஏ.எம்.அஹமட்லெப்பை தலைமையிலான கல்வி அதிகாரிகள் குழு நேற்றுமுன்தினம் காலை ஸாஹிர் மௌலானா வித்தியாலயத்துக்குச் சென்று பெற்றோருடன் கலந்துரையாடி அங்குள்ள குறைநிறைகளைக் கேட்டறிந்தது.

இந்த விடயம் குறித்து உரிய நடவடிக்கையை மேற்கொள்வதாகக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். அஹமட்லெப்பை உறுதியளித்தார். எனினும், கல்வி நடவடிக்கைகளுக்கு ஊறு விளைவிக்கக்கூடிய ஆசிரியர் சுகவீனலீவுப் போராட்ட நடவடிக்கைகளுக்கு பெற்றோர் இனிமேல் ஊக்கமளிக்கக் கூடாது என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச)



தேசிய டெங்கு நுளம்பு ஒழிப்பு வாரத்தையொட்டி நேற்று வெள்ளிக்கிழமை கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியில் நுளம்பு ஒழிப்பு சிரமதான பணிகளில் மாணவர்கள் ஈடுபட்டனர்.

# ஏறாவூர் பிரதேசத்தில் நடமாடும் சேவை



மட்டக்களப்பு,பெப்.9

மட்டக்களப்பு, ஏறாவூர் நகர பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் 'மக்களின் காலடியில் அதே இடத்தில் சேவை' என்ற நடமாடும் சேவை மிச் நகர் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா தலைமையில் நடைபெற்ற இந்தநடமாடும் சேவையில், பிறப்பு, இறப்பு பதிவுகள், சமுர்த்திக் கொடுப்பனவுகள், தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள், சமூக சேவைகள் உட்பட பல சேவைகள் மேற்கொள்ளப்பட்டன. (ச)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விதைநெல்

## இலவசமாக வழங்க கணக்கெடுப்பு

மட்டக்களப்பு,பெப்.9

சீரற்ற காலநிலை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விதைநெல், உரம் ஆகியன இலவசமாக வழங்கப்படும் என்று விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக சகல மாவட்ட விவசாய சேவை அலுவலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் அழிவுகளை எதிர்நோக்கிய விவசாய நிலங்கள் தொடர்பான கணக்கெடுப்புகளை பிரதேச கமநல சேவை மத்திய நிலையங்கள் ஊடாக விவசாய திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

பயிர்க் காப்புறுதி சபையில் தமது விவசாய நிலங்களை காப்புறுதி செய்தோருக்கு முழுமையான காப்புறுதிப் பணமும், பயிர்க் காப்புறுதியை மேற்கொள்ளாதோருக்கு இலவச விதை நெல், இலவச உரம் என்பனவும் வழங்கப்படவுள்ளன.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள இடரால் கிழக்கு மாகாணத்தில் ஒரு இலட்சம் ஏக்கர் நெற் காணிகள் முற்றாக சேதமாகியுள்ளன. அதில் மிகக் கூடுதலான அழிவை மட்டக்களப்பு மாவட்டமும், இரண்டாவதாக அம்பாறை மாவட்டமும் எதிர்நோக்கியுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 46,000 ஏக்கர் நெற் காணியும் அம்பாறை மாவட்டத்தில் 34,000 ஏக்கர் நெற் காணியும் விளைச்சல், அறுவடை காலத்தில் பெரும் அழிவுகளை எதிர்கொண்டன.

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட அழிவால் நாட்டின் மொத்த நெல் உற்பத்தியில் சுமார் 32 வீதமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

மழை காலங்களில் அணைக்கட்டுகளில் பாதுகாப்பு வசதிகள் ஏற்படுத்தப்படாததால் விவசாயிகள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மட்டு.எல்லை விவகாரம் பரிந்துரை ஜனாதிபதிக்கு

## அனுப்பி வைத்தது கூட்டமைப்பு

மட்டக்களப்பு,பெப்.9

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை, கிரான், ஓட்டமாவடி, கோரளைப்பற்று மத்தி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளின் எல்லைகள் மாற்றப்படுதல் தொடர்பான பரிந்துரை அடங்கிய அறிக்கை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குறிப்பிட்ட பிரதேச செயலகங்களின் எல்லைகள் ஏற்கனவே இருந்தவாறே இருக்கவேண்டும் என்ற தீர்மானத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வந்துள் ளது. இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவு மட்டுமல்ல, மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் மக்களின் முடிவாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன ரீதியான பிரதேச செயலகங்களை உருவாக்கக்கூடாது. எமது மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 4 முஸ்லிம் பிரதேச செயலர் பிரிவுகளும், 10 தமிழ் பிரதேச செயலர் பிரிவுகளும் உள்ளன.

10 தமிழ் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 26 ஆயிரத்து 300 ஏக்கர் விவசாய நிலங்கள் முஸ்லிம்களுக்குள்ளன. 832 ஏக்கர் நிலங்களில் முஸ்லிம் மக்கள் குடியிருக்கின்றனர். ஆகவே, எங்களுக்கு எந்த விதமான பாகுபாடும் இல்லை. அவர்கள் எங்கும் வாழலாம் - என்றார்.

இதேவேளை, தமிழ் மக்களது பிரதேசங்கள் முஸ்லிம் மக்களது பிரிவுகளுடன் இணைந்திருப்பதற்குத் தமிழ் மக்கள் விரும்பமாட்டார்கள் என்றும்- மட்டக்களப்பில் தமிழ், முஸ்லிம் மக்களிடையே பிளவை ஏற்படுத்துவதற்காக அரசின் திட்டமிட்ட செயற்பாடாக இது



அமைந்திருக்கிறது என்றும்-

அந்தவகையில் இந்தத் திட்டத்துக்கு எவரும் விலைபோய்விடக்கூடாது என்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பத்திலேயே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# டெங்கு காய்ச்சலால் குழந்தை உயிரிழப்பு

காத்தான்குடி,பெப்.9

காத்தான்குடியில் டெங்கு காய்ச்சலால் 9 மாத குழந்தை கடந்த புதன்கிழமை உயிரிழந்துள்ளது என்று காத்தான்குடி சுகதார வைத்திய அதிகாரி டாக்டர் யு.எல்.நசிர்தீன் தெரிவித்தார்.

காத்தான்குடி முதலாம் குறிச்சியில் உள்ள றிம்சாத் என்னும் குழந்தையே டெங்கால் உயிரிழந்துள்ளது. காத்தான்குடி பிரதேசத்தில் இதுவரைக்கும் 8 பேர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட் டுள்ளனர். அவர்கள் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று அவர் கூறினார்.

டெங்குக் காய்ச்சலால் உயிரிழந்த இந்தக் குழந்தையின் வீடு மற்றும் சுற்றுப்புறச்சூழல் என்பன சுகாதார அதி காரிகளினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

காத்தான்குடி முதலாம் குறிச்சியிலுள்ள சுஹதா வீதி, ஸாவியா வீதி, மூர்வீதி ஆகிய பகுதிகளில் டெங்கு நுளம்புகள் காணப்படுவது அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதனால் அங்கு டெங்கு நுளம்பை அழிக் கும் புகை விசிறப்பட்டு வருவதுடன், விசேட சிகிச்சை முகாம்களும் நடத்தப் பட்டு வருகின்றன என்று அவர் கூறினார். (ச)

# அக்கரைப்பற்றில் சிக்கியது இராட்சத திருக்கை மீன்!



அக்கரைப்பற்று,பெப்.9

அக்கரைப்பற்று கடல் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இராட்சத திருக்கை மீன் ஒன்றை மீனவர்கள் பிடித்துள்ளனர்.

சுமார் 800 கிலோ எடை கொண்ட இந்த திருக்கை மீன், சுமார் மூன்று லட்சம் ரூபா பெறுமதி கொண்டது என்றும் மீனவர்கள் தெரிவித்தனர். அக்கரைப்பற்று கடல் பிரதேசத்தில் இதுவரை காலத்தில் பிடிக்கப்பட்ட திருக்கைகளில் இந்த மீனே அதிக நிறையுடையது என்றும் மீனவர்கள் கூறினர். (ச)

# பட்டதாரி பயிலுநர்களுக்கு செயலமர்வு

சம்மாந்துறை,பெப்.9

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் நியமனம் பெற்றுள்ள அம்பாறை, சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பட்டதாரிப் பயிலுநர்களுக்கு கிராமமட்ட திட்டமிடல் அபிவிருத்தி தொடர்பான செயலமர்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தச் செயலமர்வு சம்மாந்துறைப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலர் ஏ.மன்சூர் தலைமையில் நடைபெற்றது.

இந்தச் செயலமர்வில் அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.அன்வர்தீன், யூ.என்.டீ.பி நிறுவனத்தின் அம்பாறை மாவட்ட நிறைவேற்று அதிகாரி எம்.ஏ.சலீம், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஹம்சார், திட்ட உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.பஸீர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச)

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**

புறெயிலர்,கல்பேட் தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். (29334)(3.6.7)

"நந்தினி பாம்" இராசபாதை றோட்,கல்வியங்காடு T.P-&0779683028



**அச்சு வேலைகளுக்கு**

இன்றும் புதிய தொழில் நுட்பத்தில் அனைத்து வகையான அச்சு வேலைகளை குறைந்த செலவில் செய்து கொள்ள நாடுங்கள்.

**Pillaiyar Offset Printers**
First offset Printers In Jaffna
676, Point pedro Road, Nallur. (c/6293)(3.6.7)



யாழ். இந்தியத் துணைத் தூதரகமும்
திருமறைக் கலாமன்றமும்
இணைந்து நடத்தும்

**தீம்தனனா...II**
(பரத நடன நிகழ்வுகள்)

நட்டுவாங்கம் : திருமதி அகல்யா இராஜபாரதி (முதுகலைமாணி)
குரலிசை : திருமதி சுகந்தி இரட்ணேஸ்வரன் (இசைக்கலைமாணி)
மிருதங்கம் : திரு. சி. துலரீராசா (இசைமாணி)
வயலின் : கலைஞானகேசரி அம்பலவாணர் ஜெயராமன்

*காலம் : (இன்று) 09.02.2013 சனிக்கிழமை*
*நேரம் : மாலை 5.00 மணி - 6.30 மணி*
*இடம் : கலைத்தூது கலையகம் 286, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.*

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
யாழ். இந்தியத் துணைத் தூதரகமும் திருமறைக் கலாமன்றமும்.
(சி/6297) (10,6,7)


## 17 ஆவது வருட நினைவஞ்சலி



மலர்வு
14.03.1913

உதிர்வு
09.02.1996

**சிவக்கொழுந்து இராஜேந்திரன்**
(பிரபல சட்டத்தரணி, சமூகஜோதி)

அன்பை ஊட்டி அன்பைப் பெருக்கி
எம்மை வளர்த்தெடுத்து சீரும் சிறப்புடனும்
வாழ வைத்து உங்களின் வாழ்நாள்
கனவுகள் நனவாகி விட்ட வேளையில்
இன்புற்றிருக்க நீங்கள் இல்லை எம்முடன்
பசுமையான உங்கள் நினைவுகளுடன்
தொடரும் எம் வாழ்வு

- பிள்ளைகள்.
உடுவில் றோட், மானிப்பாய்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
21.09.1928

உதிர்வு
10.01.2013

**திருமதி பரமேஸ்வரி மீனாட்சி சுந்தரம்**

அன்பின் உறைவிடமே
பாசத்தின் பிறப்பிடமே
குடும்பத்தின் குலவிளக்கே!
உம் இனிய வதன முகமும் நினைவுகளும்
எம்மை விட்டு என்றுமே நீங்காதம்மா!

நீர்கொழும்பு (29277)(6.7.11) குடும்பத்தினர்.

## சிங்க இறால் பிடித்த மூவர் கைது

யாழ்ப்பாணம்,பெப்.09

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற் பிரதேசத்தில் சட்டவிரோதமாக 30 கிலோகிராம் சிங்க இறால் பிடித்த 3 பேர் நேற்று வெள்ளிக் கிழமை கைது செய்யப்பட்டனர்.

அவர்களுக்கு 9 ஆயிரம் ரூபா குற்றப்பண மாக விதித்தது பருத்தித்துறை நீதிமன்றம்.

வடமராட்சி கிழக்கு தாளையடி கடற்றொ ழில் பிரதேசத்துக்குட்பட்ட கட்டைக்காட்டுப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி தொழில் செய்த 3 பேர் யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 3 பேரிடமும் 2 பெட்டிகளில் 30 கிலோ கிராம் சிங்க இறால் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த மூன்று பேரும் பருத்தித்துறை நீதிமன் றில் முற்படுத்தப்பட்டனர். 3பேருக்கும் தனித் தனியாக வழக்குத் தாக்கல்செய்யப்பட்டது.

அனுமதிப்பத்திரம் இன்றிக் கடற்றொழில் செய்த குற்றத்துக்காகவும், செப்ரெம்பர், ஒக்ரோபர், பெப்ரவரி மாதங்களில் சிங்க இறால் இனப் பெருக்க காலமாகும். இந்தக் காலத்தில் அதனை பிடித்த குற்றத்துக்காகவும் 3 பேருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் 9 ஆயிரம் ரூபா குற்றப்பணமாக அறவிடப்பட்டது.

பிடிக்கப்பட்ட 30 கிலோ கிராம் சிங்க இறாலை அழிக்குமாறு நீதிமன்றம் உத்தர விட்டுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள உத விப் பணிப்பாளர் எஸ். கணேசமூர்த்தி தெரிவித்தார். (த-13)

## விதிமுறை மீறி கள் விற்றவர்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,பெப்.09

சட்டவிரோதமாக வீட்டில் கள் வைத் திருந்த ஐந்து பேருக்கு எட்டு ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது நீதிமன்று.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் இவர் களுக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு வந்தது.

விசாரணையின் போது அவர்கள், தம் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அபராதம் விதிக்கப்பட்டது.

அவர்களில் முற்குற்றம் புரிந்தவர்களுக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. ஏனைய மூன்று பேருக்கு தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. ஒருவருக்கு 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இவர்கள் அனைவரும் காரைநகரைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## சட்டவிரோத சாராயத்துக்கு அபராதம் 30 ஆயிரம்

யாழ்ப்பாணம்,பெப்.09

சட்டவிரோதமாக சாராயம் விற்ற முற் குற்றமுடைய காரை நகர் நபருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது நீதிமன்று.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ். மகேந்திர ராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசார ணைக்கு வந்தது.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த சிவரத்தினம் கமலதாசன் என்பவ ருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட் டது. நீதிமன்றில் விசார ணையின் போது சந் தேகநபர் தன்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 30 ஆயிரம் ரூபா அபரா தம் விதிக்கப்பட்டது.

இவர் ஏற்கனவே இது போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட் டதனால்நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டு 50 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் செலுத்திச் சென்றிருந்தார். இந்த நிலையிலேயே மீண் டும் அதே குற்றத்தைப் புரிந்துள்ளார். (ஐ-4)

advt@uthayan.com
0215671111

## நினைவூட்டல்



தோற்றம்
11.07.1942

மறைவு
06.01.2013

அமரர்
**வைத்திலிங்கம் நாகராஜா**
(நாகரட்ணம்)

இலங்கையில் அன்னாரின் இல்லத்தில் நாளை 10.02.2013(ஞாயிற்றுக்கிழமை) நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையில் கலந்துகொண்டு, அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
(நாகராசா)குடும்பத்தினர்
கார்த்திக் : 0776718178

சோமசுந்தரம் (சின்னத்துரை) 0774528837
வைத்திலிங்கம் வீதி, பெரியமாவடி,
சாவகச்சேரி. (மீசாலை புதிய புகையிரத நிலைய வீதி)


**அடகுப் பொருள்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்**

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய், கிளிநொச்சி தெற்கு, சங்கானை, திருநெல்வேலி, பருத்தித்துறை, வேலணை ஆகிய கிளைகளில் 30.11.2011 இற்கு முன்னர் அடகு வைத்து இது வரை மீட்கப்படாத காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 13.02.2013 (புதன்கிழமை), 14.02.2013 (வியாழக்கிழமை) ஆகிய நாள்களில் மாலை 3.00 - 6.00 மணி வரை இல.212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால்......

★கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500) செலுத்தி

அல்லது

★தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

(c/6298)(6.7.11)

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

-ஹற்றன் நஷனல்வங்கி


## நீங்காத நினைவஞ்சலி

10 ஆம் ஆண்டு | 15 ஆம் ஆண்டு



மலர்வு
28.04.1949

உதிர்வு
31.01.2003

மலர்வு
03.09.1929

உதிர்வு
05.12.1998

திருமதி புவனேஸ்வரி சின்னத்துரை (சோதி)
திதி:-சதுர்த்தசி 09.02.2013

அமரர் மூத்தார் சின்னத்துரை (செல்லமணி)
(காங்.சி.கூ.ஓய்வுபெற்ற ஊழியர்)
திதி:-திருதியை 01.12.2012

வருடம் பல சென்றது ஆறவில்லை எம் துயரம்
அன்புடன் எமைக்காத்து அறிவுரை பல கூறி
பண்புடன் எமை வளர்த்து தரணியிலே உயரவைத்தீர்கள்
ஆயிரம் உறவு இருந்தும் என்ன? உங்கள்
அன்பைப்போல் வருமா? கண்ணீரில் நாம் தோய எமைப்
பிரிந்து எங்கு சென்றீர்கள்? எந்நாளும் உங்கள் நினைவை
இதயத்தில் நினைந்து நிற்கின்றோம்.
எங்கள் அன்புத் தெய்வங்கள் இருவரினதும் ஆத்மா சாந்தி பெற இன்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(29286)(2.6.7)

நி.மு.இன்னாவத்தை, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.
த.மு. சில்லாலை, பண்டத்தரிப்பு.

என்றும் உங்கள் நினைவில் வாழும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப்.9

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் தோற்றிய அனைத்துப் பிரிவு மாணவர்களுக்கான கல்வி, தொழில் வழிகாட்டல் இலவசக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவு மண்டபத்தில் கருத்தரங்கு நடைபெறும். (3)

## சைக்கிள் ஓட்டப்போட்டி

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் நிகழ்வான வீதியோட்ட சைக்கிளோட்ட நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறும். (3-250)

## மெய்வன்மைப் போட்டிகள்

வட்டு. மத்திய கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் ந.சபாரத்தினசிங்கி தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.நிகழ்வுக்கு வலிகாமம் கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி பிரதம விருந்தினராகவும், சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை சுகாதாரப் பரிசோதகர் பொ.சோழன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

★ ★ ★

கரணவாய் பொன்னம்பல வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று சனிக்கிழமை பிற் பகல் 2மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.அதிபர் சு.ஜெயானந்த குமார் தலைமையில் நடைபெறும் போட்டிக்கு யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை தலைவர் திருமதி. குமுதரஞ்சன் திலகேஸ்வரி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

★ ★ ★

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அதிபர் என்.தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ளது.போட்டிக்கு கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் மா.ராஜஸ்காந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (3-8)

★ ★ ★

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வன்மைப்போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும். கல்லூரி முதல்வர் அ.அருணந்திசிவம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு லயன்.ந.ராஜுவீரசிங்கம் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணக் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண்.தயாளன் சிறப்பு விருந்தினராகவும்கலந்து கொள்வர்.

★ ★ ★

வல்வெட்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பி.ப.2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறும். பாடசாலை அதிபர் க.தருமகுலசிங்கம் தலைமையில் நடைபெறும் போட்டிக்கு பிரதம விருந்தினராக கரவெட்டிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.நற்குணலிங்கமும், சிறப்பு விருந்தினராக பொதுச் சுகாதார பரிசோதகர் ம.பிரபாகரனும் கலந்து கொள்வர். (3)

★ ★ ★

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி.டி.துஸுதரன் தலைமையில் நடைபெறும். நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை ஆலோசகர் என்.எதிர்வீரசிங்கம் கலந்து கொள்வார். (3-51)

★ ★ ★

சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று பிற்பகல் 1மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடை பெறும்.

கல்லூரி அதிபர் திருமதி லலிதாமலர் முகுந்தன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல் விப் பணிப் பாளர் திருமதி சி.சிவாநாதனும் சிறப்பு விருந்தினராக இந்து பௌத்த கலாசாரப் பேரவைச் செயலாளர் எம். ரி.எஸ். இராமச் சந்திரனும் கலந்து கொள்வார். (3-9)

## உயர்தரப் பெறுபேறுகள் விவரம்

யாழ்ப்பாணம், பெப்.9

2012 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் ஏற்கனவே வெளியாகியிருந்தன. அதனடிப்படையில் பாடசாலை அதிபர்கள் அனுப்பி வைத்துள்ள பெறுபேற்று விவரம் வருமாறு:-

**யாழ். இந்து மகளிர் கல்லூரி**

**கணிதப் பிரிவு**

நாராயணி வெற்றிவேல்-ஏ2பி,

**விஞ்ஞானப் பிரிவு (ஆங்கில மொழி மூலம்)**

ஜானகி தேவநாதன் -ஏபிசி, சேந்தனா முருகையா -3பி, தமிழினி குமாரசாமி -3பி, மாதுர்ஜா மகேந்திர நாதன்-3பி,

**வணிகப் பிரிவு**

தீபிகா விவேகானந்தன் -3ஏ, துவாரகா செல்வரட்ணம்-3ஏ, சிந்துஜா புண்ணியமூர்த்தி -3ஏ, கிசோனா பாலகிருஷ்ணன்-3ஏ, அகல்யா தனபாலசிங்கம்-3ஏ, நிஷானி சிவசக்தி ஆனந்தராசா-3ஏ, சுதாஜினி சச்சிதானந்தம் -2ஏ,பி, புவனேஸ்வரி சர்வேஸ்வரன்-2ஏபி, மிதுனா கேதீஸ்வரன்-2ஏ,பி, நிரோஷியா விஜயகுமார் -2ஏபி, ஷாயினி ராஜரட்ணம்-2ஏபி, தர்சினி தனபாலசிங்கம்-2ஏபி, பவித்திரா லோகிதன்-2ஏசி, கீர்த்தனா வேல்முருகன்-2ஏசி, கென்சிகா தங்கராசா-ஏ2பி, நீருஜா கணேசமூர்த்தி-ஏ2பி, சங்கீதா சிவா-ஏபிசி, உஷானி தில்லைநாதன்-ஏபிசி, ஜனார்த்தனி இராஜசிங்கம்-2பிசி, கேமா சற்குணநாதன்-2பிசி, ஜீவிதா தாமோதரம்பிள்ளை-பி2சி,

**கலைப்பிரிவு**

சுதர்சினி விஜயகுமார் -3ஏ, தாரணி புவனேந்திரன் -2ஏபி, பிருத்திகா சுரேஸ்குமார்-2ஏபி, லக்சிகா பரமலிங்கம்-2ஏபி, பகீர்த்திகா ராஜரட்ணம்-2ஏபி, சாம்பவி சபாநடேசன்-2ஏபி, மயூரிக்கா திருநாவுக்கரசு-2ஏபி, லோறேஷிகா லேனின் றோபின்சன்-2ஏசி, கேசனா சற்குணலிங்கம்-2ஏசி, பிறேமி அன்ரன் பிறேமதாஸ்-ஏபிசி, தேனுஜா பாலகிருஸ்ணன் -ஏபிசி, வேணுகா துரைராஜா-ஏபிசி, சங்கீதா அருண்ராஜன் -ஏபிசி, வர்ஷினி குமாரசாமி-ஏபிசி, காயத்திரி யோகேஸ்வரன் -ஏபிசி, பிருந்தா பாலகிருஸ்ணன் -ஏ2பி, தேனுஜா சிவசுப்பிரமணியம்-ஏ2பி, கஜரூபி சுப்ரமணியம்-3பி, தேவயசி வீரசிங்கம்-3பி

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

**கணிதப் பிரிவு**

சிங்கராஜா இராகவன் -ஏ2பி, ஜெயராஜ் புவிலாதன் -ஏ2பி, நடராசா கஜவரன்-பி2சி, கிருஸ்ணராசா சஜிந்தா -பி2சி, விஜயகுமார் கௌசிகன்-பி2சி, புவனேந்திரன் குபேரன்-3சி, தேவராஜா அனோஜன்-3ஏ, பரமசோதி சாகித்தியன்-3ஏ, மனோகரன் அர்ச்சஜன்-ஏபிசி, சண்முகானந்தசர்மா விசாகன்- 2பிசி, செல்வராஜா சனோ-2பிசி, பொன்னுத்துரை வாகீசன்-பி2சி, ஜெயசீலன் ஜனந்தன்-பி2சி, பாலகுமார் பரந்தாமன்-2பிஎஸ்

**விஞ்ஞானப் பிரிவு**

நடராஜா சுரேகா- ஏ,பி,சி, வைதீஸ்வரன் ஐங்கரன் -ஏபிசி, கணேஸ்வரன் மதுரங்கன்-ஏ2சி, நடராசா தர்ஜிகா -ஏ2பி, நல்லதம்பி கஜீபன் -ஏ2பி, சிவானந்தம் தபிரா-2பிசி, கிருஸ்ணானந்தலிங்கம் டிலெக்சனா-பி2சி, கனகராசா அபிராமி-3சி, பத்மநாதன் பத்மலோஜினி-3சி, திருநாவுக்கரசு துர்க்கா-3சி,

**வர்த்தகப் பிரிவு**

சிவகுமரன் சசிகரன்-3ஏ, சடாட்சரம் அனுசா-3ஏ, பரராஜசிங்கம் சங்கீர்த்தனா-2ஏபி ,ரவிச்சந்திரன் வவீசன் -2ஏபி, யோகேஸ்வரன் டினோஜன் - 2ஏபி, கோபாலன் சர்மிளா- ஏ2பி ,வைத்திலிங்கம் சுமேகா-2ஏசி

**கலைப் பிரிவு**

பாலசுப்பிரமணியம் அனித்தா-3ஏ, லோகேஸ்வரசர்மா மயூரதி-2ஏபி, சபாநாயகம் வேணுகானன்-ஏ,2பி, சின்னத்துரை சோபிகா-ஏபிசி, ராசேந்திரம் தயிதா-ஏ2பி, ஸ்ரீகாந்தா சரண்ணியா-ஏபிசி, குணசீலன் கௌசிகா -ஏபிசி, செல்வரெட்ணம் அருணன்- ஏ2சி, குணநாத சர்மா கௌசிகா-ஏபிசி, குலசேகரம் வைஷ்ணவி-ஏ2சி, சிவபாலன் கோபிகா-2பிசி, தவராஜன் கோகிதா-ஏ2சி.

**கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி**

**கணிதப் பிரிவு**

இ.அனோஜா-ஏ,பி,சி,

**வர்த்தகப் பிரிவு**

இ.கோபிதாஸ்-2ஏபி, ச.கவிராஜன்-ஏ,சி,எஸ், ப.தயாளரூபன்-பி,சி,எஸ், வி.நிசாந்தன்-பி,சி,எஸ், கா.செந் துயன் -2சி,எஸ், ஜெ.லெனுசியா-2சி,எஸ், ம.சோபிதா 2சிஎஸ்,

**கலைப்பிரிவு**

தெ.மேசி-ஏபிசி, இ.லக்ஷன்-ஏபிசி, வீ.கஜேந்தினி -ஏபிசி, சி.கஜிந்தன்-ஏபிஎஸ், பா.சஞ்சிகா-3பி, யோ.சுதாஜினி-3பி,(மாவட்ட நிலை-02 பழைய பாடத்திட்டம்) ப.சிவதாரிணி -ஏசிஎஸ், பா.ஜனகராஜ்-ஏ2சி, அ.வினுஜா -ஏ2எஸ், ம.சோபிதா-2பிசி, யோ.நர்மிதா-2பிசி, க.சுஜீவன்-2பிஎஸ், யோ.றெஜிதா -பி2சி, க.கர்சினி-பி2சி, ஜெ.டென்சி-பிசிஎஸ், செ.தயானி -பிசிஎஸ், தா.ஆரானாஅன்சி -3சி, ஜெ.தயாபரன்-3சி

**வேலணை மத்திய கல்லூரி**

**வர்த்தகப்பிரிவு**

ஜீவராசா நிரோஜன்-3ஏ, நடேசமூர்த்தி கவிதரன்-3ஏ, சிறீவதனா லட்சுமன்-பி2சி, துஷாரா பாலசிறீதரன்-3சி, திவ்வியா சிவபாதசுந்தரம்-2சிஎஸ், சுந்தரலிங்கம் கஜமுகன்-2சிஎஸ்,

**கலைப்பிரிவு**

நிசாந்தினி சுகுமார் -2ஏசி, கஸ்தூரி சத்தியலிங்கம்-2ஏசி, மைதிலி யேசுதாசன்-ஏபிசி, சாய்மீரா வசந்தநாதன்-ஏபிசி, உதயகுமார் உஷாந்தன் -ஏபிஎஸ், கன்னிகா கிருஷாந்தமூர்த்தி-ஏபிஎஸ், சரணியா வேதாரணியம்-ஏபிஎஸ், கார்த்திகா தில்லைநாதன் -2பிசி, தர்சிகா நவரட்ணம்-2பிசி, பபித்தா முத்துலிங்கம்-2பிசி, கஜேந்தினி நவரட்ணம்-2பிசி, ஜெயகுமார் ஜெசிந்-2பிஎஸ், துஷாந்தினி சுந்தரலிங்கம் -பி2சி, பத்மலோஜினி அருளையா-பிசிஎஸ், சுவஸ்திகா சுந்தரலிங்கம்-பிசிஎஸ், விஜயரதி குமாரதாஸ்-பிசிஎஸ், அஜந்தினி சதானந்தயோகன்-பி2எஸ், பேரம்பலம் நிதர்சகுமார்-2சிஎஸ். (3)

**Live in Nanny/Care giver Toronto Canada**

We are looking for a female for the above position to care for our mother, an elderly lady. Candidate should have completed G.C.E A/L ,be able to speak English and Tamil with kowledge of health care and experience. **Minimum two years Contract.**
**Benefits :Canadian Sponsership**
**Canadian Salary with food and lodging**
Come in person with your latest CV for an interview on 10th February, Sunday. Please give us a call before you come.
Contact :
A.Varatharajah
T.P:0212213331,0774894095
(C/6294)(3.6.7)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**
08.02.2013 உதயனின் பக்கம் 6Aயில் வெளியான மேற்படி விளம்பரத்தில் திரு.சிவசீலன் ராஜீவ், இலங்கை நிர்வாக சேவை தரம் III என திருத்தி வாசிக்கவும் (C/6282)(3.6.7)

**கொம்ப்யூட்டர் பயிற்சிகளுக்கு**
**60% Discount**
சிறப்பு கட்டணச்சலுகை
10-02-2013 வரை மட்டுமே.
**ADOA**
**Adv. Diploma in Office Administration**
☐ Office Application
☐ Quick Books
☐ DTP & Internet
3in1
ஒரே பாடநெறியில்
மூன்று சான்றிதழ்கள்
**CSC-ASIAN COMPUTERS**
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 021-222 5677
230, கட்டுக்காணி வீதி, சாவகச்சேரி 021-2270267
கொடிகாமம் வீதி, நெல்லியடி, 021-2262399
A9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி 021-2283925

**இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**

பிறப்பு
13.06.1977
இறப்பு
09.02.2011
அமரர் **மகேந்திரன் அன்ரன் லோகர்சன்**
எம் குடும்பத்திற்காய் வாழ்ந்தவனே
நீ எங்களை எல்லாம் வாழ வைத்து விட்டு
நீரும் எமை விட்டு சென்ற தேனோ.
ஆண்டுகள் இரண்டு கடந்தாலும்
எங்கள் நினைவிலே இடம்பிடித்தவனே
எம் பாசமிகு சகோதரனே என தருமை மகனே.
148, பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளி. -குடும்பத்தினர்.
(C/6290)(3.6.7)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

மலர்வு 12 08 1942
உதிர்வு 22 01 2012
திருமதி **ஐயாத்துரை பசுபதி**
ஓராண்டு ஓடி மறைந்ததம்மா
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
இன்னும் எம் விழிகளின் ஈரம் காயவில்லை
எம் மனதின் காயமும் ஆறவில்லை
கனவிலும் உம் முகம், நினைவிலும் உம் உருவம்
காண்கின்றோம் தினமும்
ஏங்குகின்றோம் நீங்களின்றி
எல்லாம் வல்ல ஆண்டவனின் பாதங்களில்
உம் ஆன்மா
அமைதியுற வேண்டுகின்றோம்.
யூலன் வீதி,
அச்செழு, நீர்வேலி. (29303) (10.6.7)
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி




இலங்கைவங்கி (சுன்னாக கிளை)
ஓய்வுபெற்ற முகாமையாளர்
சின்னத்துரை அரசகுமார்
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி கனகம்மா சின்னத்துரை**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

நண்பர்கள். மு.சிவசுந்தரலிங்கம்,
ப.முருகையா, ந.கணேசலிங்கம்,
உரும்பிராய் (29299)(3.6.7)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**சிவத்திரு செல்லத்துரை சிவராசா**

(ஓய்வூதியர் மக்கள் கடை, சாவகச்சேரி.)

திதி: அமாவாசை

அன்னை மடியில்
11. 01. 1949

அம்மன் அடியில்
23 . 01. 2012

அன்பான அப்பாவே!
ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலாத தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

என்றும் நினைவுடன்
குடும்பத்தினர்.
தொ.பே. 021 320 7694

மதனராணி இல்லம்
மட்டுவில் தெற்கு,
இலுப்பையடி வீதி, சாவகச்சேரி.
(29295)(45-6.7)

## விளக்கமறியல் நீடிப்பு

மண்டைதீவில் 4 வயதுச் சிறுமி வன்புணர்வின் பின்னர் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

சந்தேக நகர்கள் நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை நீதி மன்றில் நீதிவான் ஆர். எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் மீள முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

சந்தேக நகர்கள் தொடர்பான அறிக்கை நீதி மன்றுக்குத் இன்னும் கிடைக்கவில்லை என்பதால் இருவரையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

மண்டைதீவு 2 ஆம் வட்டாரப் பகுதியில் தோட்டக்கிணற்றிலிருந்து கடந்த டிசம்பர் 28 ஆம் திகதி அதே இடத்தைச் சேர்ந்த குணசேகரம் சதாகினி (வயது-4) என்ற சிறுமி சடலமாக மீட்கப்பட்டார். வன்புணர்வின் பின்னர் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டுள்ளமை உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்தது. சம்பவத்துடன் தொடர்புடையவர்களாக இருக்கலாம் என்று சந்தேகத்தில் சிறுமியின் உறவினர்கள் இரண்டு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களது இரத்த மாதிரிகள் மரபணுப் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பட்டது. இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இவர்களுக்கே விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

## இரு பொலிஸார்பணிநீக்கம்

இலஞ்சம் பெற்றமை உட்பட இருவேறு குற்றச்சாட்டு தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு பொலிஸார் தற்காலிகமாகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாடு ஒன்று தொடர்பில் உரிய முறையில் நடந்துகொள்ளத் தவறிய ஒருவர் நேற்று முன்தினம் தற்காலிகமாகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்தசிலநாள்களுக்குமுன்னர் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் தற்காலிகமாகப் பணிநீக்கம் செய்யப்பட்டார். பொலிஸ் நிலையத்துக்கு என்று கூறி இரும்புக் கடை ஒன்றில் சுமார் 5 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான பணத்தைச் செலுத்துமாறு டிராக்டர் உரிமையாளர் ஒருவரிடம் பற்றுச்சீட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது.

டிராக்டர் உரிமையாளர் சட்டவிரோதச் செயலில் ஈடுபட்டதனால் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டார். அவரது சாரதி அனுமதிப் பத்திரம், வாகன அனுமதிப் பத்திரங்கள் என்பன பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன. சம்பவம் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை. அதற்குப் பதிலாகவே டிராக்டர் உரிமையாளரிடம் பற்றுச்சீட்டுக் கொடுக்கப்பட்டு உரிய பணத்தைச் செலுத்தும்படி கேட்கப்பட்டது.

அவரும் அதனை வாங்கி சம்பவம் தொடர்பில் யாழ். பிராந்திய பொலிஸ் மா அதிபர் காரியாலயத்துக்குத் தெரிவித்துள்ளார். அது தொடர்பில் விசாரணை மேற்கொண்டதை அடுத்து சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரி தற்காலிகமாகப் பணிநீக்கம் செய்யப்பட்டார். அவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் பட்சத்தில் நிரந்தரமாகவே பணிநீக்கம் செய்யப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-4)

# கண்ணீர் அஞ்சலி



எமது நண்பி
அ.சு.மித்திரா
அவர்களின் அன்புத்தந்தை

**சின்னத்துரை இரகுநாதன் (ரகு)**

அவர்கள் புதன்கிழமை(06.02.2013) அன்று இறைபதம் அடைந்தார். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப் பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக் கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

19ஆம் அணி
விவசாய பீட மாணவர்கள்.
(29339)(8.16)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

உருவமாய் எம்முடன்
31.07.1941

அருவமாய் எம்முடன்
10.01.2013



**நடராசா சிவகுமார்**

(இளைப்பாறிய சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர்)

அன்பின் உறைவிடமே பாசத்தின் பிறப்பிடமே
குடும்பத்தின் குலவிளக்கே! உம் இனிய வதன முகமும்
நினைவுகளும் எம்மை விட்டு என்றுமே நீங்காதப்பா

கடந்த 10.01.2013 சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு நேரிலும், கடிதங்கள் மற்றும் தொலைபேசி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

'ஆர்த்திக்', புகையிரத வீதி
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (29293)(6.7.11) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## வினாசித்தம்பி பூரணம்



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட வினாசித்தம்பி பூரணம் 05.02.2013 செவ்வாய்க்கிழமை கொக்குவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசித்தம்பியின் (சின்னப்பு, மண்டைதீவு) மனைவியும், காலஞ்சென்ற வர்களான சேதுப்பிள்ளை, நாகலிங்கம், முத்துலிங்கம், கண்மணி ஆகியோரின் சகோதரியும், பரமேஸ்வரி (லண்டன்), யோகராசா (கொக்குவில்), கனகராசா (லண்டன்), கமலேஸ்வரி (கனடா), விமலேஸ்வரி (கனடா), தங்கராசா (கனடா), இராஜேஸ்வரி (கனடா), பாலேஸ் வரி (கனடா), சுகுணராசா (லண்டன்), ஜெயராசா (கனடா), கலைச் செல்வி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், ஞானலிங்கம் (லண்டன்), ஜெயலட்சுமி (ராசாத்தி - கொக்குவில்), மதிவதனா (லண்டன்), காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு (கனடா), சுப்பிரமணியம் (கனடா) மற்றும் மேரிதேரேசா (கனடா), ஜெயராஜா (கனடா), காலஞ்சென்ற இராஜேந்திரன் (கனடா) மற்றும் பிறேமினி (லண்டன்), தர்சினி (கனடா), குபேரராஜன் (கனடா) ஆகியோரின் மாமியும், ரஜீவன், ரஜனி, ஜெயந்தி, ஜெகதாஸ், லென்சி, அனித்தா, அர்ஜுனா, அருண், மீரா, மதன், சுதன், சதன், சுரேபா, சோபா, செரின், டிலான், அருண்குமார், சிந்து, சுபிகன், சுவேநா, சுமேனன், ஜெனிஷன், பிறிலா, பிறணித், வினிக்கா, லக்ஷிகா ஆகியோரின் பேர்த்தியும், அஜிகா, அபினா, நிற்றஷா, வேணுஷா, தனுஷ், சௌமியா, திவ்வியா, துட்ஜனா, பிரவின், பிரணவன், சாருஜா, யதுஷன், வேணுஜன், கஜானன், மனேஸ், கஸ்சிகா, வெய்டன், சகானா, நிவேஸ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.02.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மாயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தலையாழி,
கொக்குவில். (29298)(45-6.7)

தகவல்:-
யோகராசா (மகன்).

# மரண அறிவித்தல்

## திருமதி பார்பதிப்பிள்ளை வைத்திலிங்கம்



இருபாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், தற்போது லண்டன், ஹெய்நல்ட், ஐபோர்ட்டை வசிப்பிடமாகவும் கொண்ட பார்பதிப்பிள்ளை வைத்திலிங்கம் 03-02-2013 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னையா, தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான சின்னப்பா - அன்னம்மா தம்பதியரின் ஆசை மருமகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற கார்த்திகேசுவின் அருமைச்சகோதரியும், காலஞ்சென்றவர்களான குலசிங்கம், துரைசிங்கம் மற்றும் சிறீபதி அம்மாள்(லண்டன்), காராளசிங்கம்(கனடா), பாலசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும், சகுந்தலாதேவி, காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் மகேஸ்வரி(இலங்கை), இராசமுத்து(கனடா), இலங்கராணி (ஜேர்மனி) ஆகியோரின் அருமை மாமியும், புவனேஸ்வரி(கனடா) அவர்களின் அருமை மைத்துனியும், சூரியகுமாரி, சந்திரகுமாரி, உதயகுமாரி, உதயகுமார், வசந்தகுமாரி, இந்திரகுமாரி, ராசகுமார், சிவகுமார் ஆகியோரின் ஆசை மாமியாரும், சிறீதரன்(லண்டன்), மனோரஞ்சிதம்(லண்டன்), ஜெயசந்திரன்(லண்டன்), சிறீரஞ்சனி தேவி(லண்டன்), வளையா(தங்கா - லண்டன்), ஜிதேந்திரகுமார்(லண்டன்), சிவநேசன்(கனடா), கலாரஞ்சனி (கனடா), பவானி(கனடா), றிச்சேட், இராகினி(கனடா), சிறீகாந்தராஜா (கனடா), வினோபாஜினி(கனடா), ரகுபரன்(கனடா), நிரோஜினி(கனடா), வைகுந்தன்(கனடா), அனுசுயா(கனடா), பென்(கனடா), கீர்த்திகா(கனடா), சுயன்(கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், லக்சி(லண்டன்), ஆரணி(லண்டன்), தர்சன்(லண்டன்), சாலினி(லண்டன்), கயன்(லண்டன்), வைஸ்ணவி(லண்டன்), சங்கவி(லண்டன்), பிரசாந்(கனடா), ரிசாந்(கனடா), திசாந்(கனடா), யோயல்(கனடா), டிலான்(கனடா), எழிலன்(கனடா), சேரன்(கனடா), அய்ஸ்சா(கனடா), கிறிஸ்(கனடா), யோடான(கனடா), எஸ்ரா(கனடா), கிறிஷன், தக்சினியா ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.02.2013) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
லண்டன். T.P. 00442085027905 குடும்பத்தினர்.
(29296)(2-6.7)

## தகவல் தொழில்நுட்ப பட்டக்கற்கை நெறி கொழும்பு பல்கலைக்கழகம்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பக்கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். O/L பயின்றோரும் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகவல் தொழில்நுட்ப கற்கைநெறியில் சித்தியடைவதன் மூலம் மேற்படி பட்டப்படிப்பை தொடரலாம். விரிவுரைகள் வார, வாரஇறுதி ஞாயிறு மட்டும் என 3 பிரிவுகளாக நடைபெறும். இம்மாணவர்களிற்கு கணினிப்பொறியியலாளர் கற்கைநெறிகளிற்கான புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. மேலதிக விபரங்களை இல.324. பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் பெற்றுக் கொள்ளலாம்:

-இணைப்பாளர், BIT கற்கை நெறி
MCS தகவல் தொழில் நுட்ப வளாகம்☎0212226373, 0772395895ம்.

**BIT** சிறந்த பெறுபேற்றுக்காக சிறப்பு விருதினை பெற்றுக்கொண்ட நிறுவனம்
**Send sms <Name>,<Address>,<Course>to772395895&get scholarship**

**Supported by United Nation Development Programme / Jaffna Rehabilitation & Resettlement Projects.**


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## VACANCIES- FACULTY OF ENGINEERING,KILINOCHCHI

Applications are invited by me up to 28.02.2013 from suitably qualified persons for the following posts.

**01.POST OF WORKS ENGINEER [CIVIL] GRADE III**

**QUALIFICATIONS:**

(A) Should possess a B.Sc Engineering Degree specializing in Civil Engineering from a recognized University / Higher Educational Institution.

**OR**

(B) Should possess a National Diploma in Technology specializing in Civil Engineering or equivalent, with at least seven (07) years of experience in Civil Engineering works in a recognized establishment.

**NOTE**: - The in-plant training period shall not be counted for the period of experience.

**Method of Recruitment**: Selection by a structured interview. Applicants who have scored 40% marks or above at the interview are eligible to be considered for selection.

**Salary Scale**: U- EX1 (II) - 2006 A
Rs. 26,020-3X585-27,775(EB) 28,420;6X645;6X585-35,800/- p.m.

**AGE**: Not more than 45 years. This age limit will not be applicable to those candidates who are employed in the public sector organization.

**02.UNIVERSITY MEDICAL OFFICER**

The University is looking for a highly motivated individual. Training in counseling will be an added qualification.

**QUALIFICATIONS:**

Medical Degree of a recognized University with at least 3 years experience as Medical Practitioner.

**NOTE**: One year period of service as Intern Medical Officer will be considered for the required period of experience.

Granting for study leave to the selected candidates to obtain postgraduate qualifications or experience according to the requirements of the University may be considered, subject to exigencies of service.

**Salary Scale**: U- MO 1 (II) Rs. 28,360 – 10 x 645 ; 1 x 790 – 35,600/- p.m.

**Selection By : Interview.**

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
3. Gratuity payment
4. Employment Trust Fund benefits
5. Free medical care

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Non Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post on a payment of Rs.100/- per application form at the People's Bank, University Branch or at the Shroff's counter of the University of Jaffna.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order for Rs.100/- per application form drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a **self-addressed stamped envelope** 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk.** Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal Order for Rs.100/- per application form drawn in favour of the **Bursar, University Of Jaffna**.

The envelope containing duly filled application form must bear "the name of the post applied for" on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the office of the Registrar.

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected.

**REGISTRAR,**
**University of Jaffna,**
**08.02.2013.**

(சி/6310) (2-6)


## வீட்டுப் பணிப்பெண் தேவை

அரச உத்தியோகம் பார்க்கும் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய 35 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை.
சம்பளம் ரூபா 10, 000/= தரப்படும்.
தொடர்பு:- 0777062493

## DOHA QTAR இல் இருந்து கொண்டு வரப்பட்ட பொருள்கள் விற்பனைக்கு உண்டு

LCD TV 32+ வாள் பிறேம்
மக்றோ அவன்
STAR றிசீவர்
வோசிங் மெசின் LG 5 ½ KG
PANASONIC SAT 11000W
குளிர்சாதனப் பெட்டி LG

தொடர்பு
0717264461
0779932919


# மரண அறிவித்தல்

## தம்பிஜயா ஸ்ரீராகவன் (கனடா)



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா ஸ்ரீராகவன் நேற்று (08.02.2013) வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற தம்பிஐயா மற்றும் பூமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுந்தரம் மற்றும் சொர்ணம் (கனடா) தம்பதியரின் மருமகனும், சுமித்திராவின் (கனடா) அன்புக் கணவரும், சுஜானி, தீனா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஸ்ரீரங்கன் மற்றும் ஸ்ரீறஞ்சன் (ஆஸ்திரேலியா), ஸ்ரீறஜினி (கோப்பாய்), ஸ்ரீரவீந்திரன்(ஈராக்), ஸ்ரீராகுலன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோரனும், கேதீஸ்வரனின் (டோகா) மைத்துனரும், ஸ்ரீரமணன் (இந்தியா), ஸ்ரீசங்கர், ஸ்ரீரஜீவன் (கோப்பாய்), Dr. பாலமுரளி (யா/போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), தபேந்திரன் (அமெரிக்கா) ஆகியோரின் சித்தப்பாவும், Dr. வேணுகோபன் (வவுனியா, போதனா வைத்தியசாலை), சஜனி (கோப்பாய்), சாளினி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் ரொறொண்டோ (கனடாவில்) எதிர்வரும் (12.02.2013) செவ்வாய்க்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கோப்பாய் மத்தி, கோப்பாய்.**
**தொடர்பு:021 223 0028,**
**0014164382972, 001 6479212 364**

தகவல்:-
கேதீஸ்வரன் (மைத்துனர்)

(சி/6304)(2-6.7)

# சமூக தொண்டனுக்கு தலை நகரில் கௌரவம்



## கலாநிதி நாகலிங்கம் தனேந்திரம்

யாழ். மாநகர முதல் முதல்வரை உருவாக்கிய கொட்டடி மண்ணிலே பிறந்து சமயப் பணி, சமூகப் பணி மற்றும் தொண்டுப் பணிகளில் மக்களாய் மக்களுடன் நின்று செயலாற்றி வருபவரும் யாழ். குடாநாட்டில் அமைந்துள்ள பல பொது அமைப்புகளில் தன்னை அங்கத்துவப்படுத்தி அதன் மூலம் மக்கள் சேவையே பெரிதென்று மதித்து செயற்பட்டு அகில இலங்கைக்குமான சமாதான நீதிவானாகி, யாழ். பிரதேச செயலக மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத் தலைவராய் கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராகவும் சனசமூக நிலையத்தின் உப தலைவராகவும் வில்லூன்றி இந்து மயான பரிபாலன சபைத் தலைவராகவும் சமாதான நீதிவான்களின், மனித உரிமைகள் குழுவின் யாழ். நகர பிரதிநிதியுமான கலாநிதி நாகலிங்கம் தனேந்திரம் அவர்களின் சேவையை பாராட்டும் முகமாக அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் இவருக்கு உன்னத விருதான **சாமசிறி தேச கீர்த்தி** எனும் விருதினை தலைநகர் நகர மண்டபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் திருவாளர் M.H.M அஸ்வர் அவர்களால் பொன்னாடை போர்த்தி விருதினை பெற்றமையை இட்டு உள்ளம் மகிழ்வதோடு இவரது பொதுப்பணி மேலும் வலுப்பெற எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிக்க வேண்டுமென்று வேண்டி நிற்கும்!

*திரு.கோ.றமேஷ் குடும்பத்தினர் (சுவிஸ்)*
*பா.ஜெயபாலன்,*
*பா.கீர்த்தன்*
*கி.ஜெயசுதா*
} குடும்பத்தினர் இத்தாலி
*பா.சிவபாலன் குடும்பத்தினர் )*
*நோர்வே)*

# மானிப்பாய் பரிஷ் அணியை பந்தாடியது மூளாய் விக்ரோறி

## பரபரப்பான ஆட்டத்தில் 'த்ரில்' வெற்றி

**பரிஷ் அணி 24.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 140 ஓட்டங்களைப்பெற்றது. இதனால் விக்ரோறி அணி இரண்டு ஓட்டங்களால் வெற்றியீட்டியது.**

யாழ்ப்பாணம்,பெப்.9

மானிப்பாய் பரிஷ் அணிக்கெதிரான சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் 2 ஓட்டங்களால் 'த்ரில்' வெற்றியீட்டியது மூளாய் விக்ரோறி அணி.

மூளாய் விக்ரோறி அணிக்கும் மானிப்பாய் பரிஷ் அணிக்கும் இடையிலான 50 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி அண்மையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மூளாய் விக்ரோறி அணியின் தலைவர் சசிதரன் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

ஆனால் மானிப்பாய் பரிஷ் அணியினர் மிகவும் துல்லியமாகப் பந்து வீசி, விக்ரோறி அணி வீரர்களை திணறடித்தனர். வேகம் கொண்டு வரும் பரிஷ் அணியின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் மூளாய் விக்ரோறி அணியின் இலக்குகள் மளமளவென சரியத் தொடங்கின. விக்ரோறியின் துடுப்பாட்ட வீரர்கள் தேவையற்ற முறையில் அடித்தாட முற்பட்டு இலக்குகளை இழந்தனர். தொடர்ச்சியாக சீரான இடைவெளியில் இலக்குகளைப் பறிகொடுத்ததால் ஓட்டங்களைப் பெறுவதிலும் அந்த அணி நெருக்கடியை எதிர்கொண்டது. மிகவும் சொற்ப ஓட்டங்களுக்குள் விக்ரோறி அணி சுருண்டுவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் நான்காவது இலக்குக்காக இணைந்து கொண்ட சேந்தரன்-செந்தூரன் இணை பொறுப்புடன் விளையாடி அணியை சரிவிலிருந்து மீட்டெடுக்கப் போராடியது. இருவரினதும் இணைப்பாட்டம் விக்ரோறி அணிக்கு சற்று நம்பிக்கை ஊட்டியது.

இறுதியில் விக்ரோறி அணி 44.4 பந்துப்பரிமாற்றங்களில் தமது சகல இலக்குகளையும் இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் விக்ரோறி அணி சார்பில் செந்தூரன் 28 ஓட்டங்களை யும், சேந்தரன் 16 ஓட்டங்களையும், சசிதரன் 10 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் மானிப்பாய் பரிஷ் அணி சார்பாக கரிகரன் 4 இலக்குகளையும் மற்றும் நிதர்சன், கோபிதாசன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

143 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாட களமிறங்கியது மானிப்பாய் பரிஷ் அணி. ஆயினும் பந்து வீச்சில் பரிஷ் அணிக்கு எந்த விதத்திலும் தாம் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிரூபித்தனர் விக்ரோறி பந்து வீச்சாளர்கள். அவர்களின் சிறப்பான பந்துவீச்சால் ஆரம் பத்திலிருந்தே தொடர்ச்சியாக இலக்குகளை இழக்கத் தொடங்கியது மானிப்பாய் பரிஷ் அணி.

எனினும் இலக்கு இழப்பை தடுத்து நிலைத்து நின்றாட முயன்ற பரிஷ் வீரர்களை சுரேந்தரும், தனுஜனும் கூட்டணி அமைத்து வெளியேற்றினர்.

எனினும் வெற்றிக்கு தேவையான ஓட்டச் சராசரியைத் தொடர்ந்து பேணியது மானிப்பாய் பரிஷ் அணி. இலக்குகளை இழந்தபோது அந்த அணி ஓட்டங்களை குவித்துக் கொண்டிருந்தது.

25 ஆவது பந்துப்பரிமாற்றம். மானிப்பாய் பரிஷ் வெற்றி பெற 3 ஓட்டங்கள் தேவை. கைவசம் 25 பந்துப்பரிமாற்றங்களும் ஒரு இலக்கும் இருந்தன. அந்தப் பந்துப்பரிமாற்றத்தை வீசி வந்தார் விக்ரோறி அணியின் சுரேந்தர். முதல் பந்தில் ஓட்டம் எதுவும் பெறப்படவில்லை. இரண்டாவது பந்து வீசப்பட்டது. அதை எல்லைக் கோட்டுக்கு விரட்டி வெற்றியை உறுதிப்படுத்த முனைந்தார் பரிஷ் அணி வீரர். ஆனால் அவரது கணிப்புக்கு மாறாக சுரேந்தரின் பந்து இலக்கை நேரடியாகத் தாக்கி பரிஷ் அணியின் வெற்றிக் கனவை சிதறடித்தது.

இறுதியில் மானிப்பாய் பரிஷ் அணி 24.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 140 ஓட்டங்களைப்பெற்றது. இதனால் விக்ரோறி அணி இரண்டு ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

துடுப்பாட்டத்தில் மானிப்பாய் பரிஷ் அணியைச் சேர்ந்த குகப்பிரசாத் 22 ஓட்டங்களையும், கரிகரன் 19 ஓட்டங்களையும், விநோத் 16 ஓட்டங்களையும் பெற்ற னர்.

பந்து வீச்சில் மூளாய் விக்ரோறி அணி சார்பாக சுரேந்தர் 4 இலக்குகளையும், தனுஜன் 3 இலக்குகளையும், விபுலன் ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

(ந-23)

# வசாவிளான் மத்திய மகா வித்தியாலய வீதியோட்ட, சைக்கிளோட்ட முடிவுகள்



வீதியோட்டத்தில் வென்ற ஆண்கள்



சைக்கிளோட்டத்தில் வென்ற பெண்கள்

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு ஆண்களுக்கு வீதியோட்டமும், பெண்களுக்கு சைக்கிளோட்டப் போட்டியும் கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்டன. இவற்றில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு-

**வீதியோட்டத்தில் வென்றோர் (ஆண்கள்)**

முதலாமிடம்-உதயரஞ்சன் தனுசன்,

2ஆம் இடம்- கலாமோகன் விதுசன்

3ஆம் இடம்- கமலேஸ்வரன் கரன்

4ஆம் இடம்- முத்துலிங்கம் வாகீசன்

5 ஆம் இடம்- சிவனேஸ்வரன் தயோசன்

6ஆம் இடம்- தில்லைநாதன் கபில்

7ஆம் இடம்- செல்லத்துரை கொலஸ்ரின்

8ஆம் இடம்- நிமலன் ஆர்த்திகன்

9ஆம் இடம் -ஞானசேகரன் யுட்லாஸ்

10ஆம் இடம்- இராசையா சாம்சன்

**சைக்கிளோட்டத்தில் வென்றோர்-**

முதலாமிடம்-ஜென்சிகா பாலசிங்கம்

2ஆம் இடம்-வித்தகி செல்வரத்தினம்

3ஆம் இடம்-நிவிதா சதீஸ்குமார்

4ஆம் இடம்- தனுஜா அம்பலவாணர்

5ஆம் இடம்- தெனாதிரு நாவுக்கரசு

6ஆம் இடம்-மயூரி அம்ப லவாணர்

7ஆம் இடம்-சரண்யா ரவிச்சந்திரன்

8ஆம் இடம்-லாவண்யா தியாகராசா

9ஆம் இடம்-துஸ்யந்தி இராமநாதன்

10ஆம் இடம்-ரோசிகா சிவகுமார் (ந)

## இன்றைய ஆட்டங்கள்

இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சிப் போட்டியில் இன்று சனிக்கிழமை மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

பிற்பகல் 3 மணி

மயிலிட்டி கண்ணகை விளையாட்டுக் கழகம்

எதிர்

சுதுமலை புவனேஸ்வரி விளையாட்டுக் கழகம்

★ ★ ★

பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கீர்த்திகன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக கொக்குவில் இந்துக் கல்லூரியால் நடத்தப்படும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

காலை 7.30 மணி

வேம்படி மகளிர் கல்லூரி அணி

எதிர்

திருக்குடும்ப கன்னியர் மட அணி

பி.ப.3 மணி

உடுவில் மகளிர் கல்லூரி அணி

எதிர்

யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி.

★★★

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் காலிறுதியாட்டங்கள் இன்று சனிக்கிழமை வவுனியா நிறுவர் பூங்கா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளன. இதில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

★ நியூமைட் விளையாட்டுக்கழகம்

எதிர்

அல்ஜிஜீரா விளையாட்டுக் கழகம்.

★ விபுலானந்தா விளையாட்டுக் கழகம்

எதிர்

யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம்.

★ ஈகிள் விளையாட்டுக்கழகம்

எதிர்

மருதநிலா விளையாட்டுக் கழகம்.

★ நியூபேட்ஸ் விளையாட்டுக்கழகம்

எதிர்

நியூலைன்ஸ் விளையாட்டுக் கழகம்.

★★★

கரவெட்டி பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கிரிக்கெட் போட்டி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்திலும், ஆண்களுக்கான பப்பிலே போட்டி மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்திலும் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளன.

★★★

கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கிரிக்கெட் போட்டி இன்றும், நாளையும் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

★★★

வடக்கு, கிழக்கு பிராந்திய ஜனசக்தி ஆயுள் பிரிவினருக்கான இடையிலான நட்பு ரீதியிலான மென்பந்து கிரிக்கெட் போட்டி இன்று சனிக்கிழமை மானிப்பாய் மெமோறியல் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிராந்திய அணிகள் பங்குபற்றவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் வடக்கு, கிழக்கு பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் அன்ரன் ஜோசப் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ந-23-228)

# கீர்த்திகன் வெற்றிக்கிண்ண கூடைப்பந்து முடிவுகள் சில

யாழ்ப்பாணம்,பெப்.9

பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கீர்த்திகன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக கொக்குவில் இந்துக் கல்லூரியால் நடத்தப்படும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த திங்கட் கிழமை இடம் பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

முதலில் இடம் பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ்.மத்திய கல்லூரி அணி 58:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம் பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி 39:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் வாகை சூடியது.

மூன்றாவதாக இடம் பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் திருக்குடும்ப கன்னியர் மட அணியை எதிர்த்து இராமநாதன் கல்லூரி அணி மோதிக் கொண் டது.

இதில் இராமநாதன் கல்லூரி அணி 32:30 என்ற புள்ளிகள் அடிப்படையில் திருக்குடும்ப கன்னியர் மட அணியைத் தோற்கடித்தது. (ந-23)

# இலங்கை அணி தோல்வி

இந்தியாவில் இடம்பெற்றுவரும் மகளிர் உலகக்கிண்ணப் போட்டிகளின் சுப்பர்-6 சுற்றுத்தொடரின் போட்டியொன்றில் இலங்கை அணி நியூஸிலாந்திடம் தோல்வியடைந்துள்ளது.



மும்பையில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 42 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 103 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

ஒரு கட்டத்தில் ஓட்டத்தைப் பெற்றிருந்த வேளை தனது முதலாவது இலக்கை இழந்த இலங்கை அணி, தொடர்ந்தும் இலக்குகளை இழந்து தடுமாறியது. அதன் பின்னர் இலங்கை அணி ஒரு கட்டத்தில் 39 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்து 4 இலக்குகளை இழந்து 61 ஓட்டங்களுடன் காணப்பட்ட போதிலும், அதன் பின்னர் இலக்குகள் தொடர்ச்சியாக இழக்கப்பட்டன.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக டிலானி மனோதரா 70 பந்துகளில் 34 ஓட்டங்களையும், தீபிகா ரசங்கிக்கா 17 பந்துகளில் 20 ஓட்டங்களையும் சண்டமல்லி டொலவட்ட 60 பந்துகளில் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.



இலங்கையின் அண்மைக்கால நட்சத்திரமான இஷனி கௌஷல்யா 2 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் 'ரன் அவுட்' முறையில் ஆட்டமிழந்தார். பந்துவீச்சில் நியூஸிலாந்து அணி சார்பாக லீ தகுகு 4 இலக்குகளையும், சியன் றக் 3 இலக்குகளையும் ஃப்ரான்ஸெஸ் மக்கே 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

104 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 23 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

முதலாவது இலக்குக்காக 71 ஓட்டங்கள் பகிரப்பட நியூஸிலாந்தின் வெற்றி இலகுவாக்கப்பட்டது.

துடுப்பாட்டத்தில் நியூஸிலாந்து அணி சார்பாக ஃப்ரான்ஸெஸ் மக்கே 64 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 39 ஓட்டங்களையும் சுசி பேட்ஸ் 41 பந்துகளில் 37 ஓட்டங்களையும் சோபி டெவைன் 30 பந்துகளில் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை சார்பாக 2 இலக்குகளையும் இனோக்கா ரணவீர வீழ்த்தினார். இந்தப் போட்டியின் நாயகியாக லீ தகுகு தெரிவானார். (ந)

## இலங்கை டெஸ்ட் தொடரில் ஷகிப் பங்குகொள்வாரா?

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பங்களாதேஷ் அணிக்கும் இலங்கை அணிக்குமிடையிலான சுற்றுத்தொடரின் டெஸ்ட் போட்டிகளில் பங்களாதேஷ் அணியின் சகலதுறை வீரர் ஷகிப் அல் ஹசன் பங்குகொள்வது சந்தேகமென அறிவிக்கப்பட்டுள்ளது. அதிகமாக ஓடுதல் போன்ற காரணங்களுக்காக ஏற்படும் வலும் உபாதை ஷகிப் அல் ஹசனுக்கு ஏற்பட்டுள்ளதன் காரணமாகவே அவர் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றுவது குறித்த சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

அவருக்கு ஏற்பட்டுள்ள உபாதை காரணமாக அவர் போட்டிகளில் பங்குபற்றுவதைத் தற்போதைய நிலையில் குறைக்க வேண்டிக் காணப்படுவதால் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவர் பங்குபற்றுவதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அவருக்கு மேற்கொள்ளப்பட்ட ஸ்கான் பரிசோதனைகளில் அவருக்கு மிகப்பெரியளவில் உபாதை ஏற்பட்டிருக்கவில்லையெனவும் அவரது உபாதை கட்டுப்பாடான அளவில் போட்டிகளில் பங்குபற்றுகை, உடற்பயிற்சிகள் ஆகியனவற்றுடன் கட்டுப்படுத்தப்படலாமெனஅறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள பங்களாதேஷ் அணி 2 டெஸ்ட் போட்டிகளிலும் 3 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் ஒரு 20/20 சர்வதேசப் போட்டியிலும் பங்குபெறவுள்ளது. முதலாவது டெஸ்ட் போட்டி மார்ச் 8 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)


### உடன் தேவை

ஊர்ச் சேவல் 1 KG500/-, ஊர்ப்பேடு 1 KG 400/- மற்றும் விறாத்துக் குஞ்சு என்பன உடன் தேவை.
158/4, தாசன் பாம், கோவில் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே.:-0775071817

### வீடு வாடகைக்கு உண்டு

திருநெல்வேலியில் சகல
வசதியும் கொண்ட வீடு
வாடகைக்கு
உண்டு.(3றூம்,2கோல்,ஒரு கிச்சின்)
தொடர்பு:
0773098323,0779032868
(29294)(3.6.7)

### தவறிவிட்டது

வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, மா. சரவணை என்பவருடைய தங்கச் சங்கிலி சீனியர் லேனுக்கும் இராமநாதன் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 0776429073

### ரீ மேக்கர் தேவை

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் உள்ள தேநீரகத்துக்கு ரீ மேக்கர் தேவை
தொடர்பு:
0776147151

Calling All Maths
& Science Students

Diploma in Pharmacy
Leading To Bsc Pharmacy
2 Years Course
CMCC Syllabus
Full Practical
Addmissions Open
Monthly Rs.3000/= ONLY
*Initial Payment Rs.20000/

Visalam Wide and Beyond
Visalam MINDS
127/1 Temple Road Jaffna
021 221 9695 075 979 9695
Email: admin@visalamholdings.com


### போயிட்டி இளவாலை புனித லூர்து அன்னை
### வருடாந்த திருவிழா

போயிட்டி புனிதலூர்து அன்னை பங்குத்தந்தை அருட்திரு.யே.அ.அருள்தாசன் தலைமையில் தினமும் மாலை 5.30 மணிக்கு நவநாள் வழிபாடுகள் திருச்செபமாலையுடன் நடைபெற்று வருவதுடன் அருட்திரு.ஸ்ரனி அன்ரனி அ.ம.தி அவர்களால் மறையுரையும் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டு வருகிறது. இறுதிநாளாகிய எதிர்வரும் 10ஆம் திகதி (நாளை) ஞாயிறு மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையும் அதனைத்தொடர்ந்து திருப்பலியும், திவ்விய நற்கருணை ஆராதனையும் நடைபெறும். 11ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.45 மணிக்கு அருட்தந்தை பிலிப் றஞ்சனகுமார் அ.ம.தி தலைமையில் திருநாள் கூட்டுப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு அதனைத்தொடர்ந்து புனித லூர்து அன்னையின் திருச்சொருவப்பவனியும் இடம்பெறும்.

நிர்வாகம்.

(29343(8.14.16)

### மரண அறிவித்தல்
### சிங்கராசா தங்கம்மா



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராசா தங்கம்மா நேற்று (08.02.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசேப் செல்லம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிங்கராசாவின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி புனித மிக்கேல் ஆலயத்தில் இன்று (09.02.2013) சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

### கண்ணீர் அஞ்சலி



### கிருஷ்ணபிள்ளை பிறேமதாஸ்

(முகாமைத்துவ உதவியாளர், நிதிப்பிரிவு, வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி)

எமது வித்தியாலயத்தின் கணித பாட ஆசிரியை திருமதி. வளர்மதி பிறேமதாசின் அன்புக் கணவர் கி. பிறேமதாஸ் திடீர் மரணமான செய்தி கேட்டு அதிர்ச்சியடைவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்திக்குப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

தகவல்
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

யா/ பருத்தித்துறை
சித்திவிநாயகர் வித்தியாலயம்.

### ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
இராசரத்தினம்
புஸ்பராசா (வசந்தன்)
மண்ணில்: 13-04-1978
விண்ணில்: 09.02.2007

ஆண்டுகள் ஆறு ஆனதுவோ?
ஆறவில்லை எம் துயரம்
மீண்டும் எம்மிடத்தில்
தோன்றிட வேண்டும்
வரம் வேண்டி ஏங்குகின்றோம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.
பிலிப் ஒழுங்கை, சந்திரபுரம்,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.
(சி:2900)(2-6-7)

### மணி விழா நாயகரை வாழ்த்துகிறோம்!

கல்விப் புலத்தில் 35 வருடங்கள் சேவையாற்றி யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் இறுதியாக 30 வருடங்கள் ஆசிரியராக பல்வேறு வகிபாகங்களில் கடமையாற்றி 60 வயதைப் பூர்த்தியாக்கி ஓய்வு பெற்று கடந்த 06.02.2013 பிரியாவிடை பெற்ற எமது தமிழ் ஆசானாகிய



சித்தாந்த பண்டிதர்
நயினை திரு. பாலசுந்தரம் காசிநாதன்
(Sp.Ted.Tamil.Dip in Ed. B.A(Cey).M.Ed,M.A (Tamil), S.L.T.S-1)

அவர்களின் சேவையைப் பாராட்டுவதோடு இனிவரும் காலங்களில் சமூகத்தில் கால் பதித்துள்ள பணிகளில் சிறப்புடன் பணியாற்றவும் சீரும் சிறப்புமாக நீடுழி காலம் இன்பமாக வாழ்ந்திடவும் இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

கல்வி கற்ற மாணவர்கள்

# ஆஸி. அபார வெற்றி





ஆஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும், ஆஸ்திரேலியா அணிக்கும் இடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் 4 ஆவது போட்டியில் ஆஸ்திரேலியா அணி வெற்றிபெற்றுள்ளது. சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 49.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்பத்திலிருந்து இலக்குகளை இழந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி, ஒரு கட்டத்தில் 4 இலக்குகளை இழந்து 22 ஓட்டங்களையும், 6 இலக்குகளை இழந்து 55 ஓட்டங்களையும், 8 இலக்குகளை இழந்து 133 ஓட்டங்களையும் பெற்று தடுமாறியது. ஆனால் கெரான் பொலார்ட் சிறப்பாக ஆடி 220 ஓட்டங்கள் பெறுவதை உறுதி செய்தார்.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக கெரான் பொலார்ட் 136 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 109 ஓட்டங்களையும், டெரன் சமி 42 பந்துகளில் 25 ஓட்டங்களையும், சுனில் நரைன் 22 பந்துகளில் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலியா அணி சார்பாக மிற்சல் ஜோன்சன், பென் கட்டிங் ஆகியோர் தலா 3 இலக்குகளையும், கிளின்ட் மக்காய், கிளென் மக்ஸ்வெல், ஜேம்ஸ் ஃபோள்க்னர் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

221 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலியா அணி 44.5 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. முதலாவது இலக்குக்காக 53 ஓட்டங்கள் பகிரப்பட்டதோடு, தொடர்ந்து வந்த வீரர்களும் சிறப்பாக ஆடினர்.

துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலியா அணி சார்பாக ஷேன் வொட்சன் 84 பந்துகளில் 76 ஓட்டங்களையும், மைக்கல் கிளார்க் 65 பந்துகளில் 37 ஓட்டங்களையும், அடம் வோக்ஸ் 39 பந்துகளில் 28 ஓட்டங்களையும், ஆரோன் ஃபின்ச் 30 பந்துகளில் 25 ஓட்டங்களையும், பிலிப் ஹியூஸ் 44 பந்துகளில் 23 ஓட்டங்களையும் கைப்பற்றினர். பந்துவீச்சில் மேற்கிந்திய தீவுகள் அணி சார்பாக ரீனோ பெஸ்ட், சுனில் நரைன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், அன்ட்ரே ரசல் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் நாயகனாக கெரான் பொலார்ட் தெரிவானார்.



(அ)


## மரண அறிவித்தல்

### சிவராசா சிந்துஜன்



பூநாறி மடத்தினை வசிப்பிடமாகக் கொண்ட சிவராசா சிந்துஜன் நேற்று (08.02.2013) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூநாறி மடத்தடி,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

## வேலை வாய்ப்பு



கொழும்பில் இயங்கி வரும் தனியார் கட்டட நிறுவனத்துக்கு சுறுசுறுப்பானதும் சகல வேலைகளும் (Plumbing, Welding, Aluminum fitting, Painting, A/C, Mason) செய்யக்கூடியதுமான ஆள்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

மாத வருமானம் 35000/-ற்கு மேல்

தொடர்புக்கு: 0777005137

**IDM Nations Campus**
Jaffna Branch
Managed by Aharam Solution (Pvt) Ltd
#216, Navalar Road, Jaffna

புதிய பிரிவுகள் ஆரம்பம்

Weekday batch : Wednesday (13th Feb) 9.30 am
Weekend batch : Saturday (16th Feb) 9.30 am

**AutoCAD**
**2D and 3D**
By Experienced Lecturer
மற்றும் சிறுவர்களுக்கான
**e - KIDS & Teens**
(Flexible time)

Tel : 021 222 9901
Mobile : 0775632056

கிளி/பாரதி கல்லூரி,
கிளிநொச்சி.
(வலயக்கல்வி பணிமனை முன்பாக)

(G.S) கிராம சேவகர் போட்டிப்பரீட்சை வகுப்பு

ஆரம்பம்
10.02.2013 1.30 P.M.
ஞாயிறு

யாழ்.பிரபல ஆசிரியர்
By. தவசேகர்

G.A.Q-B.A புதிய பிரிவுகள் நடைபெறுகின்றன.
T.P.0775483470

**CIMA -May-13**

தனிப்பட்ட மற்றும் குழுக்களுக்கான வகுப்புக்கள்

PO/PM/EO/EM

Guaranteed

இலகுவான, விரிவான மற்றும் துல்லியமான கற்றல் முறை. Past papers from 2010 to 2013 covered

Contact: P.Ragasuthan(Passed finalyst of CIMA) 0772089588 / prsuthan@yahoo.com

## தேவை

தமிழ்,ஆங்கிலம் Typing செய்யக்கூடிய பகுதிநேர அல்லது முழுநேரம் கடமையாற்றக் கூடியவர்கள் தேவை.(பல்கலைக்கழகம் முன்பாக)
தொடர்பு:0779522444

## ST. ANTONY'Sல் மலிவு விலையில்

3G Tablet PC (free skype) 1year warranty — 16,500/=

3G PHONE (Free skype) 1year warranty — 14000/=

வெளிநாட்டில் உள்ளவர்களுடன் முகம் பார்த்துக் கதைக்க முடியும்.

187, K.K.S ROAD JAFFNA.
021 222 4865, 0750698608
(14ஆவது வருட சேவையில்)

## காணி விற்பனைக்கு

அச்சுவேலியில் இருந்து இராசவீதியில் 200 மீற்றர் தூரத்தில் றோட்டுக்கு வடக்குப்பக்கமாக 2ஆம் காணி 4 பரப்பு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு- 0775005223

(29052)(3,6,7)

## வெளிநாட்டு Student Visa தொடர்பான இலவச விளக்கக் கருத்தரங்கு

A/L, O/L சித்தியடைந்த மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து பயன் பெறலாம்.

விடயதானங்கள்

- வெளிநாட்டுக் கல்விக்குத் தேவையானவை எவை?
- பிற நாட்டுக் கல்வி நிறுவனங்களின் தரம் ஸ்திரத்தன்மை
- கல்வி கற்றுக் கொண்டே உழைக்க வழி என்ன?
- நாடுகள் பற்றிய அலசல்
- அவசியமான வினாக்களிற்கு உரிய பதில்கள்

வளவாளர்:- வடமராட்சியின் மைந்தன் திரு.ஜே. ரெட் B.SC (Hons) University of West England.

இடம்:- திசைகாட்டி குழுமத்தலைமைக்காரியாலய கேட்போர் கூடம்.

காலம்:- 10.02.2013 ஞாயிறு மு.ப 10 மணி

முற்பதிவு 0212219016, 0721869299 என்ற தொலைபேசி மூலம் முற்பதிவு செய்யவும்.



**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**
**175, பருத்தித்துறை வீதி,**
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**

## A/L PHYSICS
மீள் பரீட்சார்த்திகளுக்கு
**DAY CLASS**

- துரித மீட்டல்
- வினா விடை

என்பன விரைவாக முடிக்கப்படும்.
ஆரம்பம் 10/2/2013 ஞாயிறு 10.00AM
personal class,Group class ஆகவும் எடுக்கலாம்

- A/L 2015 அடிப்படை
- A/L 2014 அலைகளும் அதிர்வுகளும்
- A/L 2013 சடப்பொருள்களின் இயல்பு

என்பன நடை பெறுகின்றன .

Mr.M. ஸ்பெல்மன் BSc(சண்டிக்குளி)
இடம் 10/10, மத்தியூஸ் வீதி யாழ்ப்பாணம்
(பெரிய கோயில் அருகில் )
T.P.No.0776116724

(29283)(3.6.7)

## காணிகள் விற்பனைக்கு

- சாவகச்சேரி, நகரசபை எல்லைக்குள் விளைவேலி துர்க்கை அம்மன் கோயிலுக்கு முன்பாக நல்ல சூழலில் அமைந்த தென்னை மரங்களுடன் கூடிய குடியிருப்புக்காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவோ, முழுமையாகவோ விற்கப்படும்.
- சாவகச்சேரி கைதடி நுணாவில் கண்டி வீதிக்கு அண்மையில் குடியிருப்பாளருக்கு ஏற்ற காணி நல்ல தண்ணீர்க்கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

(தரகர் தேவையில்லை)

தொடர்பு: 0776055559
0774236113

(18036)(3.6.7)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.